தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

# விசுவாசம்



# விசுவாசம்

## 1. விசுவாசம் என்றால் என்ன?

எபி 11:1 “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.”

1 யோவ 5:4 “தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.”

**E112 (P1):**

சுய சித்தத்தை வெறுத்து, இடுக்கமான பாதையில் செல்பவர்கள், தங்களுடைய முழு விருப்பத்தையும், சித்தத்தையும் பரலோகப்பிதாவின் முழு சித்தத்திற்கு ஒப்புவித்து, பூரண மனித இயல்பான விருப்பங்களையும், எதிர்நோக்குகளையும் நசுக்கி, முழுமையாக தேவனுடைய சித்தம் தங்களை ஆண்டுக்கொள்ளும்படி, அவருடைய பணிக்காக இந்தப் பூமிக்குரிய அனைத்து ஆசைகளையும் அடக்கி, தங்களையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு இவர்கள் மேற்கொள்ளும் போராட்டமே - தலைமையான போராட்டமாகும். இப்படிப்பட்ட சோதனைகளில் நம்முடைய தலைமை குரு வெற்றி பெற்றார். இதைபோலவே, அவருடைய சகோதரர்களும் இந்தப் போராட்டங்களில் ஜெயிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். “தன்னுடைய ஆவியை அடக்குகிறவன் (தேவனுடைய சித்தத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து) மதில் சூழ்ந்த பட்டணம் போலிருக்கிறான்” அதே நேரத்தில், தவறான விசுவாசத்தின் அடிப்படையில், உருவாகும் சிந்தனைகள் (ஆலயத்தின் உச்சியிலிருந்து குதிப்பது) மதியீனமான காரியங்களைத் தோற்றுவிக்கும். ஆகவே, சோதித்தறிந்து சரியான விசுவாசத்தோடு செயல்படுகிறவன் பாக்கியவான். தேவன் மேல் வைக்கும் விசுவாசம் குருட்டாட்டமான எதையும் எளிதில் நம்பக்கூடிய அல்லது கட்டுக்கடங்காத அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டிராமல், தேவன் கொடுத்த அற்புதமான வாக்குத்தத்தங்கள் மேல் வைக்கும் உறுதியான நம்பிக்கையாகும். இப்படிப்பட்ட நம்பிக்கை இந்த உலகத்தின் பல்வேறு முயற்சிகளையும், மாம்சத்தையும், சாத்தானையும், எதிர்த்து ஜெயிக்கவும் அவன் கவனத்தை திசை திருப்பவும் அதிகமாக நம்மை ஸ்திரப்படுத்தவும் உதவிசெய்கிறது. மேலும் விசுவாசத்தின் சரியான பாதையில் நடத்தி, தெய்வீக வார்த்தைகளுக்கு தேவனுடைய விருப்பத்தின்படி கீழ்ப்படிய நமக்கு உதவி செய்கிறது.

**F689** (முதல் வரி) - நம்முடைய சிந்தையில் தேவனையும் அவருடைய வாக்குறுதிகளையும் செயல் முறைப்படுத்தி, அதை பயிற்சி செய்வதே விசுவாசமாகும்.

## 2. விசுவாசத்தின் அடிப்படையான இரண்டு உட்பொருட்கள் என்ன?

**R1822(col. 1P 6,7):**

அறிவாற்றல் சார்ந்த உறுதி மற்றும் நம்பிக்கைக்குரிய இருதயம் ஆகிய இரண்டு முக்கியமான உட்பொருட்களை விசுவாசம் கொண்டிருக்கிறது. முதலில் சொல்லப்பட்ட விசுவாசம் தனித்து பிரிக்கப்பட்ட ஒரு நிலையையும், இரண்டாவது, உறுதிப்பட்ட விசுவாசத்தைப்பற்றி சொல்லப்படுகிறது. “நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.” (ரோமர் 10:10) இவ்வாறாக நம்முடைய விசவாசத்திற்கு இருதயத்தின் சிந்தையும், தலையில் உள்ள அறிவும்

முபமையாகத் தேவைப்படுகிறது. ஏனெனில் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" (எபி 11:6) என்று வாசிக்கிறோம். அநேகருக்கு விசுவாசம் இருந்தாலும், அது ஒரே ஒரு உட்பொருளை உடையதாகவே இருக்கிறது. சிலரிடத்தில் உணர்ச்சிவசத்தால் செயல்படும் விசுவாசமும், சிலரிடத்தில் அறிவினால் ஏற்படும் விசுவாசமும் காணப்படுகிறது. ஆனால் இவைகளினால் பொறி பறக்கும் கடுங்-சோதனைகளைத் தாக்குப்பிடிக்க முடியாது. ஒருவேளை இவைகள் இணைந்து செயல்பட்டால், இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது அவருக்கு மகிமையாக அவரை புகழக்கூடியவர்களாகக் காணப்படுவார்கள்.

திவ்விய சத்தியத்தில் அடிப்படைக் கொள்கையை ஒரு சுருக்கமாகப் பார்த்தால் - தனிப்பட்ட முறையில் தனித்து வாழ்ந்துவரும் ஞானமுள்ள தேவன், சகல காரியங்களின் சிருஷ்டிகரும், சகலத்தையும் தாங்குபவராக, தன்னுடைய இரட்சிப்பின் திட்டத்தை தன்னுடைய ஒரே பேறான குமாரன் - இயேசு கிறிஸ்துவின் மூலம் செயல்படுத்தினார். இதுவே விசுவாசத்தின் அடித்தளமாக இருக்கிறது. அதே நேரத்தில் நம்முடைய தந்தையாக, நம்மை உண்டாக்கினவரும், நம்மிடமிருந்து எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அன்பை செலுத்தினவரும், நம்மை அழைத்தவருமாகிய அவருடைய வாக்குத்தத்தங்கள் மேல் வைக்கப்படும் உறுதியான நம்பிக்கையே இந்த விசுவாசத்தின் அடிப்படையின்மேல் கட்டப்படும் கட்டுமானமாகும்.

## 3. எதையும் போதுமான அளவு ஆதாரங்கள் இன்றி எளிதில் நம்பக்கூடிய பாரம்பரியங்கள் மற்றும் விசுவாசம் எவ்வகையில் வேறுபடுகிறது?

**F689 (P 1) :-**

இந்த இரண்டு காரியங்களுக்கு இடையில் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தை நிச்சயமாக நாம் அறிந்துகொள்ள வேண்டும். மில்லியன்கணக்கான ஜனங்கள் நம்பக்கூடியவைகளுக்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல், ஆயிரக்கணக்கான காரியங்களை நம்பி, அநேக பாரம்பரிய மூட நம்பிக்கைகளில் மூழ்கியிருக்கிறார்கள். மேலும், இந்த மண்ணுலகில், இவர்கள் நம்பத் தகுதியில்லாத காரியங்களையும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இதில் மில்லியன்கணக்கான ஜனங்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை தரித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையற்ற மூட நம்பிக்கைகள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டு, தவிர்க்கப்பட்டு மேற்கொள்ளப்படவேண்டும். உண்மையான விசுவாசம் ஊக்குவிக்கப்பட்டு, வளர்ந்து, பலப்படுத்தப்பட்டு விருத்தியடையவேண்டும். தேவன் மேல் வைக்கும் விசுவாசமே - மெய்யான விசுவாசமும், நம்பிக்கையாகவும் இருக்கிறது. இதன் அடிப்படையில் மட்டுமே தெய்வீக வாக்குத்தத்தங்கள் கட்டப்பட முடியும். மாறாக, மனித பழக்கவழக்கத்தின் அடிப்படையிலோ, தத்துவ ஞானத்திலோ, கற்பனையிலோ இவைகள் கட்டப்படமுடியாது.

## 4. உண்மையான விசுவாசத்தின் முக்கியத்துவம் என்ன?

எபிரெயர் 11:6 "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்."

**F315 (P1):-**

முதல் கூற்றின் அடிப்படையில் - பொதுவாக நல்ல போதனைகள் அனைத்தும்

இழிவாய் எண்ணப்படும் நாட்களில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மேலும், இக்காலத்தில் அநேகர் கிரியைகள் மற்றும் நல்லொழுக்கமும், விசுவாசம் மற்றும் உபதேசத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கையில் எந்த விதமான மதிப்பையும் பெறுவதில்லை என்று கருதுகிறார்கள். இது தெய்வீக வார்த்தைக்கு அப்பாற்பட்டிருப்பதால், நாம் எவ்விதத்திலும் இதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனெனில், இதில் முதலாவது விசுவாசமும், அடுத்து கிரியைகளும் இடம் பெறுகிறது. நம்முடைய விசுவாசமே தேவனால் ஏற்றுகொள்ளப்படுகிறது, இந்தப் பலவீனமான மாம்சத்தின் அனுமதியில், நன்மையான விசுவாசம், நற்கிரியைகளை நம்மிடத்தில் பிறப்பிக்கும் என்று தேவன் எதிர்பார்த்து, அந்த விசுவாசத்தின்படியே அவர் நமக்கு பலனளிப்பார். சகல வசனங்களிலும், இதுவே விசுவாசத்தின் கோட்பாடாக எழுதப்பட்டிருக்கிறது. “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், “நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்” (1யோவான் 5:4) ஆகவே, ஒருவர் தேவன் மேல் உள்ள விசுவாசத்தையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் தன்னுடைய வாழ்க்கையில், கடைபிடிக்காமல் சரியான முறையில் மேற்கொள்ள (ஜெயிக்க) முடியாது. இதை செயல்படுத்த வேண்டுமானால், அவைகளை முதலில் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வாய்ப்புகள் மற்றும் விசுவாசத்தில் உறுதியான வளர்ச்சியானது, யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டங்களையும், மகத்தான விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்களையும் புரிந்துகொள்ள வழி வகுக்கும். இப்படியாக, போதனைகள் மற்றும் கட்டளைகளை அறிந்து கொள்வதினால் தேவனுடைய ஜனங்கள், உலக ஜனங்களைக் காட்டிலும், தேவனோடு தொடர்பு கொள்வதற்கான அறிவில் விருத்தியடைந்து மகிழ்வதற்காக மட்டுமல்ல இந்த அறிவின் நிமித்தம் அவர்களில் விசுவாசமும், நம்பிக்கையும், நடத்தையும் தேவனுக்குள்ளாக வளர உதவி செய்கிறது. “அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான் .” (1யோவான் 3:3) நாம் பார்த்த அனைத்து வாக்கியங்களுக்கும் இந்த வசனம் நேர்த்தியாகப் பொருந்துகிறது. ஒருவர் தன்னைத்தான் சுத்திகரித்து, தன் நடத்தையையும் சுத்திகரிக்க விரும்புகிறவர், அதில் வெற்றியடைய வேண்டும். வசனங்கள் குறிப்பிடுவதுப்போல அது இருதயத்தில் துவங்கி, வளர்ச்சியடைந்து, சுத்திகரிப்புக்காக பயன்பட்டு, வாக்குறுதிகளை நினைப்பூட்டவேண்டும். இதற்கு “கிறிஸ்தவ போதனைகளில் அறிவு” என்று பொருள்படுகிறது.

**F693(1):-**

விசுவாசத்தின் கண்கள் மற்றும் செவிகள், தெய்வீக வார்த்தைகளைக் காண்பதற்கும், கேட்பதற்கும் பயிற்சி பெற்றிருந்தால் மட்டுமே புதியசிருஷ்டிகள், வரக்கூடிய அளவற்ற மகிமையான பொக்கிஷத்தை ருசிக்க முடியும். ஒரு சராசரி மனிதனால் கூடாததும், ஒருவர் தன்னை உடன்படிக்கைக்குள் முழுமையாக அர்ப்பணிக்கும் வரையிலும்கூட இவைகள் புரிந்துகொள்ளப்படுவதில்லை. சிலர் விசுவாசத்தினால், தேவனோடு தொடர்பு வைத்து, நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்யும் லேவியர்களின், ஆராதனை அங்கீகரிக்கப்பட்டாலும், பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் செல்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பரிசுத்த ஸ்தலத்தின் மகிமையும், அதில் இருக்கும் விளக்குகள், அவைகளிலிருந்து பிரகாசிக்கும் வெளிச்சம், மேஜையின் மேல் உள்ள சமூகத்து அப்பங்கள், பொன்னான பலிபீடம் போன்றவைகளைப்பற்றிய அறிவு பெற்றிருந்தாலும், இவைகளைப் பயன்படுத்துவதற்கு ஆசாரியன் மட்டுமே அனுமதிக்கப்பட்டார்.

**R1719 (col. 2:4-6) :-**

நாம் பெற்றிருக்கும் விசுவாசம் சரியானதா? என்று ஆராய்ந்து அறிந்துகொள்வது மிக அவசியம். ஏனெனில், ஒருவேளை நம்முடைய விசுவாசம் தவறாக இருந்தால், மணல் மேல் கட்டிய கட்டிடம் போலவும், சரியான பாதையில் செல்லாமல், பாறைகளின் மேல் மோதும் கப்பலைப் போலவும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை அஸ்தமிக்கும். விசுவாசம், ரயில் இன்ஜினிலுள்ள நீராவியைப் போலிருக்கிறது. அதை நன்மை மற்றும் தீமைக்கென்றும் பயன்படுத்தலாம். இதற்காகவே நாம் சரியான விசுவாசம் கொண்டிருக்க வேண்டும்.

விசுவாசத்தின் இந்த முக்கியத்துவத்தினாலும், நன்மைக்காக அல்லது தீமைக்காக இயக்கும் வல்லமையாக இது செயல்படுவதினால், அப்போஸ்தலனாகிய பவுல் - தான் மனந்திரும்பியபின், சகோதரர் சரியான விசுவாசத்தில் நிலைத்திருக்க மிகவும் பிரயாசப்பட்டார். (1தெசலோ 3:2,5,6,7,10) ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, இதுவே உண்மை என்று நிரூபித்து, அசையாத நம்பிக்கையோடு சுவிசேஷத்தைப் பற்றிக்கொண்டு, கிறிஸ்துவில் வேரூன்றி, வளர்ச்சியடைந்து விசுவாசத்தை ஸ்தாபிக்க அவர் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொண்டார். "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல." (கொலோ 2:8, 1:23, 2:7) சபையின் விசுவாசம் மனித அறிவினால் நிலைத்திருக்கக்கூடாது என்றும் அது தேவனுடைய வல்லமையினால் உறுதி படவேண்டும் என்பதில் பவுல் மிகவும் கவனமுள்ளவராக இருந்தார். ஆகவே அவருடைய பிரசங்கங்களில் மதியீனமான கற்பனைகளையும் அல்லது தன்னைப் பின்பற்றவோ, அல்லது வேறெந்த மனிதனையோ அல்லது வேறெந்த புதிய கருத்துக்களையோ அவர்களுக்குப் போதியாமல், ஒரு தீர்க்கதரிசியாகவும், ஒரு அப்போஸ்தலனாகவும், அவருக்கு வெளிப்படுத்தப்பட்டக் காரியங்களை, பரிசுத்தமான வேதவசனங்களிலிருந்து மாத்திரம் பிரசங்கித்து, அதன் மூலமாக அனைவரையும் ஊக்குவித்து, கேட்ப்போரின் விசுவாசத்தைப் பலப்படுத்தினார் - 1கொரி 2:4,13, 2கொரி 12:1-7, கலா 1:11,12, 2பேது 3:15-16.

நாம் கிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும் - அதாவது தேவனுடைய வார்த்தைகளின் அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டதாகவும், ஆராய்ந்து நிரூபிக்கப்பட்டதும், இருதயத்திலும், சிந்தையிலும் ஆழமாகப் பதிந்திருப்பதினால் ஜீவனுக்குரிய வல்லமையை ஊக்குவிக்க இந்த விசுவாசம் ஸ்தாபிக்கவேண்டும். இப்படிப்பட்ட விசுவாசம், தேவனுடைய வல்லமை செயல்படவும், இந்த உலகம், மாமிசம் மற்றும் எதிராளியான பிசாசை எதிர்க்க தங்களுக்குள்ளே போதுமான விசுவாசம் இல்லை என்பதை வெளியரங்கமாக காட்டிக் கொள்பவர்கள் தேடும் வண்ணமாக இது இருப்பதில்லை. மேலும், மெய்யான விசுவாசம், புதிதான காரியங்களைத் தேடிச் செல்வதில்லை. மேலும், மனிதனுடைய தத்துவ ஞானத்தின் அடிப்படையில், தேவனுடைய வார்த்தைகளை எவ்வளவு திறமையாக சமாளிக்கிறார்கள் என்று எதிர்ப்பார்ப்பதும் இல்லை மற்றவர்கள் முன் அது பயப்படுவதுமில்லை.

## 5. விசுவாசத்திற்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன?

ரோமர் 10:17 "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."

**A13(P 1) :-**

தேவனுடைய நோக்கங்கள் வெளிப்படுத்திய காரியங்களை ஆராய்ந்து கற்றுக்கொள்வதைக் காட்டிலும் மேன்மையான பணி வேறொன்றுமில்லை - "இவைகளை உற்றுப்பார்க்க தேவ தூதர்களும் ஆசையாயிருக்கிறார்கள். "(1பேது 1:12) உண்மையில் தேவனுடைய ஞானம் வருங்கால தீர்க்கதரிசனங்களைக் குறித்தும், கடந்த காலத்தில் தேவனுடைய வார்த்தைகளை நிராகரித்து நிர்விசாரமாக வாழ்ந்த, "எந்த மனுஷனையும் இரட்சிக்க மத்தேயு 5 ஆம் அதிகாரம் இருக்கிறதே" என்று சொல்லும் மதியீனமான சில தேவ ஜனங்களைக் கண்டித்தக் காரியங்கள் மற்றும் நிகழ்காலத்தைப் பற்றியவைகளை அறிவிக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும், வருங்காலத்தில் சம்பவிக்கும் காரியங்களை அறிந்துகொள்வதிலுள்ள ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே தீர்க்க தரிசனங்கள் கொடுக்கப்படுவதில்லை. உடன்படிக்கை செய்த பிள்ளைகள் காலப்போக்கில் தேவனுடைய திட்டத்தை ஆழமாக அறிந்து கொள்வதற்காகவும், அதன் மூலமாக அந்தத் திட்டங்களை இம்மையிலும் , மறுமையிலும் செயலாற்ற ஊக்கமளிப்பதற்காகவும் இந்தத் தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்படுகிறது. இப்படியாக, அவர்கள் தேவனுடைய வேலைகளில் ஆர்வத்தோடு செயல்படும்பொது, ஒரு ஊழியக்காரரைப் போல் மாத்திரம் இல்லாமல், தேவனுடைய புத்திரராகவும், சுதந்திரவாளியாகவும், புரிந்துகொள்ளக்கூடிய ஆவியின் வல்லமையினால் நிரப்பப்படுவார்கள். இப்படிப்பட்ட அறிவின் வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ளும்பொது, அவைகள் இன்றைய சூழ்நிலைகளுக்குப் பாதகமாகவோ அல்லது எதிராகவோ இருக்கிறது. இதில் ஜாக்கிரதையாக செயல்பட்டு, விசுவாசத்தை உறுதிபடுத்திக்கொண்டு, பரிசுத்தப்படுவதற்கு நாம் சுத்திகரிக்கப்படவேண்டும்.

சாதாரணமாக மனிதர்களுடைய வெறும் கற்பனைகளை விட்டு திரும்பி, "வழக்காடுவோம் வாருங்கள்" (ஏசா 1:18) என்று தேவனுடைய அழைப்புக்கு இணங்கி வசனங்களைக் கவனமாக ஆராய்ச்சி செய்பவர்கள், பரலோக ஆசீர்வாதங்களைக் கண்டறிவார்கள். விசுவாசம் மற்றும் நீதிமானாக்கப்பட்ட நிலைமையிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடையாமல், தெளிவான சத்தியத்தைப் புரிந்துகொள்வது இயலாத காரியம் என்று நாம் மறுத்துவிடக்கூடாது. "நீதிமானுக்காக வெளிச்சமும் (சத்தியம்) விதைக்கப் பட்டிருக்கிறது." (சங் 97:11) என்று சங்கீதக்காரர் கூறுகிறார். ஏனெனில், தேவனுடைய பிள்ளைகளுக்கு, அவர்களுடைய பாதையிலிருந்து இருளை அகற்ற, பிரகாசிக்கும் வெளிச்சம் வீசும் விளக்கு கொடுக்கப்படுகிறது.

" உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் , என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." (சங் 119:105) ஆனால் "நீதியின் பாதைக்கு" இந்த வெளிச்சம் கொடுக்கப்படுகிறது. "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்." (நீதி 4:18) உண்மையில் ஒருவரும் நீதிமான் இல்லை, ஒருவராகிலும் இல்லை. (ரோமர் 3:10) ஆகவே இங்கு விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட நிலைமையில் இருப்போரைக் குறித்துப் பேசப்படுகிறது. இந்த ஒரு வாய்ப்பு பெற்றால் மட்டுமே அதிகமதிகமாகப் பிரகாசிக்கும் இந்தப் பாதையில் நடக்க சிறப்புரிமைப் பெறமுடியும். இந்தப் பாதையில் நடப்பதற்காகவும், இன்று வெளிப்படும் தேவனுடைய திட்டங்களை அறிந்துகொள்வதற்காக மட்டும் அல்லாமல், வரவிருக்கும் அனைத்துக் காரியங்களையும் அறிந்துகொள்வதற்காகவும் இது வாய்ப்பளிக்கிறது. ஒவ்வொரு விசுவாசிகளுடைய பாதைகளும் உண்மையில் பிரகாசமாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த வாக்கியம் விசேஷமாக, நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் இருப்போருக்கு

மிகச்சரியாகப் பொருந்துகிறது. கடந்த காலத்தில் வாழ்ந்த முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் பரிசுத்தவான்கள் அனைவரும் படிப்படியாக வெளிச்சம் அதிகரித்துக்கொண்டிருக்கும் இந்நாள்வரைக்கும் இந்தப் பாதையில் வெளிச்சம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் - அனைவரும் பரிபூரண நிலையை அடையும் அந்த முடிவு நாள் வரைக்கும் - இந்த வெளிச்சம் இன்னும் அதிகமதிகமாகப் பிரகாசித்து கொண்டே இருக்கும். இது ஒரே தொடர் பாதையும் (வழி), காலப்போக்கில் வெளிச்சம் அதிகரித்துக் கொண்டே போகக்கூடியதாகவும் இருக்கிறது என்று பதிவுகள் எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற காத்திருக்கும் நாம் (நீதிமான்கள்) - "கர்த்தருக்குள் களிக்கூறுவோம்." அநேகரிடம் இந்த விசுவாசம் குறைவாகக் காணப்படுகிறதினால் அவர்கள் அதிகமதிகமான வெளிச்சத்தைத்தேட பிரயாசப்படுவதில்லை. இவர்களின் அவிசுவாசத்தினாலும், நிர்விசாரத்தினாலும் அதிக பிரகாசமுள்ள வெளிச்சத்தைத் தேடாமல், இருளில் அமர்ந்திருப்பதை விரும்புகிறார்கள். தேவனும் இவர்கள் விரும்பியதை அனுமதிக்கிறார்.

**R1719 (col. 1P 8) :-**

நாம் முடிவு பரியந்தம், எல்லா பாடுகளிலும், உபத்திரவங்களிலும் நீடிய பொறுமையோடிருப்பதற்கு, தேவையான வல்லமையைப்பற்றி யோவான் வலியுறுத்துகிறார் - 1யோவ 5:4. அதாவது வெற்றியடைய தேவையான வல்லமை - விசுவாசமே என்கிறார். "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசம் என்பது நம்பிக்கையோ, அறிவோ மட்டும் அல்ல, மாறாக, நாம் பெற்ற அறிவை ஏற்றவாறு, ஏற்றசமயத்தில் பயன்படுத்தவேண்டும் - இப்படிப்பட்ட விசுவாசம், நம்முடைய பழக்கத்தில் ஒரு பகுதியாகவும், நம்முடைய கிரியைகளுக்கு அடித்தளமாகவும், நம்மை ஆவிக்குரிய வளர்ச்சியில் ஊக்குவிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இதன்மூலமாக பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள் இதில் சோர்வின்றி ஓடி, அனைத்தையும் மேற்கொண்டு வெற்றிகரமாக முடிவு பரியந்தம் நிலைத்து நிற்க நமக்கு உதவிசெய்யும்.

**R2411(col. 1P5):-**

நம்முடைய இந்தப் பள்ளிப்படிப்பில் "விசுவாசம்" ஒரு முக்கியமானப் பாடமாக இருக்கிறது. இந்த விசுவாசத்தின் வழியாக நாம் தேவனுடையவர்களாகி அவருடைய பள்ளியில் சேர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். மேலும், நம்முடைய விசுவாசம் தேவனை அறியும் அறிவினால் மட்டுமே வளர்ச்சியடைய முடியும். (இங்கு உலகத்தின் அறிவைப்பற்றி பேசப்படவில்லை) அவருடைய திட்டங்கள், செயல்முறைகள், அவருடைய குணநலன்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ளும்போது அவருடைய அறிவைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே அவருடைய வார்த்தைகளை கூர்ந்து கவனித்து, அவருடைய கட்டளைகளை தனிநபர்களாகக் கடைபிடிக்கவேண்டும். நாம் முதன்முதலில் அவரை விசுவாசிக்கும் பொழுது இவைகளை நாம் ஒப்புக்கொண்டோம். இந்தக் காரியங்கள் நம்மை தேவனுடைய அறிவில் விருத்தியடையச்செய்யும். நம்முடைய ஆண்டவர் நம்மேல் வைத்த அன்பின் ஆழமும், உயரமும், அகலமும், நீளமும் எவ்வாறாக அளவற்று இருக்கிறதோ, அப்படியே நாம் கொண்டுள்ள விசுவாசமும் விருத்தியடையும்.

## 6. விசுவாசம் "தேவனுடைய பரிசாக" எவ்வாறு கருதப்படுகிறது?

எபே 2:8 "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு."

**R2286 (col 2 P2) :-**

வேதப்பகுதியில் கிருபை என்று இங்கு சொல்லப்பட்ட காரியம், அநேகரால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. அதாவது நம்முடைய விசுவாசம் நம்முடையது அல்ல என்றும், அதாவது நம்முடைய சுய விருப்பத்தின்படியல்ல, அது தேவனுடைய விருப்பத்தின்படி அவர் நமக்கு கொடுப்பது என்றும் தவறான கருத்துக்கள் அநேகரால் போதிக்கப்படுகிறது. உண்மையாக, ஒரு வகையில், நாம் சுதந்தரிக்கக்கூடிய அனைத்து ஆசீர்வாதங்களும், பரிசுகளும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தேவனிடத்திலிருந்தே பெறுகிறோம். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது." (யாக்1:17) அப்போஸ்தலரின் வார்த்தைகளை நாம் சரியாகப் புரிந்துகொண்டோம் என்றால் - "எவ்விதத்திலும் எந்த விதமான நன்மையும் செய்யாத நம்மேல் தேவன் கிருபையாக இரங்கி நமக்கு இரட்சிப்பை அளிக்கிறார். இதை நாம் கொண்ட விசுவாசத்திற்கு (கீழ்படிதலுள்ள விசுவாசம்) பரிசளிக்கிறார்." என்று பொருள் தருகிறது என்று நம்பலாம். ஆகவே நாம் கொண்ட விசுவாசத்திற்காக நாம் மேட்டிமை சிந்தையாகவும் இருக்க வாய்ப்பில்லை, ஏனெனில் இது தேவனிடத்திலிருந்து நமக்கு மறைமுகமாக வந்த தெய்வீக ஈவாகும். தேவன் நமக்கு அளித்த கிருபையைப் போல் மற்ற ஜனங்களுக்கு அளித்திருந்தால், இந்த உலகத்தில் அநேக மில்லியன் கணக்கான ஜனங்கள், நம்மைக் காட்டிலும், அதிகமாக நீதியை நடைமுறைப் படுத்துவதில், விசுவாசத்தில் வளர்ந்து தேவன் கிருபையாகக் கொடுத்த வெளிச்சத்திலும், ஞானத்திலும், அறிவிலும் வளர்ச்சியடைந்திருப்பார்கள். ஆகவே நாம் கொண்ட விசுவாசத்தினால் எந்தச் சூழ்நிலையிலும் மேட்டிமையான சிந்தையை உருவாக்கிவிடக்கூடாது . மாறாக , தேவனிடத்திலிருந்து நாம் பெற்ற கிருபையினால் , அவருக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து, எல்லா சந்தர்ப்பங்களிலும், நாம் கொண்ட விசுவாசத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவேண்டும்.

**R2811 (col. 1 P2-4) :-**

கேள்வி - ஒவ்வொருவருக்குள்ளும் தனிப்பட்டவகையில், பயிற்சி செய்து, வளர்ச்சியடைவதே விசுவாசம் என்று நான் கருதினாலும் ரோமர் 12:3ம் வசனத்தின்படி - "அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்." என்று வாசிக்கிறோம். விசுவாசம் என்பது தேவனிடத்திலிருந்து நமக்கு அளந்து அல்லது பகிர்ந்து கொடுக்கப்படக்கூடிய ஒன்றாக தோன்றுகிறது. தேவன் தன்னிடம் இல்லாத ஒன்றை கொடுக்கமுடியுமா? அல்லது எந்த வழியில் தேவன் நமக்கு விசுவாசத்தை அளந்து கொடுக்கிறார்? தேவன், அவருடைய வார்த்தைகளில் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நாம் இந்தக் காரியங்களை முழுவதுமாக, நம்பிக்கொண்டிருக்கிறோமா, இல்லையா என்பது கேள்வி அல்ல . மாறாக அவைகளின் மேல் விசுவாசம் வைத்திருக்கிறோமா? இல்லையா என்பதே காரியம். ஏனெனில், "விசுவாசம் கேட்கக்கூடிய வார்த்தையினாலே வரும்."

பதில் - (ரோமர் 12:3)ம் வசனத்தில் "விசுவாசம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தை "பிஸ்ட்டிஸ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதை

மெய்ப்பற்று அல்லது உறுதிப்படுத்து என்றும் மொழிபெயர்க்கலாம். நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் முன், நமக்குள் இருக்கும் விசுவாசத்தையும், உறுதியையும், அன்றாடம் பயிற்சி செய்யவேண்டும், அப்பொழுது நாம் விசுவாசத்தினால் நீதிமானின் நிலையை அடையமுடியும். அதற்குபின் மனப்பூர்வமாக விரும்பி நம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும்பொழுது, நாம் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு தகுதிபெறுவோம். இதுவரைக்கும் நமக்குள் இருக்கும் விசுவாசம் போதும், ஆனால் மேற்கொண்டு அதில் வளர நாம் தேவனிடத்திலிருந்து ஆவியைப் பெறவேண்டும். அந்த ஆவியைப் பெற்றபின் தடுமாறாமல் விசுவாசப் பாதையில் நடக்கமுடியும். அப்பொழுது நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய காரியங்களைத் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்போம். - காணக்கூடிய காரியங்களுக்காக பலிசெலுத்துவது தற்காலிகமானது. தேவனுடைய கிருபையான செய்திகளைக் கேட்டு நீதிமானாக்கப்படுவது தேவன் நமக்கு அனுமதித்த-தொன்றாகும். சொல்வதென்னவென்றால், சகல ஆசீர்வாதங்களும் தேவனிடத்திலிருந்தே வருகிறது. ஆனால், விசேஷமாக ஆவிக்குரிய காரியங்களின் மேலுள்ள விசுவாசம் தேவனிடத்திலிருந்து பெற்ற ஆவியினால் நமக்கு கிடைக்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதினால் வளர்ச்சியடையும். ஏனெனில், “அவர்கள் தேவனால் போதிக்கப் படுவார்கள் என்று எழுதியிருக்கிறது. நாம் கொண்ட அடிப்படையான விசுவாசத்தினால் மட்டும் அல்ல, உடன்படிக்கை செய்தபின் தேவனுடைய ஆவியினால் வளர்ச்சியடையும் விசுவாசத்தினால், நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தைகளினாலும், பராமரிப்பினாலும், ஆழமான விசுவாசத்தில் உறுதிப்படுகிறோம்.

அடுத்து, தேவனுடைய போதனைகளுக்கு எவ்வளவு காலம் கீழ்ப்படியவேண்டும் என்பதையும், நம்முடைய விசுவாசம் அதிகமாக வளர்ச்சியடைய அவருடைய கற்பனைகளுக்கு எவ்விதத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்றும் பார்க்கலாம். இப்படிப்பட்ட வளர்ச்சியை “பரிசு” அல்லது நமக்குள் இருக்கும் தேவ ஆவியின் "நற்கனி” என்றும் குறிப்பிடுகிறது. இதற்கு தேவனே சிற்பாசிரியராக இருக்கிறார். ஏனெனில், சகல கிருபையினாலும் அவருடைய சத்தியங்களைக் கொண்டு அவருடைய பிள்ளைகளுக்குள் - விசுவாசம், நம்பிக்கை, மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் அன்பை வளரச் செய்கிறார். நாம் அவருடைய கற்பனைகளுக்கும், உபதேசங்களுக்கும் கீழ்ப்படிந்தோமானால் காலப் போக்கில் அவர் சித்தம் கொண்ட கிரியைகளை முற்றிலுமாக நம்மில் நிறைவேற்றுவார் அதற்குப் பின் நாம் அனைவரும் அவருடைய குமாரனின் தற்சொரூபங்களாக மாறி, கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாக இருப்போம்.

## 7. இரட்சிப்படைய, கிறிஸ்துவுக்குள் விசுவாசம் அவசியமா?

அப்போஸ்தலர் 4:10-12 உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரயேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

யோவான் 3:16 “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி,

இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

யோவான் 3:36 "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்."

**A 102(P 3) :-**

முழுமையாக ஊழியம் செய்யும் மனப்பான்மையானக் காரியங்களையுடைய வேதாகமத்தில், இரட்சிப்படையக்கூடிய பல வழிகளை (விசுவாசம், கிரியைகள், மற்றும் பேதமை) அது வலியுறுத்துவதில்லை. மேலும், தேவனை மதிக்காமல் இருப்பதின் மூலமாகக் கிடைக்கும் நித்திய அழிவைக்குறித்தும் அதிகமாக போதிப்பதில்லை. மாறாக, மற்ற எல்லா நம்பிக்கையின் கதவுகள் அடைப்பட்டாலும், ஜீவனுக்குப் போகிற ஒரே ஒரு திறந்த வாசலை மட்டும் காட்டுகிறது. அதில் பிரவேசித்து ஜீவனைப் பெறும்படி அழைப்பு கொடுக்கப்படுகிறது. இப்பொழுது இதை காணமுடியாமல், அல்லது அதற்குள் நுழைந்த பின் கிடைக்கும் ஆசீர்வாதங்களின் சிலாக்கியத்தை அறியாதவர்கள் காலப்போக்கில் முழு அறிவினால் நிரப்பப்படுவார்கள் என்று காட்டுகிறது. இந்த முறைமையில் ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவர்கள் மட்டுமே தேவனைச் சேர முடியும். சிறப்பாக வேலை செய்வதினாலும் அல்ல, அறியாமையினாலும் அல்ல இந்த உலகத்தின் பாவத்தைப் போக்கும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தினால் மட்டுமே இதை சாதிக்கமுடியும். (1பேது 1:19, யோவ 1:29) "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி இதுவே."

**R2220 -** பாடத்தின் முடிவில் "கிறிஸ்துவுக்குள் விசுவாசம் தேவையா" - என்ற தலைப்பில் காணவும்.

## 8. இந்த சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவுக்குள் வைக்கும் விசுவாசத்திற்கு உடனடியாக கிடைக்கும் பலன் என்ன?

ரோமர் 5:1 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

**A231 (P4):-**

சபை மகிமையடைவதற்குக் கடக்கவேண்டிய அதே படிகளை நம்முடைய ஆண்டவரும், போதகருமானவர் கடந்ததினால், "நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி அவர் ஒரு மாதிரியை ஏற்படுத்தினார்" - நாம் மரண நிலையிலிருந்து இந்த ஓட்டத்தைத் துவக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய ஆண்டவர் இந்த உலகத்திற்கு பூரண நிலைமையில் வந்ததால் (**N**) அந்நிலையிலிருந்து, இந்தப் பயணத்தைத் துவங்கினார். நாமோ ஆதாமின் சந்ததியாராக இருப்பதினால் மரண நிலையில் இருந்தோம். (**R**) - இது பாவமுள்ள, அபூரணம் மற்றும் தேவனுடைய சத்துருக்கள் என்ற நிலையையும் குறிக்கிறது. ஆகவே முதலில் நாம் இந்த மரண நிலையிலிருந்து, (**R**) பூரண நிலைக்கு (**N**) வருவதே, நமக்குத் தேவைப்பட்ட ஒன்றாக இருக்கிறது. இது எவ்வாறு சாத்தியப்படும்? இது நற்கிரியைகளால் கூடுமா? எந்தப் பாவிகளும் நற்கிரியைகளை நடப்பிக்க முடியாதே. நாம் எவ்விதத்திலும் இதை தேவனிடம் கேட்க தகுதியற்றவர்களாக இருக்கிறோம். ஆகவே தேவன் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை

விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8) இப்படியாக, நம்முடைய பாவங்களுக்காக இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டு, மரணநிலையிலிருந்த நம்மை "அவருடைய இரத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தினால்" அவர் இரட்சித்து, ஆதாம் படைக்கப்பட்ட நிலையும், அதிலிருந்து அனைவரும் விழுந்துபோன அந்தப் பரிபூரண நிலைக்கு மறுபடியும் மேலே தூக்கி எடுத்தார். இப்படியாக, "நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம்." (**N**) நிலைமைக்கு உயர்த்தப்படுகிறோம். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுபவர்கள் தேவனோடு சமாதானம் கொண்டிருப்பார்கள். (ரோமர் 5:1) இனி அவர்கள் ஒரு போதும் தேவனுடைய எதிராளிகளாக எண்ணப்படாமல், தேவனுடைய புத்திரர்களாகக் கருதப்படுகிறார்கள். இயேசு இந்த உலகத்திற்கு வந்த அதே பூரண நிலையில் நாமும் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இயேசு உண்மையில் பரிபூரணராக இருந்தார் ஆனால் நாமோ பரிபூரணமானவர்கள் என்று கருதப்படுகிறோம். நாம் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டு, இரட்சிக்கப்பட்டு, நீதிமானாக்கப்படுகிறோம். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை - தேவனுடைய வார்த்தைகளின் மூலமாக நாம் உணர்ந்துகொள்ளலாம். விசுவாசத்தினால் நாம் அணிந்திருக்கும் கிறிஸ்துவினுடைய நீதியின் சால்வையினால் போர்த்தப்பட்ட நிலைமையில் நாம் இருப்பதினால், தேவனுடைய பார்வையில், குற்றமற்றவர்களாகவும், கறையற்றவர்களாகவும், பரிசுத்தமாகவும் தோற்றமளிக்கிறோம். நம்முடைய பாவங்களை அவர் சுமந்து, ஒரு பாவியை போலாகி, அதற்குரிய தண்டனையை அவர் பெற்றுக்கொண்டு, நமது சார்பாக அவர் மரித்தார். ஆகவே அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும், மனுக்குலம் பாவத்தில் விழுமுன் பெற்றிருந்த எல்லா உரிமைகளும், ஆசீர்வாதங்களும் மீண்டும் கொடுக்கப்படுகிறது. இந்த சிலாக்கியம் நம்மை ஜீவனுக்குள் வழிநடத்தி, தேவனோடு தொடர்பு கொள்ள செய்கிறது. விசுவாசத்தின் பயிற்சியின் மூலம் இந்த உறவை நாம் துவங்குகிறோம். அதை தக்கவைத்துக் கொள்ளும் பட்சத்தில் தேவன் "குறித்தக் காலத்தில்" அவரோடு நித்தியமாக என்றுமே ஜீவிப்போம்.

**R2651(col. 2P5) - R2652 (col. 1P1) :-**

"அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" (ரோமர் 6:29) என்ற ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு உண்டான விளக்கத்தைக் காண்போம். இங்கு விசுவாசத்தோடு கிரியையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இது கரங்களினால் செய்யப்படும் வேலை அல்ல, மாறாக, நம்முடைய தலையினாலும், நம்முடைய இருதயத்தினாலும் செய்யப்படுவதாக இருக்கிறது. நம்முடைய கரத்தினால் செய்யப்படும் எந்தவிதமான கிரியைகளைக் காட்டிலும், இருதயத்தினால் செய்யப்படும் கிரியைகளையே கர்த்தரின் பார்வையில் மேன்மையாக அங்கீகரிக்கப்படுகிறது. ஏனெனில், நம்முடைய விழுந்துபோன நிலையில் எந்த ஒரு கிரியைகளையும் பூரணமாக செய்ய இயலாது என்று நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். ஆனால் தேவன் பூரணமானவர், அவருடைய வேலைகள் அனைத்தும் பூரணமாகவே உள்ளது. ஆகவே அவர் ஒருகாலத்திலும், இந்த அபூரணமான கிரியைகளை அதாவது சிறிதளவும் பாவமுள்ள செயல்களோடு, ஏற்றுக்கொள்ளமாட்டார். மிகச் சிறந்த முறையில் நாம் செய்த வேலைகளை தேவனுக்கு அர்ப்பணித்தாலும், விசுவாசம் இல்லாமல் அந்தக் கிரியைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

தேவன் ஒரு மிகப்பெரிய வேலையை நமக்காகச் செய்ய ஆலோசித்திருக்கிறார் - நாம் பந்தய சாலையில் ஓடுவதற்காக தன்னுடைய ஜீவனை ஈட்டு கிரயமாகக் கொடுப்பதற்கு நமக்காக ஓர் இரட்சகரைத் தந்ததின் மூலமாக இந்த மாபெரும் காரியத்தை

செய்தார். இப்பொழுது தேவன் இயேசுவின் மேல் விசுவாசம் உள்ளவர்களை நீதிமான்களாக்குகிறார். ஆகவே, நாம் நியாயத்தீர்ப்பின் கீழ் இருப்பதினால், இயேசுவை நாம் விசுவாசிக்கும் வரைக்கும், நம்முடைய எந்த வேலைகளும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆனாலும், அவர் தாமே செய்த முன்னேற்பாட்டினால், கிறிஸ்துவின் மேலுள்ள நம்முடைய விசுவாசத்தை அவர் ஏற்றுக்கொண்டு, இந்த விசுவாசத்தின் மூலமாக நம்மை நீதிமானாக்குகிறார். இதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இதன் அடிப்படையில் செய்யப்படாத எந்த வேலைகளையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. தேவனுடைய பார்வையில், அனைவரும் விசுவாசத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளும்படியாக இப்படி செய்தார். "விசுவாசம் இல்லாமல் தேவனை மகிழ்விப்பது கூடாத காரியம்." அதிகமாக விசுவாசத்தில் பயிற்சி பெற்றால், தேவனை அதிகமாக மகிழ்விக்கலாம் - நிச்சயமாக கட்டுக்கதைகள், தேவன் சொல்லாதக் காரியங்கள் மற்றும் நாம் அல்லது மனிதர்களின் கற்பனைகளை நம்புவது விசுவாசம் அல்ல. தேவன் சொன்னவைகளை உறுதியாக நம்புவதே விசுவாசம், இதையே தேவனும் ஏற்றுக்கொள்கிறார். இதை அப்பியாசப்படுத்தும் ஒவ்வொருவரையும் அவர் நீதிமானாக்குகிறார் - "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." (ரோமர் 5:1)

இதற்கு மேல் சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்படும் பரம அழைப்பைக் குறித்து ஆண்டவர் இங்கு வேறொன்றும் விவரிக்கவில்லை. அதைக் குறித்து நாம் காணலாம். தேவனை தேடுவதற்கான முதல் படி - நீதிமானாக்கப்படுதல் - இதை குறித்தே அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்நிலையை நாம் பெற, கிறிஸ்துவை நம்முடைய ஜீவனுக்குரிய அப்பமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தந்தையாகிய ஆதாமின் மீறுதல்களினால், மரணம் நம் அனைவரின் மேலும் வந்தது. நமக்குள் தேவன் தந்த பூரணமான ஜீவன் நமக்குள் இல்லை என்பதை, நாம் அனுபவ ரீதியாக முதலில் உணரவேண்டும். நம்முடைய பிதாவாகிய ஆதாமின் மேல் வந்த மரணத்தை நீக்க ஆண்டவராம் இயேசு மாம்சமாகி, தன்னுடைய ஜீவனையே ஈடுக் கிரயமாகக்கொடுத்ததினால் இப்பொழுது, கிறிஸ்துவுக்கு தேவனுடைய இந்த இலவசமான கிருபையை ஏற்றுக்கொள்பவர்கள், கிறிஸ்துவின் பலியின் நன்மைகளைத் தனக்குள் ஏற்றுக்கொண்டு, இதினிமித்தம் இந்த உலகத்திற்குத் தன்னுடைய ஜீவனையே ஈடு பலியாகக் கொடுத்து அபிஷேகம் செய்தவரின் மூலமாக தேவன் கொடுக்கும் சகல ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் பெற்றுக் கொள்பவர்கள், மனரீதியாக இந்த உண்மைகளை ஒப்புக்கொண்டு, இருதயப் பூர்வமாக ஏற்றுக்கொள்பவர்கள், மனுஷகுமாரனின் மாம்சத்தைப் புசிப்பவர்களாக இருக்கிறார்கள் - இவர்கள் இந்த யுகத்தில் கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்ட சகல வாய்ப்புகளையும், ஆசீர்வாதங்களையும், மனித உரிமைகளையும், பயன்படுத்திக் கொள்வார்கள்.

## 9. இயேசு எப்படியாக நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிற-வருமாயிருக்கிறார்?

எபிரேயர் 12:1,2 - "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம், அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்."

**R1830 (col. 1P1) :-**

அவருடைய மாதிரியினாலும், போதனைகளினாலும், எவர் ஒருவர் விசுவாசத்தில் ஊக்குவிக்கப்படுகிறாரோ, அவர் தொடர்ந்து இயேசுவைப் பின்பற்றி, ஓட்டத்தை நிறைவுசெய்து, அது பூரணப்படும் பட்சத்தில், அசைக்கமுடியாத அளவுக்கு உறுதிபெற்று, இறுதியில் "மகிமையுள்ள சபையாக" கறைதிரையற்றவராக, தன்னை ஸ்தாபிப்பார். இவர் இன்று பெறும் அனுபவங்களினால், "இராஜரீகமான ஆசாரியத்துவத்திற்கு" அவரைத் தகுதிப்படுத்துவார். ஏனெனில் "அநேக உபத்திரவங்களின் மூலம்" இந்தப் பொறுப்புக்-கேற்றபடி பூரணப்படுத்தப்படுகிறார்.

## 10. விசுவாசத்தை எளிமையாக அறிக்கையிடுவது அவசியமா?

ரோமர் 10:10 - "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்."

**R2632 (col. 2 P 2,3):-**

கிறிஸ்துவுக்கு குாந்தைகளாக இருப்பவர்கள் , இந்த "உலகத்தின் பிள்ளைகளிடமிருந்து" தங்களை வித்தியாசப்படுத்திக்கொள்ள விசுவாசத்தை வெளியரங்கமாக, அறிக்கையிடுவது சற்று அவசியமாகவே இருக்கிறது. ஆனால், இந்த அறிக்கை மிக எளிமையாக இருக்கவேண்டும். ஏனெனில், கிறிஸ்துவுக்கு மிகச்சிறிய குழந்தைகள் கூட அங்கு சொல்லப்படும் விளக்கங்களை மிகத்தெளிவாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

(1) பிதாவினால் அனுப்பப்பட்ட கிறிஸ்து, அனைத்து மனுக்குலத்திற்கும் தன்னையே ஈடுபலியாகக் கொடுத்தார் என்றும் அவர் தங்களுடைய சொந்த இரட்சகர் என்றும், அறிக்கையிடவேண்டும்.

(2) கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பாவங்களை விட்டுவிட தீர்மானிக்க வேண்டும்.

(3) இயேசுவை எல்லா விதத்திலும், முழு அர்ப்பணிப்போடு பின்பற்றி, அவருடைய பணியில் தன்னுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். இவைகளை அறிக்கையிட முடியாதவர்கள் கிறிஸ்துவுக்கு "குழந்தைகளாக" ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். அல்லது இவர்களை கிறிஸ்துவுக்குள் சகல விதத்திலும் வளர்ச்சியடையவும் எதிர்பார்க்கவும் முடியாது.

இங்குச் சொல்லப்பட்டக் காரியங்களைப் பெயர் சபைகளில் நாம் எதிர்பார்க்க முடியுமா? எந்த விதத்திலும் இது சாத்தியமல்ல. பெயர் சபைகளில் அதிகமான களைகளும், குறைவான கோதுமை மணிகளும் இருக்கிறது. இவை அனைத்தும் மகா உபத்திரவத்தின் காலத்தில் சோதனைக்குள்ளாக்கப்படும். இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் இவர்களின் நிலை மாறாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெரிந்து கொள்ளப்பட்ட சபை முழுமைப்பெற்று மகிமையடைந்த பின் மற்ற அனைவரும் சீர்ப்பொருத்தப்படுவார்கள். (அப் 3:19-21)

**R2647 (col. 1 P 5) :-**

நம்முடைய பொதுவான நம்பிக்கைகள், மதப்பற்றை அதிகரிப்பதற்கான நோக்கத்துடன் அல்ல, மாறாக, கீழ்க்காணும் குறிப்புகளைச் சரியாகவும், தெளிவாகவும் தனிப்பட்ட வகையில் புரிந்துகொள்வதற்காகவே இருக்கிறது.

(1) இயல்பாகவே, நாம் விழுந்துபோன அங்கத்தினர்களாக, தண்டனை தீர்ப்படைந்த ஜாதியாக, கோபாக்கினையின் பிள்ளைகளாக, தண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கிறோம்.

(2) கிறிஸ்து, ஆதாம் மற்றும் அவருடைய முழு சந்ததிக்காக மரித்தார். ஆகவே இப்பொழுது, இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களைத் தேவன் நீதிமானாக ஏற்றுக்கொள்ளுகிறார்.

(3) தன்னைதான் ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, அனைத்தையும் ஆண்டவருக்கே அர்ப்பணித்து, ஆயிரவருட ஆட்சியில் "ஜெயிப்பவர்களுக்காக" வாக்களிக்கப்பட்ட பங்கைப்பெற, தேவன் அழைத்த ஒவ்வொருவரையும் நீதிமானாக்கியுமிருக்கிறார் - வெளி 2:26, 3:12,21.

**R3071(col.2P 3,4)- R3072 (col.1P1):-**

எப்படிப்பட்ட செய்திகள் விசுவாசத்தின் செவிகளால் கேட்கப்படும்? மற்றும் விசுவாசத்தின் கண்களினால் காணப்படும்? என்றுமே நமக்குள் நாம் பெற்றிருக்கும் வல்லமையினால், நம்முடைய இருதயத்திலும், வாயிலும், இந்த இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்று தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களும் அறிவிக்கிறார்கள். மோசே இவைகளையே பிரசங்கித்து, தீர்க்கதரிசனமாகச் சொன்ன சுவிசேஷம் என்றும், அதை நாம் இன்று பெற்றுக்கொண்டோம் என்றும் அப்போஸ்தலர் நடபடிகைகள் அறிவிக்கிறது. அதாவது, ஆண்டவரை நம்முடைய வாயினால் அறிக்கையிட்டு, இருதயத்தினால் விசுவாசிக்கவேண்டும்.

தீர்க்கதரிசியாகிய மோசேயும், அப்போஸ்தலனாகிய பவுலும் இந்த காரியத்தை ஒரே விதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலில் தங்களுடைய வாயினாலும், இரண்டாவது தங்களுடைய இருதயத்தினாலும் அறிக்கையிடவேண்டும். இந்த வாக்கியங்கள் தற்செயலாக சொல்லப்பட்டவைகள் அல்ல. இருதயத்தில் உள்ள விசுவாசத்தை (சத்தியம்), வாயினால் அறிக்கையிடுவது முதல் சாட்சியாக இருக்கிறது. மேலும், இப்படியாக சத்தியத்தை அறிக்கையிட்டு, அவைகளை முழுமையாக புரிந்து கொள்வது, தெய்வீக ஒழுக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. உண்மையில், நாம் சரியாகப் புரிந்து கொள்ளாத காரியங்களை அறிக்கையிட முடியாது. ஆகவே, நாம் அறிக்கையிடுவதற்கு முன்பு அதை நாம் முழுமையாக நம்ப வேண்டும். அதற்குபின் விசுவாசத்தில் நாம் முழுமையான வளர்ச்சி அடைய சத்தியத்தை அறிக்கை செய்யவேண்டும். ஒருவர் தான் பெற்ற சத்தியத்தின் வெளிச்சத்தை வெளியரங்கமாக அறிக்கையிடாமல், அதை காத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினால், அவர் தன்னைத்தான் வஞ்சிக்கிறவராக இருப்பார். ஆகவே "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும்." (ரோமர் 10:10) என்று வசனங்கள் தெளிவாகக்குறிப்பிடுகிறது. விசுவாசத்தினால் துவங்கிய நீதியானது, கிரியையினாலும், உதடுகளினால் அறிக்கையிடாமலும், நித்தியமான இரட்சிப்பை முழுமையாக அடைய முடியாது.

தெய்வீக சத்தியத்தின் இந்த ஒரு சிறப்பு பகுதியை எங்குமுள்ள தேவ ஜனங்கள் தங்களுடைய இருதயத்தில் ஆழமாக பதித்து வைக்க வேண்டும். ஏனெனில் அநேகர் தங்களுடைய பலவீனத்திலும், வியாதியிலும், தேவன் காட்டிய வழிகளில் நடக்க முடியாதபடிக்கு தங்களுக்குள்ளான ஆவிக்குரிய குறைபாடுகளிலும் தேவன்

அவர்களுக்கென்று செய்த எண்ணிக்கையற்ற கிருபைகள் எத்தனையோ உண்டு. அவைகளை கட்டாயமாக அறிக்கை செய்து அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆகவே நாம் தேவனிடமிருந்து இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, நாம் முன்பு பெற்ற காரியங்களை அறிக்கையிட வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் அறிக்கையிடப்பட்டு, இருளிலிருந்து, ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆவிக்குரிய வளர்ச்சியடைய இதுவே சட்டமாக இருக்கிறது. இது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குண்டான கற்பனையாகவும் இருக்கிறது. இந்தக் கற்பனைக்குக் கீழ்ப்படியாத பட்சத்தில், இருதயத்திற்குள் இருக்கும் சத்தியம் காலப்போக்கில் காணாமல் போய்விடும். புரிந்துகொள்ளுதலின் கண்கள் மங்கிவிடும். விசுவாசத்தின் செவிகள் மந்தமாகிவிடும். புதிய உடன்படிக்கையின் கீழ் புது சிருஷ்டிகளாக அழைக்கப்பட்ட நாம், வருங்காலத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கும் மகிமையான வாய்ப்புகள், கை நழுவி போய்விடும்.

## 11. "உணர்வுகளுக்கு" விசுவாசத்தில் ஒரு முக்கிய பங்குள்ளதா?

**R1443 –** "விசுவாசமும் உணர்வுகளும்"

விசுவாசத்திற்குப் பதிலாக உணர்வுகளை தவறாக எடுத்துகொள்ளக்கூடாது. ஆனாலும் ஒரு செடியின் வேருக்கும், மலருக்கும் தொடர்புள்ளது போல, விசுவாசத்திற்கும் பரிசுத்தமான உணர்வுகளுக்கும் தொடர்பு இருக்கிறது. வேர் நிலத்தில் என்றுமே நிலைத்திருப்பதுப்போல, விசுவாசமும் நிலைத்திருக்கக்கூடியது. ஆனால் உணர்வுகள் திட்டமிடப்படாத ஒன்றாகும். வேர்கள் எப்பொழுதும், பசுமையான இலைகளையும், மலர்களையும் தராததுப்போல, விசுவாசமும் ஓயாமல் உணர்வுகளை வெளிப்படுத்தாது. நாம் சந்தோஷத்தின் எல்லையில் இருக்கும் பொழுதும், நாம் கொண்ட விசுவாசம் உறுதியாக இருக்கும். அதுபோல, வேதனைகள், வியாதிகள், வறுமை மற்றும் பல இக்கட்டுகளில் நம்முடைய உணர்வுகள் தொய்ந்துப் போனாலும், நம்முடைய விசுவாசம் மேகங்களுக்குக் கீழ் இருக்கும் கிரானைட் மலைகளைப்போல் உறுதியாக இருக்கும். உங்களுடைய சொந்த உணர்வுகளோடு தேவனுடைய அன்பையும், வல்லமையும் ஒப்பிடாதீர்கள். சூரியனானது, அடர்த்தியுள்ள இருளான பகலிலும், மிகப் பிரகாசமாக வீசுகிறது. ஆனால் மேகங்கள் இடையில் இருப்பதினால் அந்த வெளிச்சத்தை நம்மால் உணர முடியவில்லை. அது போல நாம் செய்யக்கூடிய காரியங்களினால் தேவனுடைய அன்பை உணராதிருக்கலாம். ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார்.

மகிழ்ச்சி நிறைந்த இயல்பான வாழ்க்கையைவிட, குறைவான உணர்வுகளோடு இருப்பதே நலம் என்று கிறிஸ்துவ அனுபவங்கள் மூலமாக நாம் கற்றுக்கொள்கிறோம். தேவன் அவருடைய மழைத்துளிகளை நமக்கு அனுப்புகிறார், இல்லையென்றால், பூக்களும், செடிகளும் நாசமடைந்துவிடும். அதுபோல, மாறாத தேவன் மேல் நாம் விசுவாசம் வைக்கும் பட்சத்தில் ஆழமான நதியைப்போல, நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையும், அன்பும் மிக ஒழுங்காக வளர்ச்சியடையும். இதில் எந்தவிதமான தடைகளும், கட்டுமானங்களும் தடுக்கமுடியாது. மோசே சிவந்த சமுத்திரத்தின் விளிம்பில் நின்ற பொழுது விசுவாசமுள்ள உணர்ச்சியால் அவர் ஆட்கொள்ளப்பட்டார் - "பயப்படாதிருங்கள்.... கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் , நீங்கள் சும்மாயிருப்பீர்கள்....". ஆபிரகாம் ஈசாக்கை பலியிடும்பொழுது அவர் கொண்ட விசுவாசத்தையோ, அல்லது எரிகோ மதில்களைச் சுற்றி வந்த இஸ்ரயேல் மக்களின்

விசுவாசத்தையோ இதற்கு ஒப்பிடமுடியாது. ஆகவே தேவனுக்குள் விசுவாசமாயிருங்கள், அவர் காட்டிய வழிகளில் தொடர்ந்து நடவுங்கள், நிச்சயமாக வெற்றியடைவோம்.

## 12. நீதிமானாக்கப்படுவதற்கும் அடிப்படையான விசுவாசத்திற்கும், ஆவியின் கனிக்கான அடிப்படை விசுவாசத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**F688 - F692 -** இதற்கான பதிலை "விசுவாசம் - ஆவியின் கனி மற்றும் இன்றைய புதுசிருஷ்டி பெற்றுக்கொள்ளும் சொத்து" என்ற தலைப்பில் இந்தக் கேள்விகளின் இறுதியில் காணலாம்.

## 13. "விசுவாசத்தின் நல்ல போராட்டம்" என்றால் என்ன?

1 தீமோத்தேயு 6:12 - "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கைப் பண்ணினவனுமாயிருக்கிறாய்."

**R2309 -** "கிறிஸ்தவர்களின் போராட்டம்" என்ற தலைப்பில் இறுதியில் காணலாம்.

**R2312 -** விசுவாசத்தின் போராட்டம் - 1தீமோ 6:12 ம் வசனம் - நல்ல போராட்டத்தை, விசுவாசத்தின் நல்ல போராட்டம் என்று அழைக்கப்படுகிறது. அனைத்துக் காரியங்களிலும் இது விசுவாசத்தின் போராட்டமாக இருக்கிறது.

(1) இது காணக்கூடாத எதிராளியோடே, தலைவரின் வழிநடத்துதலுக்குக் கீழ் நடக்கும் போராட்டமாக இருக்கிறது - விசுவாசத்தின் கண்களால் மட்டுமே நம்முடைய இரட்சிப்பின் அதிபதியை நாம் காணமுடியும், மேலும், அவருடைய வார்த்தைகளினால் மட்டுமே நம்மை எதிர்க்கும் நம்முடைய எதிராளியை அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.

(2) நம்முடைய ஒழுக்கமுள்ள பகுத்தறிவினால் நமக்குள் இருக்கும் பாவங்கள் மற்றும் நீதியையும் அடையாளம் கண்டு கொள்ள முடியும். விசுவாசத்தினால் தேவனுடைய வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். மேலும், அந்த வார்த்தைகளில் உள்ள விதிமுறைகளின், கீழ் தேவனுடைய பார்வையில் சரியான மற்றும் நீதியான காரியங்களைக் கற்றுகொள்கிறோம். உலகத்தின் பார்வைக்கு சரியாகத் தோன்றும் காரியங்கள் அனைத்தும் தேவனுடைய பார்வையில் தவறு என்று இதன் மூலம் புரிந்து கொள்கிறோம். இப்படியாக அவருடைய வார்த்தைகளின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம், தேவன் நமக்குத் தந்த வெளிப்பாடுகளின் அடிப்படையில் அனைத்து முடிவுகளையும் ஏற்றுக்கொண்டு, விசுவாசிக்கிறோம்.

(3) நாம் பெறப்போகிற சுயாதீனம் மற்றும் மகிமையை, நாம் பெற்ற அறிவினால் அல்ல விசுவாசத்தினால் மட்டுமே போராடிப் பெற்றுக்கொள்ள முடியும்.

(4) அவரை நேசிப்பவர்களுக்கு தேவன் தாமே மிக மேன்மையான வாக்குத் தத்தங்களையும், விலையுயர்ந்த காரியங்களையும் வாக்களித்திருக்கிறார். இதனிமித்தமாக அவருடைய பணியில் தங்களுடைய ஜீவனையே ஒப்புகொடுக்கும் அளவுக்கு அன்பு எதிர்பார்க்கப்படுகிறது. நாம் விசுவாசத்தின் கண்களினால் மட்டுமே, ஜீவ கீரிடத்தையும், மகிமையடைந்த கர்த்தரையும் காண்கிறோம்.

(5) நம்முடைய மாம்சமான கண்கள் காணக்கூடிய காரியங்கள், நம்முடைய

ஓட்டத்திற்கு எதிரிடையான காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. இந்த பணிக்காக நம்முடைய ஜீவனை முழுமையாக ஒப்புகொடுக்க தடுக்கிறது, சாந்தம், பணிவு, பொறுமை, அன்பு, நிதானம் என்ற குணங்களை நமக்குள் வளர்ப்பதை தடுத்து, சுயநலம், ஆசைகள், பெருமை, பேராசை மற்றும் இந்த உலகத்தின் ஆவியை நமக்குள் நிரப்புகிறது. ஆகவே, தேவனால் ஊக்குவிக்கப்படும் விசுவாசத்தினால் மட்டுமே இவைகளைப் போராடி மேற்கொள்ளமுடியும்.

இந்தக் காரியங்களை நாம் பார்க்கும்பொழுது, விசுவாசம் எவ்வளவு முக்கியமான ஒன்று என்று தெரிகிறது. விசுவாசம் இல்லாமல் நாம் ஒருபோதும் எதையும் ஜெயிக்கவே முடியாது. விசுவாசம் நிலைத்திருக்க கொஞ்சம் அறிவும் தேவைப்படுகிறது, விசுவாசம் வளர்ச்சியடைய சில வாக்குத்தத்தங்கள் அவசியமாக இருக்கிறது. இவையனைத்தும் மிகப்பெரிய அற்புதமான, தெய்வீக வெளிப்பாட்டில் பெற்றிருக்கிறோம். இதை தொடர்ந்து நாம் அவருடைய வார்த்தைகளின்படி போராயுதங்களைத் தரித்துக்கொள்ள வேண்டும். அவர் கொடுத்த சர்வாயுதங்களை அணிவது வேதனையாக இருந்தாலும், அதை அணியவேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். இந்தப் போராட்டத்தை நம்முடைய அதிபதியின் வார்த்தைகளின்படி செய்யாவிட்டால், நிச்சயமாக போரில் தோல்வியடைவோம். உண்மையில், நமக்கு தேவைப்பட்ட, தெய்வீகத் திட்டம் மற்றும் தெய்வீக சித்தத்தின் பல்வேறு கோணங்களில் காணப்படுகிற சத்தியத்தின் போதனைகள் நம்முடைய வெற்றிக்கு மிக அவசியமாக இருக்கிறது. இவைகளை கடைப்பிடித்து, சர்வாயுதங்களை தரிக்காமல் போனால் தோல்வி நிச்சயம். ஆகவே மரணபரியந்தம் சர்வாயுதங்களை தரித்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தைகளின்படி போராடவேண்டும். ஆகவே, நாம் சர்வாயுதங்களை அணிந்து கொள்ளாமல் போருக்குபோவது மற்றும் சர்வாயுதங்களை அணிந்து கொண்டு போருக்கு போகாமல் இருப்பது - இந்த இரண்டு தவறுகளையும் நாம் நம்முடைய வாழ்க்கையில் செய்யாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## 14. நல்ல போராட்டத்தை நாம் ஏன் போராட வேண்டும்?

**R1859(col.1 P6) :-**

மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளாகிய சகலவிதமான கோபம், மூர்க்கம், பகை, பொறாமை, வைராக்கியம், கசப்புகளையும் நம்முடைய இருதயத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறிந்துவிட்ட பின் பூரண பரிசுத்தத்திலும், தேவனுக்கு மகிமையாகவும், நாம் இந்த நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். மேலும், நம்முடைய சகல போர் வீரர்களை இந்தப் பாதையில் நடக்க உதவி செய்யவேண்டியவர்களாகவும் இருக்கிறோம். நம்முடையவைகளை அல்ல, தேவனுடைய நாமமும், அவருடைய கற்பனைகள் பொருத்தப்பட்டிருக்கும் அவருடைய இராஜரீகமான கொடியை உயர்த்தவேண்டும். அவருடையவர்களாக இருக்க விருப்பமுள்ளவர்களையும், அறியாமல், தவறான போர் குழுக்களோடு சேர்ந்தவர்களையும் தேவனுடைய அளவின்படி உயர்த்த உதவி செய்யவேண்டும். கிறிஸ்துவுக்குள் சுயாதீனம் பெற்றவர்களை மீண்டும் வஞ்சித்து, பாவம் மற்றும் மூடநம்பிக்கைளின் நுகத்தின் கீழ் சிறை பிடிக்க தேடித்திரியும் எதிராளியின் கரங்களிலிருந்து இப்படிப்பட்டவர்களை, துணிகரமாக மீட்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் காற்றில் சிலம்பம் பண்ணுவதில்லை. நாம் மேடைகளில் வெறித்தனமாகக் கத்துவதில்லை, அல்லது தெரு ஓரங்களில் நாம் கூச்சலிடுவதும் இல்லை. ஆனால் அப்போஸ்தலர்களைப் போல திறமையுள்ளவர்களாக, சாத்தானால் சிறைபிடிக்கப்பட்டவர்களிடம், சத்தியத்தை வெளிப்படுத்த முயற்சிக்கிறோம். இந்தத் தந்திரமும், திறமையும் அவர்களின் விடுதலைக்காகவே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் சாத்தான் அவர்களை தனக்குள்

அடிமைப்படுத்தும்படி சூழ்ச்சி செய்கிறான். ஆகவே நம்முடைய ஆண்டவரும் போதகருமானவர் - "பாம்பைப்போல் வினாவுள்ளவர்களாகவும், புறாவைப்போல் கபடற்றவர்களாகவும் இருங்கள்" என்று நமக்கு எச்சரித்திருக்கிறார்.

**R2312 (col. 2** "ஐந்து முக்கியமான குறிப்புகள்") :-

நம்முடைய இரட்சிப்பின் அதிபதி, அநேக வாக்குறுதிகளைக் கொடுத்து, ஆறு இக்கட்டுகளிலும் நம்மோடிருந்து, ஏழாவது இக்கட்டில் நம்மை விடுவிப்பார் என்றும் அதாவது, நம்மை எந்தச் சூழ்நிலைகளிலும் அவர் கைவிடுவதில்லை என்றும் உறுதியளித்து, அவருக்குள் விசுவாசமாயிருப்பதற்கும் நம்மை ஊக்குவிக்கிறார். மேலும், தேவனுடைய திட்டத்தின்படி அழைக்கப்பட்டவர்கள், அவர் பேரில் உண்மையாக அன்பு கூறுவதினால், சகலமும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார். "விசுவாசமே, உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" என்று அறிக்கையிடுகிறார். ஆகவே கீழ்க் காணும் காரியங்களை நாம் நமக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளுவோம்.

(1) நம்முடைய இரட்சிப்பின் அதிபதிக்கு முழுமையாக கீழ்ப்படிய நாம் நம்மை ஒப்புக்கொடுத்து அவரோடு இணைந்து செயல்பட நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோம்.

(2) அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளவும், அவர் நமக்கு கொடுத்திருக்கும் சர்வாயுதங்களை அணிவதற்கும் நாம் முயற்சிக்கிறோம்.

(3) மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் எதிர்த்து நின்று பாவங்களின் வெவ்வேறு ரூபங்களை தகர்க்க நாம் போராடுகிறோம்.

(4) நாம் கர்த்தர் மேலும், அவருடையவர்கள் மேலும், உண்மையான விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறோம். அவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ - அவர்களை ஊக்குவிக்கவும், ஆலோசனைகளை சொல்லவும், மற்ற ஊழியங்களை செய்யவும் (சிறியதோ, பெரியதோ), தங்களுடைய ஜீவனைக் கொடுக்கும் அளவுக்கு மனப்பூர்வமாக ஆயத்தமாக இருக்கிறோம்.

(5) விசுவாசம் இல்லாமல் நிச்சயமாக நாம் எதையும் ஜெயிக்க முடியாது என்று நாம் நினைவில் கொள்ளவேண்டும் - நம்முடைய கர்த்தராகிய இயேசுவை இரட்சகர் என்றும், அவர் நம்மை பராமரித்து, மனப்பூர்வமாக உதவிகள் செய்து, நம்மை வழிநடத்துகிறார் என்றும் விசுவாசிக்கிறோம். இப்படிப்பட்ட விசுவாசத்தின் மூலம் மட்டுமே - நம்மை நேசித்து, தன்னுடைய சொந்த இரத்தத்தினாலே நம்மை மீட்டு, சகலத்தையும் மேற்கொண்டு ஜெயிக்கமுடியும். நம்மை வெற்றிசிறக்க செய்த நம்முடைய பிதாவாகிய தேவனுக்கே அனந்தகோடி ஸ்தோத்திரம் என்றென்றும் உண்டாவதாக.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." - 1கொரி15:57

**R2770 (col. 2 P5) :-**

தேவனுடைய ஜனங்கள் சாத்தானை நிச்சயமாக சந்திக்கவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிட்ட காரியம், ஏதோ ஒரு விதத்தில் சாத்தானை அடையாளம் கண்டு கொள்ளமுடியும் என்பதை பொருள்படுத்துகிறது. "விசுவாசத்தில் உறுதியாயிருந்து, சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று அவர் குறிப்பிடுகிறார்.

அதாவது சாத்தானை எதிர்க்க நம்மில் விசுவாசம் மிக அவசியம் என்பதை வலியுறுத்துகிறார் - இது தேவன் மேல் வைக்கும் விசுவாசமாகும். இந்த விசுவாசம், எந்தச் சூழ்நிலையிலும், நம்மை பின்வாங்கச் செய்யாமல், மரண பரியந்தம், கர்த்தரின் பலிபீடத்தில் நம்முடைய முழு அர்ப்பணிப்பையும் ஒப்புக்கொடுக்க நம்மை வழிநடத்தி, தொடர்ந்து வர இருக்கும் மகிமையில் பங்கடைய நம்மை மகிழ்ச்சியினால் நிரப்பும். -யூதா 3, ரோமர் 8:17,18

## 15. நாம் யாருக்காக, யாரை எதிர்த்துப் போர் புரிகிறோம்?

பிலி 2:12 "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்."

1யோவான் 3:16 "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம், நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்."

எபேசியர் 6:12 "ஏனெனில் , மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் , அதிகாரங்களோடும் , இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் , வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு."

**R2309 (- R2310,col. 2P1)-** "கிறிஸ்தவர்களின் போராட்டம்" என்ற தலைப்பில் இறுதியில் காணலாம்.

## 16. "விசுவாசத்தினால் நடப்பது" என்பதற்கு பொருள் என்ன?

**F631(P2,3) :-** 2கொரி 5:7 "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."

உண்மையில், புது சிருஷ்டிகளின் நிலைமையும், ஆர்வங்களும், நோக்கங்களும், மாம்சமான அனைத்து காரியங்களுக்கும் எதிரிடையாகவே உள்ளது. இதை குறித்து தீர்க்கதரிசியான தாவீது அறிக்கையிடுகையில் - "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்." மரிக்கக்கூடிய சரீரம் அல்ல, புது சிருஷ்டிகள் உண்மையில் தேவனுடைய புத்திரர், ஏனெனில், மாம்ச சரீரம் பலிசெலுத்தப்படவேண்டும். (நீதிமானாக்கப்பட்ட பின்பு) இது நம்மை ஏற்றுக்கொள்வதற்காகவும், ஜெநிப்பிப்பதற்காகவும் தேவன் வைத்திருக்கும் கட்டளையாகும். மாம்சத்திற்கு தேவைப்பட்ட கிருபைகளும், தற்காலிகமான ஆசீர்வாதங்களையும் பெற்ற மாம்ச இஸ்ரயேலர்களுக்கு இப்படிப்பட்ட கட்டளைகள் ஏதுமில்லை. ஆனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கற்பனைகளும், பிரமாணங்களும் வரவிருக்கும் உண்மையான இராஜா, உண்மையான அவருடைய இராஜ்யத்தின் மேல் அதிகாரம் செலுத்தும் நாட்களில் சம்பவிக்கப் போகிற காரியங்களுக்கு, நிழலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. யாத் 15:26, லேவி 26:3-15, உபா 28:1-14

இதற்கு எதிரிடையாக, பூமிக்குரிய காரியங்களைப் பொறுத்தவரையில் புது சிருஷ்டிகளுக்குண்டான சோதனைகளில் ஒரு முக்கியமான பங்கு என்னவெனில் - அவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டும். இதற்கு மேலாக -

உபத்திரவங்களைச் சகிக்கவும், சுய கட்டுப்பாட்டை பழக்கப்படுத்திகொள்ளவும் வேண்டும். மேலும் உண்மையில், நமக்கு ஒன்றுமில்லாமல் இருந்தாலும், விசுவாசத்தினால் நாம் அனைத்தையும் பெற்றிருக்கிறோம். ஞானமற்றவர்களாக இருந்தோம், இப்பொழுது தேவனுக்குள் ஞானத்தைப் பெற்றிருக்கிறோம். அவருடைய அடிச்சுவடுகளை நெருங்கி பின்பற்றும் ஒவ்வொருவரும் இந்தக் காரிங்களை அதிக அளவில் உணரமுடியும். “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.” நம்முடைய காயங்கள் குணமாக்கப்பட்டதையும், நீதிமானாக்கப்-பட்டதையும், கிறிஸ்துவின் சரீர அங்கமாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டதையும், நாம் மறந்துவிடக்கூடாது - நாம் புது சிருஷ்டிகளாக, அவருடைய பிள்ளைகளாகும் தகுதி பெற்று, விசேஷமாக, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதினால் அவருக்கு உடன்பங்காளிகளாகும் வாய்ப்புகளைப் பெற்று “கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, நம்முடைய மாம்சத்திலே நிறைவேற்ற” வாய்ப்புகளைப் பெற்றதற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம். - ஏசா 53:4,5, ரோமர் 8:17, கொலோ 1:24

**R2581 (col. P3 - col 2P3):-**

எப்படியிருந்தாலும், பொதுவான மனுக்குலத்திற்கு வரவிருக்கும் சகல ஆசீர்வாதங்களும் “சுவிசேஷத்திற்குள்” அடங்கியிருக்கிறது. ஆனால், இந்த ஆசீர்வாதங்களை உலகம் பெறுவதற்குமுன், “சிறு மந்தை” வகுப்பினர் அதாவது ஆசீர்வதிக்கப்பட்ட கேட்கிற காதுகளும், காண்கிற கண்களும் உடையவர்கள் இன்னும் மேன்மையான ஆசீர்வாதங்களோடு, வெகு சீக்கிரத்தில் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். வரக்கூடிய அனைத்து ஆசீர்வாதங்களும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேரடியாக அல்ல, நாம் இவைகளை விசுவாசத்தின் மூலம் அறியவேண்டியவர்களாக இருக்கிறோம், ஏனெனில் - நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். முன்னதாகவே உண்மை சபையானது, (பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டிருப்போர் - எபிரே 12:23) விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்கப்படாமல், நீதிமானாகக் கருதப்பட்டு, பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலைப் பெற்றவர்களாகக் கருதப்பட்டு, கிறிஸ்துவோடு கூட எழுப்பப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கிறார்கள் என்று கருதப்பட்டு, புதிய உடன்படிக்கைக்குக் கீழ் இருப்பதினால், இனி ஒருபோதும் மாம்சத்தில் இல்லாமல், ஆவிக்குரியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, புது சிருஷ்டிகளாக இருப்போர் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியாமல், ஆவிக்கேற்றபடி அறிந்துகொள்கிறோம்.

இயற்கையான கண்கள் காணமுடியாத காரியங்களை விசுவாச கண்களின் மூலமாக காணக்கூடிய புதிய பார்வையைப் பெறுகிறோம். சகல சத்தியங்களுக்குள்ளும் வழிநடத்தப்படுகிறோம். தேவன் அவருடைய ஆழமான காரியங்களை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். (1கொரி 2:9,10) இயற்கையான கண்கள் காணாத காரியங்களை விசுவாச கண்களின் மூலமாகக் காணவும், இயற்கையான காதுகள் கேட்டிராத செய்திகளை விசுவாச காதுகள் கேட்கவும், அல்லது சராசரி மனிதர்களுடைய சிந்தையில் ஒருபோதும் தோன்றாததுமான காரியங்களை தேவனிடத்தில் அன்பு செலுத்தி, அதை கிரியைகளில் வெளிப்படுத்துபவர்களுக்கு தேவன் முன்னதாகவே சேமித்து வைத்திருக்கிறார். இவர்களின் விசுவாசத்தின் கண்கள் திறக்கப்பட்டு சராசரி மனிதர்களுக்கு அப்பாற்பட்டு, மற்ற பரிசுத்தவான்களோடு, கிறிஸ்துவின் அன்பின்

அகலத்தையும், நீளத்தையும், ஆழத்தையும் உயரத்தையும் இன்னதென்று உணர்ந்து கொள்கிறார்கள் - எபே 3:18.

ஆயினும், இக்காலத்தில், இந்த விசேஷித்த வகுப்பார் அழியக்கூடிய இந்த சரீரத்தின் அபூரணத்திலிருந்தும், அதன் பலவீனங்களிலிருந்தும் முழுமையாக விடுதலைப் பெறவில்லை. ஆனால், இவர்கள் காணாமல் விசுவாசிக்கவேண்டிய நிலையில் பெற்றிருக்கிறார்கள். இந்த புதிய உடன்படிக்கையின் கீழ் அவர்களின் மாம்சீக பலவீனங்கள் தேவனால் பொருள் படுத்தப்படுவதில்லை ஏனெனில் அவர்கள் புதுசிருஷ்டிகளாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே அவர்களின் மாம்சத்தை மரித்ததாகக் கருதி, அதனுடைய பலவீனங்களையும் அவர் பொருள்படுத்தாமல், அவர்களுடைய உள்ளான நோக்கத்தின்படியே நியாயத்தீர்ப்படைகிறார்கள். ஆகவே “பலியினால் உடன்படிக்கை” செய்து, மீட்கப்பட்ட அனைவரும், தாங்கள் ஞானஸ்நானம் பெற்று, அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீரத்தின் அங்கமாகக் கருதப்பட்டிருக்கும் காரணம் என்ன என்பதை நாம் நிச்சயமாக நினைவில் கொண்டவர்களாக இருக்கவேண்டும். தெளிவாக நாம் அனைவரும் ஒரே தலையின் கீழ் அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய போதகர்களாக இருக்கிறோம். அவருடைய மகிமையான ராஜ்யத்தில் “ராஜரீகமான ஆசாரியர்களாக” நம்முடைய பிரதான ஆசாரியர் நம்மை தகுதிபடுத்தும் வரைக்கும் நாம் இன்னும் கொஞ்சம் காலத்திற்கு விசுவாசமுள்ளவர்களாகக் காத்திருக்க வேண்டும். அதற்குபின் சுவிசேஷத்தில் முன் அறிவிக்கப்பட்டபடி, இந்த முழு உலகத்தையும், அற்புதமான ஆசீர்வாதங்களுக்குள் நடத்த சிறப்புரிமைப் பெற்றவர்களாக, சத்தியத்தின் வெளிச்சத்தை முழுமையாக பிரகாசிக்கவும், தேவனுடைய புத்திரர்களாக சுதந்திரத்தையும் பெறுவோம்.

**R1798 –** “விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.”

**F142 (P2):-**

“நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் என்ற அப்போஸ்தலனுடைய குறிப்பை சுவிசேஷ யுகத்தில் உள்ள முழு சபைக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. நம்முடைய விசுவாசத்தை வளரச்செய்வதே நம்முடைய ஆண்டவரின் நோக்கமாக இருக்கிறது - அவரை காணமுடியாத பட்சத்திலும், அவரை விசுவாசிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அநேகக் காரியங்களை மறைவாக விட்டுச் சென்றார். மனித பார்வை அல்லது நியாயத்தீர்ப்பைப் பொறுத்த வரையில் அவருடைய விசுவாசம் வளர்ச்சியடையும் விதத்தில் சிலவற்றை விட்டுச் சென்றார். ஏனெனில், பூமிக்குரிய காரியங்களில் அற்புதங்களும் அடையாளங்களும் அனுமதிக்கப்பட்டால், இந்த விசுவாசம் வளருவதற்கு நிச்சயமாக ஒரு தடையாக அமைந்துவிடும். ஆகவே நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கான கண்கள் தேவனுடைய வார்த்தைகளின் மூலமாகப் பெற்ற வாக்குறுதிகளுக்கு எப்பொழுதும் திறந்திருக்க வேண்டும். இந்தச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளுவதின் மூலமாக - காணமுடியாதக் காரியங்களை (இயற்கையாக அறிந்துகொள்ள முடியாத) விசுவாசிப்பதின் மூலம் வரும் மகிழ்ச்சியை நாம் பெறுகிறோம்.

## 17. விசுவாசத்தின் சோதனைகள் ஏன் அனுமதிக்கப்படுகிறது?

யாக்கோபு 1:3,4, 1பேதுரு 4:12,13

**F642 - F644 :-**

இக்காலத்தில் தேவன் புது சிருஷ்டிகளோடு வைத்திருக்கும் தொடர்பைப்பற்றி புரிந்து கொண்டிருந்தோமானால், இந்த தெய்வீக நிலையில் பூரணப்படக்கூடியவர்கள் சரியான நோக்கத்துடன் மட்டும் அல்லாமல், தவறானக் காரியங்களை செய்வதை விட சரியானக் காரியங்களை செய்ய விரும்புவார்கள் என்று நாம் மறந்துவிடக்கூடாது. மேலும் அவர்கள் பெற்ற அநேக அனுபவங்களினால் - நீதியானக் காரியங்களைச் செய்வதினால் வரும் ஆறுதல்களையும், நன்மைகளையும், தீமையினால் வரும் துன்பங்களையும், குழப்பங்களையும் பற்றி நன்கு அறிந்திருப்பார்கள். இதன் காரணமாகவே, புது சிருஷ்டிகள் விநோதமான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எல்லா வகைகளிலும், சொல்லப் போனால் தூதர்களைக் காட்டிலும் , நியாயத்தீர்ப்பின் நாளில் இந்த உலகத்திற்கு வரும் சோதனையைக் காட்டிலும் இவர்கள் அதிகமாக சோதிக்கப் படுவார்கள். நமக்கு தெரிந்தவரைக்கும் சாத்தானுடைய பேராசையினால் இந்த உலகத்தை தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் தேவனை விட்டு திரும்பும் வரைக்கும், எந்தப் பரிசுத்த தூதர்களும் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்று நாம் அறிவோம். ஆனால் சாத்தானுடைய மீறுதலினால், மனுக்குலம் வீழ்ச்சியடைந்து, சோதனைக்கு வாய்ப்பளித்தது என்று தெளிவாக உள்ள காரணங்கள் நம்மிடத்தில் உண்டு. இது விழுந்துப்போன தூதர்களுக்கு மட்டும் சோதனையாக அமையாமல், பரிசுத்த தூதர்களுக்கும் சோதனையாக அமைந்தது. ஏனெனில் தேவன் பொறுமையாக இந்தத் தீமைகளை அனுமதித்து, அவைகளை உடனடியாக அழித்துவிடாமல் இருப்பதை அவர்கள் கண்டபோது இவர்கள் யேகோவா தேவனுடைய வல்லமையின் மேல் வைத்திருக்கும் விசுவாசம் சோதிக்கப்பட்டது. இதைக் கண்ட அநேக தூதர்கள் விழுந்துபோன தூதர்களின் பாதையில் செல்ல தூண்டப் பட்டிருக்கவேண்டும். ஆனாலும், பரிசுத்தமான தூதர்கள் உண்மையில் தேவனிடம் விசுவாசம் வைத்தவர்களாக, நீதியான கோட்பாடுகளுக்கு முழு மனதோடு கீழ்ப்படிந்து நேர்மையாக வாழ்ந்தார்கள். கிறிஸ்துவின் மூலமாக நடக்கக்கூடிய மகத்தான தெய்வீகத் திட்டத்தைப்பற்றி முன்னதாகவே இவர்கள் அறிந்திருக்கிறார்கள். மேலும், வெகு சீக்கிரத்தில் கிறிஸ்து இயேசு மற்றும் மகிமையடைந்த சபையின் மூலமாக யேகோவா தேவன் தம்முடைய வல்லமை, பரிசுத்தம், அன்பு மற்றும் நீதியினால் நடப்பிக்கப்போகும் பிரம்மாண்டமான காரியங்களைக் கண்டு தங்களுக்குள் நம்பிக்கை கொள்வார்கள்.

எப்படியிருந்தாலும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் புது சிருஷ்டிகளுக்கு வரும் சோதனைகளின் அளவுக்கு பரிசுத்த தூதர்கள் சோதிக்கப்படுகிறதில்லை. மனிதனுடைய அபூரணமான நிலை பூரணப்படுவதற்கு விசுவாசம், பொறுமை, அன்பு மற்றும் வைராக்கியத்திற்கான தொடர்ச்சியான சோதனைகள் மரண பரியந்தம் அனுமதிக்-கப்படுகிறது. அதேபோல், மேசியாவின் யுகத்திலும், இருதயத்தில் முழுமையாக தேவனுக்கும், நீதியின் கோட்பாடுகளுக்கும் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்களா? என்று முற்றிலுமாக சோதிக்கப்படுவார்கள். ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தைப் போலிராமல், அவர்களின் எல்லா சூழ்நிலைகளும் நன்மைக்கு சாதகமாக இருக்கும். இதற்கு எதிர்மாறாக, அப்போஸ்தலர் சொன்னதுபோல, இக்காலத்தில், புது சிருஷ்டிகள் “தேவபக்தியாக நடக்க மனதாயிருக்கும் யாவரும் துன்பப்படுவார்கள்.” இப்படிப்பட்ட பாடுகளை மனப்பூர்வமாக, அனுபவிக்க முன்வந்து, தேவனுக்கும் அவருடைய கோட்பாடுகளுக்கும் உண்மையாக இருப்பதே தேவன் அங்கீகரிக்கும் விசேஷித்த குணங்களில் ஆதாரமாக இருக்கிறது. இந்த யுகத்தில் அவர் புது சிருஷ்டிகளோடு வைத்திருக்கும் உறவானது, அவர்களின் குணநலன்களில் முடிந்தவரையில், முழுமையாக பரிசுத்ததைக் கொண்டுவருவதேயாகும். தேவனுக்கென்றும், சத்தியத்தின்

நிமித்தமாகவும், மகிழ்ச்சியோடே துன்பப்பட்டு, பூமிக்குரிய எல்லா சௌகரியங்கள், மேன்மைகள், வேலையினால் அடையும் ஆதாயங்கள் மற்றும் ஜீவனையே பணையம் வைத்து சத்தியத்திற்கு ஊழியம் செய்பவர்களே இந்த நிலையை அடைவார்கள்.

தெய்வீகத் திட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு தத்துவத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததின் காரணத்தினால், தேவன் சிறு மந்தைக்கு அளிக்கும் நன்மைகளைக் குறித்து குழப்பம் அடைகிறார்கள். ஓர் உலோகத்தில் மென்மையாக ஒரு பொருளைச் செய்ய அது பல முறைகள் சூடாக்கப்பட்டு குளிரச்செய்வது போல, மனுக்குலம் மீண்டும் சீரமைக்கப்படும் - மிகப் பிரம்மாண்டமான பணிக்கு தேவனுடைய கருவிகளாகவும், பிரதிநிதிகளாகவும், ஆயத்தப்படுபவர்கள். இப்படிப்பட்ட அக்கினிமயமான சோதனைகளுக்கும், அதன்பின் வரும் அதற்கு எதிரான சூழ்நிலைகளுக்கு (குளிர்) அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். தீமை என்றுமே நன்மையை விளைவிக்காது. தேவன் என்றும் தீமைக்கும் மற்றும் செய்யப்படும் பாவங்களின் அளவிற்கும் மூலக்காரணர் அல்ல. மேலும், அவருடைய ஞானமும், வல்லமையும் அந்தத் தீமைகளின் பலன்களை நன்மைக்கு ஏதுவாக மாற்றுகிறது. எடுத்துக்காட்டாக, தேவன் சாத்தானை பாவம் செய்ய அனுப்பவில்லை. அவரை பரிசுத்தம், நேர்மை மற்றும் பூரணருமாக சிருஷ்டித்தார். மேலும், சுயாதீனத்தை விசேஷித்த ஆசீர்வாதமாகக் கொடுத்திருந்தார். இவைகளை அவர் தேவனுடைய தெய்வீகத் திட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தினதால், பரிசுத்தமாக இருந்த தூதன், சாத்தானாகவும் - தேவனுக்கு எதிராளியாகவும் மாறினான். உடனடியாக அவனை அழிக்க தேவன் வல்லவராக இருந்தார். ஆனால் இதை அனுமதிப்பதின் மூலம் வரும் தீமையான அனுபவங்களின் அநேகப் பாடங்களைத் தூதர்களுக்கு மட்டும் அல்ல மனிதர்களுக்கும் உள்ளடக்கியிருப்பதை அவர் முன்னறிந்திருந்தார். அதுபோல் மனுக்குலத்தின் மத்தியில் உள்ள பாவத்தை - தேவன் எந்த நேரத்திலும் அகற்ற வல்லவராக இருந்தும், காலப்போக்கில் அவர் அதை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய அனந்த ஞானத்தினால், மனுஷனுடைய கோபம், தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணும் என்று அவர் முன் அறிந்திருந்தார். ஆகவே பாவிகள் மற்றும் பாவத்தின் மேல் தேவனுடைய இறுதியான எச்சரிப்பைக் குறித்து தேவனுடைய பிள்ளைகள் பயப்படவேண்டிய அவசியமில்லை. தேவனுடைய திட்டத்தில், தீமையை அனுமதித்ததின் இரகசியத்தை வெளிப்படுத்தும் காலம், வெகு சமீபத்திலிருப்பதினால், பாவத்திற்கும், பாவிகளுக்கும் மிகுந்த செழிப்பாக இருக்கக்கூடிய காலம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. இவர்கள் தேவனுக்கு எதிராக செயல்படும் காரியங்களில் தீவிரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

## 18. விசுவாசத்தின் தற்போதைய வெகுமதிகள் என்ன?

1 கொரி 2:9-10

**F689(P2) - F692 :-**

தேவனுடைய பெயரிலுள்ள அர்த்தத்தின்படி தேவன் இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். அவர் சுயமாக வாழ்ந்து, முழு வல்லமை, முழு ஞானம், முழு நீதி மற்றும் முழு அன்பு செலுத்தும் நம்முடைய சிருஷ்டிகராக இருக்கிறார். விடாமுயற்சியோடு அவரைத் தேடுபவர்களுக்கு அவர் பரிசளிப்பார் என்று விசுவாசித்தோமானால், நிச்சயமாக அதை பெற்றுக்கொள்வோம். அவருடைய வார்த்தைகளை அறிந்து, புரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாக, அவைகளைத் தேடி புரிந்துகொண்டால், அதில் நாம் நம்பிக்கை கொள்ளலாம். நம்முடைய வாழ்க்கையை அதின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட விசுவாசத்தின் துவக்கமானது, தெய்வீக இரக்கத்தின் கீழ்

கிறிஸ்துவை நோக்கி செல்லும் பொழுது, தேவனிடத்தில் நாம் திரும்பி, மறுபடியும் அவருடைய இரக்கங்களைப் பெற்று அவருடன் ஐக்கியப்படும் புதிய வழியை நமக்கு ஆயத்தப்படுத்தும். இந்த விசுவாசத்தோடு, கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும் பட்சத்தில், நமக்குள் கீழ்ப்படிதல் அதிகரித்து, அதற்குத்தக்கதான ஆசீர்வாதங்கள் நம்மை வந்து சேரும். அப்போது நாம் புது சிருஷ்டிகளாக அங்கீகரிக்கப்படும் காரியங்கள் உறுதிப்படுகிறது. வளர்ச்சியடையக்கூடிய இந்த விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை உறுதியாகப் பற்றிக்கொண்டு, - தேவனுக்குச் சுதந்தரவாளிகளாகவும், இரட்சகரகாகிய கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரவாளிகளாகவும் நம்மை மாற்றுகிறது. இதன் விளைவாக பரிசுத்த ஆவியின் மூலம் நாம் ஜெநிப்பிக்கப்பட்டு , அபிஷேகிக்கப்பட்டு , குமாரர்களாக தத்தெடுக்கப்-படுகிறோம்.

மேலும் , இதன் வளர்ச்சியானது , பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள ஏழு விளக்குகளிலுள்ள வெளிச்சத்தைக் கண்டு, மகா ஆசாரியனுடைய விசேஷித்த ஊழியத்தை அறிந்துகொள்ள நமக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அதில் உள்ள சமூகத்தப்பம், தூபப்பீடத்தின் நற்சுகந்தம் மற்றும் திரைக்கு அப்பால் உள்ள கிருபாசனம் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் ஊழிய முறைமைகளை நமக்குக் காட்டுகிறது. கீழ்ப்படிதலோடுகூடிய விசுவாசமானது படிப்படியாக தேவனுடைய இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு, தெய்வீக வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டது போல உறுதிக்கு மேல் உறுதியடைந்து, தெளிவுக்கு மேல் தெளிவடைந்து, புதிய சிந்தைக்கு அடிப்படையான பகுதியாக அமைகிறது. மாம்ச சிந்தையிலிருக்கும் நிலையில் நாம் ஒருபோதும், வளர்ச்சியடைந்த இந்நிலையை புரிந்துகொள்ள முடியாது என்று அப்போஸ்தலர் தெளிவாக அறிவிக்கிறார் - “எழுதியிருக்கிறபடி - தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.” - 1கொரி 2:9

வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளின் மூலமாகவும், பரிசுத்த ஆவியின் செயல் முறைகளின் மூலமாகவும் , பரலோகக் காரியங்களில் உள்ள அநேக விலை மதிப்பற்றவைகளையும், முதலாம் உயிர்த்தெழுதலில் அடையும் மகிமைகளையும் காணலாம். அதற்குப்பின் - இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது - பூமியில் உள்ள முழு குடும்பங்களுக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதற்கான நீதியுள்ள அரசாட்சி - பாவம் மற்றும் தேவனுடைய மகிமைக்கும், அவருடைய தெய்வீகத் திட்டமாகிய அன்புக்கும் இசைவாயிராத தனிப்பட்ட பாவிகளின் முற்றிலுமான அழிவு - போன்றவைகள் நடைபெறும். புது சிருஷ்டிகள் இவையனைத்தையும் விசுவாசத்தின் கண்களினால் காண்கிறார்கள். சராசரி மனுஷருக்கு தெளிவாகவும் விளக்கமாகவும் புரிந்துகொள்ள முடியாத காரியங்களை மிகத் தெளிவாக இவர்கள் கண்டு அறிந்துகொள்வார்கள் என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார் - 1கொரி 2:9,10

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட விசுவாசமானது, இதுவரைக்கும் புது சிருஷ்டிகளின் இன்றைய ஆசீர்வாதங்களைக் காணக்கூடியதாக இராமல், ஒவ்வொரு நம்பிக்கையும், மகிழ்ச்சியும் வரக்கூடிய மகிமையைக் குறித்தே இருக்கிறது. உண்மையில், அப்போஸ்தலர் விவரிப்பதுப்போல நம்முடைய அனைத்து சந்தோஷங்களும், நம்பிக்கைகளும் இதன் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது. “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.” இப்படியாக காணப்படாதவைகளைக் குறித்த தேவனுடைய வார்த்தைகளை நாம்

விசுவாசிப்பதின் நிமித்தமாக அவைகளை நம்முடைய சிந்தையில் கண்டது போலத் தோன்றுகிறது. ஏனெனில், காணக்கூடியவைகள் அநித்தியமானது, காணக்கூடாதவைகள் நித்தியமானது என்று மிகத் தெளிவாக அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். ஆகவே விசுவாசத்தின் கண்களின் மூலமாகக் காணக்கூடியவைகள் மட்டுமே நித்தியமானது.

வரக்கூடிய ஆசீர்வாதங்களைப்பெற, இன்று விசுவாசத்தின் மூலம், பரிசுத்த ஆவியினால் நாம் பெற்று, தக்கவைத்திருக்கும் ஆசீர்வாதங்கள் எவ்வளவு அவசியமானது என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபும் குறிப்பிடுகிறார் - "ஒருவர் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." மேலும் - "சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்" என்று அடுத்த வசனத்தில் சொல்லுகிறார். ஏனெனில், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் என்றும், அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினைத்துக்கொள்ள வேண்டாம். ஏனெனில், இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான் என்று யாக்கோபு மிகத் தெளிவாகக் கூறுகிறார் - யாக்கோபு 5:8 ஆகவே விசுவாசமில்லாமல், நாம் எதையும் மேற்கொள்ளவோ, சமாளிக்கவோ முடியாது என்று யாக்கோபு நமக்கு தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். ஆகவே ஒவ்வொரு தேவ ஜனங்களும் விசுவாசத்தில் வளர்ச்சியடைவதற்கு, அப்போஸ்தலர்கள் செய்தது போல, தேவனிடத்தில் ஜெபிக்கவேண்டும் என்று வேத வசனங்கள் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்த ஜெபம் கேட்கப்படும் விதத்தில் நாம் ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஜெபங்கள் கபடற்றதாக இருந்தால், நிச்சயமாக நாம் தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் தேடி, அவைகளுக்குக் கீழ்ப்படிபவர்களாகவும் , அவருடைய பணியில் சந்தோஷப்-படுபவர்களாகவும், சகல பரிசுத்த ஆவியின் கிருபைகளை அணிந்து கொள்ளக்கூடிய-வர்களாகவும் இருப்போம். இப்படியிருக்கும் பட்சத்தில் நாம் உறுதியான விசுவாசத்தைப் பெற்றிருப்போம். அந்த விசுவாசத்தின் மேல் முழு நம்பிக்கையுள்ளவராக இருப்போம். இவைகளைச் செய்தால் நாம் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், குறித்தக் காலத்தில் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் - 11பேதுரு 1:10,11

**F686(P3):-**

நாம் இருக்கும் எந்தச் சூழ்நிலையிலும், விசுவாசத்தின் வழியாக மகா பரிசுத்தமான விசுவாசத்தைப் பெற்று, தேவனுடைய பிரசன்னத்தில் பிரவேசிக்க, அவருடைய கிருபாசனத்தண்டையில் சேர்ந்து, கிருபை பெற்று, தேவைப்படும் நேரத்தில் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

## 19. விசுவாசத்தினால் வருங்காலத்தில் நாம் பெறும் பயன் என்ன?

1 யோவான் 3:2, வெளி 2:10

**F693 - F694 :-** விசுவாசத்தின் கண்களும், காதுகளும் எந்த அளவிற்கு தெய்வீக வார்த்தைகளினால் பழக்குவிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்கு புது சிருஷ்டிகள் வருங்காலத்து மகிமைகளைக் குறித்து அறிந்துகொண்டு பாராட்டமுடியும். சராசரி மனிதர்களும், முழுமையாக தங்களை அர்ப்பணிக்காதவர்களும் இவைகளைக்

காணமுடியாது. வருங்கால ஆசீர்வாதங்களுக்கு அச்சாரமாக இன்று பெற்றுள்ள பரிசுத்த ஆவியை செயலாற்றி தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் வரைக்கும் இதை புரிந்துகொள்ள முடியாது. வருங்கால ஆசீர்வாதங்கள் வந்தடையும் நேரம் வரைக்கும், தேவன் பேரில் விசுவாசம் வைத்து, நீதிமானாக்கப்பட்ட நிலையில் - ஆசரிப்புக்கூடாரத்தில், லேவியர்கள் பிரகாரத்தில் தேவபணிகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், பரிசுத்த ஸ்தலத்தில் குத்துவிளக்கையோ, சமூகத்து அப்பங்களையோ பார்க்க அனுமதிக்கப்படாததுப்போல - இவர்களுக்கும் இந்த அறிவு அனுமதிக்கப்படுகிறதில்லை. பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் குத்துவிளக்கின் வெளிச்சம், சமூகத்து அப்பங்கள், தூபப்பீடம் மற்றும் அவைகளில் உள்ள காரியங்களைக் குறித்து லேவியர்கள் ஒருபோதும் காண்பதில்லை. ஆனால் அந்த ஸ்தலத்திற்குள் நுழையும் ஆசாரியர்களிடமிருந்து இவைகளைப் பற்றிய காரியங்களை இவர்கள் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

இப்படிப்பட்ட இராஜரீகமான ஆசாரியர்களாகிய புது சிருஷ்டிகளுக்கு அவருடைய நிரூபத்தில், அப்போஸ்தலனாகிய யோவான் - இக்காலத்தில் முழுமையான கிருபை, அறிவு, விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய பார்வையைப் பெற்றிருந்தாலும், மாம்சத்தில் இருக்கும்போது, வருங்காலத்து காரியங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளமுடியாது என்கிறார். "இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." - 1யோவ 3:2 ஆகவே இவைகள் மனித கற்பனைக்கும் எட்டாத ஒன்றாக இருப்பதினால், தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய விசுவாசத்தின் மூலம் பெற்றிருக்கும் அறிவில் திருப்தியடைந்திருக்கிறார்கள். எவ்வளவு விபரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்த மாம்சத்தை விட வருங்காலத்தில் பெறப்போகிற ஆசீர்வாதங்களும் மனித கற்பனைக்கு எட்டாதது என்று நிச்சயமாகத் தெரிகிறது. இந்த சபை தன்னுடைய ஆண்டவரைக் காணும்பொழுது, அவரை போலிருக்கும் என்று நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அவர் மாம்சத்தில் வந்த நிலையையோ, உயிர்த்தெழுந்த பின் சீஷர்களுக்குக் காட்சியளித்த நிலையையோ இங்கு குறிப்பிடப்படாமல், இயேசு இப்பொழுது இருக்கும் நிலைக்கு சபையோடு மாற்றப்பட்டு மகிமையடைவார்கள் என்று தெளிவாக சொல்லப்படுகிறது. இதுவே நமக்கு போதுமானது.

ஆனாலும், நம்முடைய ஆண்டவர் அந்தத் திரையை ஓரளவுக்குத் திறந்தார் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில், முதலாம் உயிர்த்தெழுதலின் விபரங்களைக் குறித்து ஒரு சுருக்கமான பார்வையை அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாக தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் - 1கொரி 15:41-44, அந்த அதிகாரம் முழுவதும், புது சிருஷ்டிகளுக்கு மிக ஆர்வமுள்ளதாக இருக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதலில் சபையாகிய சிறு மந்தை, ராஜரீகமான ஆசாரியர்களாக, பூரணப்பட்டு, கர்த்தரின் சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்கு மட்டும் அல்லாமல் இந்த உலகத்தில் வருங்கால நம்பிக்கைகளைக் குறித்தக் காரியங்களை விவரிப்பதினால் இந்த அதிகாரம் மிக சுவாரசியமாக இருக்கிறது. உண்மையில், பவுல் பரிசுத்தவான்களுக்கு மட்டுமே இந்த நிரூபத்தை எழுதினாலும், உலகத்தினைக் குறித்தும் எழுதியிருக்கிறார் ஏனெனில், இரண்டு உயிர்த்தெழுதலும் ஒரே விதமாக இருக்குமோ என்று வாசிக்கக்கூடியவர்கள் குழப்பமடையாதபடிக்கு அவர் உலகத்தில் உயிர்த்தெழுதலைக் குறித்தும் எழுதினார். இதினிமித்தமாக, தேவன் சபை ஜனங்களுக்கு பரலோகத்தில் விசேஷித்த ஆவிக்குரிய நிலையை வைத்திருக்கிறார். அதற்குப்பின் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் வெளிப்பட்டு, பொதுவான உலக ஜனங்களுக்கு கொடுக்கப்படும். முதலாம் உயிர்த்தெழுதலுக்கும்

(முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாக சபை ஜனங்கள் உயிர்த்தெழுவார்கள் - வெளி 20 : 6), இரண்டாம் உயிர்த்தெழுதலுக்கும் (அதற்கு பின்னாக, தேவனுடைய கிருபையை ஏற்றுகொள்ளும் மீதியிருக்கும் அனைத்து ஜனங்களும் உயிர்த்தெழுப்பபடுவர்) இடையில் இப்படிப்பட்ட வேறுபாடுகள் இருப்பதினால் இரண்டு உயிர்த்தெழுதலைப் பற்றி இந்தப் பாடத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க அப்போஸ்தலனாகிய பவுலை போல் பிரசங்கிக்க ஆலோசனை அளிக்கப்படுகிறது.

## 20. விசுவாசத்தில் இளைப்பாறுதல் என்பதன் பொருள் என்ன?

எபி 4:1-11

**F392 - F394 :-** புது சிருஷ்டிகளின் உறுப்பினர்கள் எப்பொழுது அல்லது எவ்வாறு விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள் என்று குறிப்பிடுவது அவசியமில்லை. ஆனால், எல்லா அதிருப்திகளும், பயமும் விரட்டப்பட்டு, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் அவர்களுடைய இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொண்டது எப்படி அல்லது எப்பொழுது என்று நாம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய பாவங்களை மூட, ஆண்டவராம் இயேசுவை நம்முடைய பிரதான ஆசாரியராக, தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார் என்று நாம் முழுமையாக ஏற்றுக்-கொள்ளும்பொழுது, இது துவங்குகிறது . மேலும் புது சிருஷ்டியின் தலையாகவும், ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரவாளியாகவும், நாம் அவரை அடையாளம் கண்டிருக்கிறோம். அதுவும் அல்லாமல், அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட இராஜ்யத்தில், அவருடைய உடன் சுதந்திரவாளிகளாக நம்மையும் தேவன் அழைத்திருக்கிறார். நாம் நம்மையே முழுமையாக ஒப்புக்கொடுத்து, இடுக்கமான வாசல் வழியாக மகிழ்ச்சியோடு அவர் நமக்கு வாக்களித்த வழிநடத்துதலோடு, அந்த இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, நாம் பரிபூரணமான இளைபாறுதல், அல்லது ஓய்வுக்குள் பிரவேசிக்கிறோம். அங்கு, நம்முடைய சொந்த வேலைகளிலிருந்து ஓய்ந்திருப்போம். நாம் நீதிமானாக்கப்பட வேண்டும் என்ற நம்முடைய எல்லா முயற்சிகளிலும், நாம் தேவனுடைய கிருபைகளைப் பெறுவதற்கு அபூரணமானவர்களும் , தகுதியற்றவர்களும் என்று நாம் அறிக்கையிடுகிறோம். மேலும், நாம் நம்மை தகுதிப்படுத்திக் கொள்வதற்கும் அபாத்திரராக இருக்கிறோம். ஆனால், கிறிஸ்து இயேசுவின் இரட்சிப்பின் மூலமும் “தேவைப்படும் ஒவ்வொரு பொழுதும் உதவிகளைச் செய்வேன்” என்ற அவருடைய வாக்குறுதியின் நிமித்தமாகவும் நாம் அந்தத் தெய்வீகக் கிருபையைப் பெற்று இயேசுவின் சீஷர்களாக - அவருடைய அடிச்சுவடுகளில் மரண பரியந்தம் நடக்க வாய்ப்பு பெற்றிருக்கிறோம்.

தேவன் அவருடைய கிரியைகளிலிருந்து ஓய்ந்திருப்பதுப்போல, நாமும் ஓய்ந்திருக்கிறோம் என்று அப்போஸ்தலர் பிரகடனப்படுத்துகிறார். மனிதனை தன்னுடைய சாயலாக சிருஷ்டித்து, தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலைகளை முடித்தபின் அவர் ஓய்ந்திருக்கிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம். அவர் தம்முடைய பூரணமான சிருஷ்டிப்பை பாழ்ப்படுத்துவதற்கு - பாவத்தையும், மரணத்தையும் அனுமதித்திருக்கிறார். அவர் இந்நேரம் வரைக்கும் அதை தடுக்கவோ, இதை செய்யக்கூடிய மிகப் பெரிய வஞ்சகனாகிய சாத்தானைத் தடுக்கவோ அல்லது முற்றிலுமாக அழிக்கவோ அவர் முயலவில்லை. தேவன் ஓய்ந்திருக்கிறார் - எல்லா வேலைகளையும் மேசியாவின் பொறுப்பில் கொடுத்துவிட்டு, அவர் அதை முடிப்பதற்குக் காத்திருக்கிறார். கிறிஸ்து

தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் என்றும், தேவனுடைய வேலைகளுக்கு (புது சிருஷ்டிகளாகிய நமக்கு மட்டும் அல்லாமல், அவருடைய தெய்வீக கிருபையை ஏற்றுக்கொள்ளும் - முழு உலகத்தின் மனுக்குலத்தையும் சீர் பொருந்தச் செய்வார்) முழுமையாக அவர் ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்றும், நாம் தெளிவாக விசுவாசிப்பதன் மூலம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம்.

புது சிருஷ்டிகளாகிய நம்முடைய ஓய்வு துவங்கிவிட்டது என்று நாம் தெளிவாக அறிந்திருக்கிறோம். ஆனால், முழுமையாக புது சிருஷ்டிகளின் இந்த இளைப்பாறுதலின் துவக்கத்தை நாம் சற்று பின்நோக்கிப் பார்த்தால் இன்று நமக்கு இலாபகரமாக இருக்கும். ஆண்டவர் மாம்சத்திலிருந்தபொழுது, அப்போஸ்தலர்கள் ஓரளவுக்கு அந்த இளைப்பாறுதலில் மகிழ்ந்தார்கள் என்று நாம் அறிவோம். ஆனால் அது முழுமையான ஓய்வு அல்ல. அவருடைய அன்பின் ஆழம், உயரம், அகலம் நீளம் இன்னதென்றும் அவர்கள் முழுமையாக அறியாத போதிலும், தங்களுடைய மணவாளன் தங்களோடிருந்ததினால் அவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். ஆண்டவர் மரித்துப்போன பொழுது, அவர்களின் இளைப்பாறுதலும், சந்தோஷமும், சமாதானமும் முடிவுக்கு வந்தது. “அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்...” என்று அவர்கள் எதிர்பார்த்ததினால், அவர்கள் அனைவரும் ஏமாற்றமடைந்தார்கள். அவர் மரணத்திலிருந்து எழுந்து, உயிர்த்தெழுதலை நிரூபித்தபின் அவர்களின் பயமும், சந்தேகங்களும் தளர்ந்து நம்பிக்கைக்கு வழி வகுத்தது. ஆனாலும், அவர்களின் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் முழுமையாக அவர்கள் திரும்பப் பெறவில்லை. அவர்கள் மிகுந்த குழப்பத்திலிருந்தார்கள். எப்படியிருந்தாலும், பரிசுத்த ஆவியைப் பெறும்வரை எருசலேமில் காத்திருக்கும்படி கட்டளைப் பெற்றிருந்தார்கள்.

மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருந்தார்கள் - எவ்வளவு நாட்கள்? அவர்கள் மொத்தத்தில் நாற்பத்தொன்பது நாட்கள் காத்திருந்தார்கள். அதை தொடர்ந்து ஐம்பதாவது நாள் வந்தது. அது யூபிலியின் ஓய்வு நாளாயிருந்தது. இயேசுவை ஏற்றுக்கொண்ட அனைவரும், தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கான ஒரு கிருபையின் வாக்குத்தத்தத்தைப் பூரணமாக தேவன் அன்று நிறைவேற்றினார். அவர்கள் பெந்தகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். இயேசு பாவிகளுக்காக மரித்து, அவர்களுடைய கண்களுக்கு மறைவாக அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், அவருடைய பலி அனைவருடைய பாவங்களுக்குப் பதிலாக யேகோவா தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர் செய்த கிரியைகளிலிருந்து ஓய்ந்திருந்தார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் அவருக்குள்ளும், அவர் மூலமாயும் நிறைவேற்றப்படும் என்பதை இந்த இளைப்பாறுதல் உறுதியளித்தது. இந்த இளைப்பாறுதல், பாவமன்னிப்பைப் பெறவும், தேவனோடு ஐக்கியப்படுவதற்கும் உறுதியளிக்கிறது. மேலும், இவர்களின் ஒப்பந்தத்தில் இவர்கள் உண்மையானவர்களாக நிலைத்திருந்து, கிறிஸ்துவின் வழிகளில் காத்து நடந்து, தெய்வீக சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும், உறுதிப்படுத்திக்கொண்டால் அவர்களின் இருதயம் பூரணமாக சுத்திகரிக்கப்படும். அப்பொழுது, கிறிஸ்துவுக்குள் வாக்களிக்கப்பட்ட விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும் சுதந்தரித்து, மகிமையான ஒரு பங்கை அடைவார்கள் என்றும் இது உறுதியளிக்கிறது.

பரிசுத்த ஆவியைப்பெற்ற புது சிருஷ்டிகள் அனைவரும் , நிழலான இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். இவர்கள் ஏழாம் நாள் ஓய்ந்திருப்பதை விட்டுவிட்டு, நிரந்தரமாக தங்களுடைய இருதயத்திலும், சிந்தையிலும், தேவனுடைய குமாரனுக்குள் விசுவாசத்தில் இளைப்பாறுகிறார்கள். விசுவாசத்திற்குள் இளைப்பாறுதல் ஒரு முடிவல்ல. மேலும், இது ஒரு மேன்மையான இளைப்பாறுதல் அல்ல. அவர்களுடைய ஓட்டத்தை சந்தோஷத்தோடு ஓடி முடித்த தேவனுடைய ஜனங்களுக்கான நிஜமான இளைப்பாறுதல் முடிவுக்கு வரும். இதற்கிடையில் விசுவாசத்தின் இளைப்பாறுதல் தொடரவேண்டியதாக இருக்கிறது. ஏனெனில், இனி இருக்கும் இளைப்பாறுதலுக்கான நம்பிக்கை இதுவே. இதை தக்கவைப்பதற்கு நம்முடைய சிந்தையிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தால் மட்டும் போதாது அவருடைய கிருபையின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். அப்பொழுது நாம் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க - அவருக்குள்ளும், அவருடைய வல்லமைக்குள்ளும் உறுதியாக நிலைத்திருப்போம். நாம் ஜெயிக்கக்கூடியவர்களாக ஊக்குவிக்க அவர் சித்தம் கொண்டிருக்கிறார் என்றும் நிஜமான யூபிலியில் நடக்கவிருக்கும் மகத்தான வேலைகளில் ஒரு பங்கைப்பெற நம்முடைய இளைப்பாறுதலும், நம்பிக்கையுமாக இருக்கவேண்டும்.

**R1841 –** "கானானுக்குள் பயணித்தல்"

இஸ்ரயேலின் நிழலான குணங்கள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். முதலாம் பகுதி ஆசரிப்புக்கூடாரத்தின் பணிகளில், முழு இஸ்ரயேல் பாளையம் இந்த உலகத்தையும், அதில் ஆசாரியத்துவம் ஆரோனையும் அவருடைய குமாரரையும், அதில் செலுத்தப்பட்ட பலிகள், நம்முடைய ஆண்டவராம் இயேசுவையும், அவருடைய சபையையும் அடையாளப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இரண்டாவது பகுதியில் தெரிந்துக் கொள்ளப்பட்ட முழு இஸ்ரயேல் ஜனங்கள், சுவிசேஷ யுகத்தில் தேர்வு செய்யப்பட்ட தேவ ஜனங்களையும், அவர்களுடைய பிரயாணத்தில் - தெய்வீக வழிநடத்துதல், பாவத்தின் கட்டுகளிலிருந்து ஆசீர்வதிக்கப்பட்ட கானானுக்குள் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தின் நிமித்தம் நீதிமானாக்கப்பட்ட நிலையில் பயணிப்பதை அடையாளப்படுத்துகிறது. யோர்தான் என்னும் மரணத்தைக் கடந்து, இன்னும் மகிமையான இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து, நித்தியமாக பாவமும், மரணமும் இல்லாத பரலோகக் கானானுக்குள் சென்றடைவார்கள்.

இரண்டாவது பகுதிக்கான விளக்கத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபிரேயர்களுக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிடுகிறார். (3:8-19, 4:1-2) இங்கு, எகிப்திலிருந்து கானானுக்குள் பயணித்த மாம்ச இஸ்ரயேலருக்கு நடந்த காரியங்களை மாதிரியாகக் கொண்டு, பரலோக கானானை அடையமுடியாத சபை மக்களை எச்சரிக்கிறார். அங்கு புறப்பட்ட அனைத்து ஜனங்களின் கீழ்ப்படியாமையினால், கானானுக்குள் பிரவேசிக்க தகுதி இழந்தவர்களாக வனாந்திரத்தில் மரித்துபோனார்கள் என்ற உண்மையை அவர் சுட்டிக்காட்டினார். இவர்களின் அவிசுவாசத்தினாலே, தேவனுடைய வழிகளை விட்டுவிட்டார்கள். தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலுக்கு எதிராக இவர்கள் முறுமுறுத்ததினாலே இவர்களின் பிரேதம் வனாந்தரத்தில் விழுந்தது. கடைசியாக - "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்." (எபி 4:3) என்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார்.

பரலோகக் கானான், மாம்சத்தின் திரைக்கு அப்பால் இருக்கும் மகிமையான ஆவிக்குரிய நிலையாகிய தேவனுடைய ஜனங்களுக்கான இறுதியான இளைப்பாறுதலைக் குறித்துப் பேசும்பொழுது, நித்தியமான இளைப்பாறுதல் கிடைப்பதற்கு முன் இந்த மாம்சத்தில் தேவனுடைய ஜனங்கள் பெறும் இளைப்பாறுதலைப்பற்றியும் பேசுகிறார். இதுவே - விசுவாசத்தின் இளைப்பாறுதல் - "விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்..." (எபி 4:3)

இந்த நிழலான காரியத்தில், நமக்குக் கொடுக்கப்படும் ஆசீர்வாதங்களைப்பற்றியும், வாய்ப்புகளைப்பற்றியும், ஆவிக்குரிய தேவனுடைய இஸ்ரயேலர்களின் மேன்மையான ஆவிக்குரிய பொறுப்புகளையும் மிகத் தெளிவாக ஆராயலாம். ஏனெனில், கானானுக்குள் பிரவேசிக்கும் நம்பிக்கையுள்ளவர்கள் இன்று நிச்சயமாக விசுவாசத்தில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறார்கள். (4:3) நம்முடைய பயணத்தைப் பொறுத்தவரையில், தேவனுடைய ஜனங்களுக்கான இளைப்பாறுதல் (4:1), துல்லியமாக அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லியபடி வனாந்தர பிரயாணத்தையும், அதில் தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலையும் குறிக்கிறது. சற்று யோசித்துப் பாருங்கள், 400 வருடங்கள் அடிமைகளாக இருந்த, ஆயிரக்கணக்கான புருஷர்களும், ஸ்திரீகளும், பிள்ளைகளும் சில நாட்களுக்குள்ளே இந்தப் பிரயாணத்தை மேற்கொள்ள ஆயத்தப்பட்டார்கள். ஆனால் இவர்கள் மிகக் குறைவான சௌகரியங்களோடு, வனாந்தரத்தில், அறியாத பாதையில், முற்பிதாக்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தை நோக்கி தொடர்ந்தார்கள். அவர்களை அநேக தேசங்கள் பகைத்தது. வழியில் அநேக வசதியின்மைகளையும், அபாயங்களையும் சந்திக்கவேண்டியதாக இருந்தது. இவ்வளவு காரியங்கள் இருந்தும் அவர்கள் பயப்படவேண்டிய அவசியமில்லாதிருந்தது, ஏனெனில் பரலோகத்தின் தேவன் அவர்களுக்கு முன் சென்று அவர்களை வழிநடத்துவதாக வாக்களித்திருந்தார்.

அதைப்போல் சபைக்கும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. உண்மையான சபை - உலகத்தை விட்டு பிரிந்து, தெய்வீக பாதுகாப்பும், வழிநடத்துதலின் கீழ் - வனாந்தரப்பிரயாணம் செய்த இஸ்ரயேல் ஜனங்களைப் போலிருக்கிறார்கள். (வெளி 12:6,14, லூக் 15:4, ஓசி 2:14, ஏசா 51:3, உன் 8:5) இதில் அநேகவிதமான ஆவிக்குரிய வளர்ச்சிகள் காணப்படுகிறது. அதில் கிறிஸ்துவுக்கு குழந்தைகளும், அந்த நிலையிலிருந்து வளர்ச்சியடைக்கூடியவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் தேவன் இந்தத் தீமை நிறைந்த உலகமாகிய வனாந்தரத்தில் நடத்தி வருகிறார். அவரே நமக்குக் கேடகமும், நம்முடைய வழிகாட்டியும், மகிமையும், பாதுகாப்புமாயிருக்கிறார். நாம் அவரிடத்தில் விசுவாசத்தோடு, அவர் காட்டும் வழியில் நடக்கவேண்டும். நம்முடைய அப்பமும், தண்ணீரும் நமக்கு நிச்சயம் கொடுக்கப்படும். அவர் நம் மத்தியில் இருக்கிறார் என்ற மகிழ்ச்சி நமக்குப்போதும். அப்பொழுது நமக்கு வாக்களித்த சுதந்தரத்தை தேவன் நமக்கு கையளிப்பார். அவிசுவாசத்தினால் மாம்ச இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் விழுந்ததுப்போல நாமும் விழாதபடிக்கு அவருடைய வழிநடத்துதலுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

இந்த நிழலைப்பற்றி மீண்டும் குறிப்பிடுகையில், அன்று தேவன் தம்முடைய ஜனங்களை வழிநடத்திய விதத்தில் நம்மையும் வழிநடத்துகிறார் என்று நம்முடைய சொந்த அனுபவங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தெரிகிறது. அவர் நமக்கு அநேக அனுபவங்களின் மூலமாக வழிநடத்தும் பொழுது, நாம் ஒழுக்கத்தைக் கற்றுக்கொண்டு, அதன் மூலமாக கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய குணங்கள் வளர்ச்சியடைகிறது. இதற்கு விசுவாசத்தோடு தன்னை ஒப்புக்கொடுப்பவர்கள் வாக்களிக்கப்பட்டதைப் பெற்றுக்

கொள்வார்கள், மற்றவர்கள் அபாத்திரராக போய்விடுவார்கள். நாமும் அபாத்திரராக போய்விடாதப்படி நாம் பெறும் அனுபவங்கள் எப்படியிருந்தாலும் சரி, அவைகளை தாழ்மையோடும், பொறுமையோடும், ஏற்றுக்கொண்டு, ஒழுக்கத்தையும், தேவனுடைய பிரமாணங்களையும் கற்றுக்கொண்டு, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதிபடுத்திக்கொள்வோம் - (கொலோ 1:12)

**R2534 (col- 2P1) :-**

மாம்ச இஸ்ரயேலுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சீனாய் மலையின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆவிக்குரிய இஸ்ரயேல் ஜனங்கள் இல்லாவிட்டாலும், அதில் சொல்லப்பட்ட ஓய்வு நாள் அவருடைய ஓய்வு நாள் அல்ல. அவருடைய ஓய்வு நாள் யூத ஓய்வு நாளைவிட பெரியதும், முழுமையானதும், பூரணமானதுமாக இருக்கிறது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் விசுவாசத்தில் ஓய்ந்திருக்கிறார்கள் - கிறிஸ்துவுக்குள் ஓய்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரின் நுகத்தை கழுத்தில் வைத்தவுடன், அவருடைய வாக்குத்தத்தங்களையும் , அவர்களின் ஆத்துமாக்களின் இளைப்பாறுதலையும் உணரலாம். (மத் 11:29) இதை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர் 4:3ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். “விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்.” நாம் அவரை முழுமையாக நம்புவதுபோல நாம் அவருக்குள் முழுமையாக இளைப்பாறுகிறோம். முழுமையாக விசுவாசிப்பவன், முழுமையாக இளைப்பாறுகிறான். குறைவாக விசுவாசிப்பவன், குறைவாக இளைப்பாறுகிறான். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் இறுதி இலக்கு - இன்று நாம் பெறும் அனுபவங்களின் மூலமும், முழுமையான இளைப்பாறுதலுக்காகக் காத்திருந்து, பூரணமாக அதை பெறுவதாகும். பூரணமான நிலையுள்ள இளைப்பாறுதல், தேவனுடைய ஜனங்களுக்கு இனி வருவதாக இருக்கிறது. “ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது.... ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.”-எபி 4:9-11

## 21. விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் பூரண நிச்சயம் என்பதற்கான விளக்கம் என்ன?

எபி 10:22 - துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

எபி 6:11- நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து......

விசுவாசத்தின் முழு நிச்சயமும் , நம்பிக்கையின் முழு நிச்சயமும் , சரியான நிலையில் உள்ள ஆண்டவரின் ஜனங்களுக்குரியதாக இருக்கிறது என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகிறார். இதே கருத்தை நம்முடைய தீர்க்கதரிசியும் குறிப்பிட்டிருக்கிறார் - “உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி...” - பிலி 1:5. இதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சில கிறிஸ்தவர்கள் இந்த விசுவாசத்தின் நிச்சயம் முழுமையாக அவர்களிடம் உள்ளதாக நம்புவது எப்படி? சந்தேகமில்லாமல், என்னுடைய வாழ்க்கை முழுவதும் அவருடைய கிருபையும், நன்மையும் என்னைத் தொடரும் என்றும்,

இறுதியில் தேவனுடைய கிருபையால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசித்து, அவரை நேசிப்பவர்கள் தேவன் தரவிருக்கும் மகிமையைப் பெற்றுக்கொள்வோம் என்று எப்படிக் கூறுகிறார்கள்? இவ்வண்ணமாகக் கோரும் அப்போஸ்தலரும், தீர்க்கதரிசியும், தேவனுடைய இரக்கத்தை முழுமையாகப் பெற்று, மற்றவர்கள் பெற்றிராத அளவுக்கு மிகுந்த சந்தோஷத்தையும், ஆசீர்வாதங்களையும், இருதயத்திற்குள் மேலான அமைதியையும் பெற்றிருக்கிறார்கள். இப்படியாக, விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் எண்ணிக்கையில் குறைவானவர்கள் மட்டுமே பிரவேசித்திருப்பதின் காரணம் என்ன என்று நாம் ஆராய்ந்து பார்ப்போம். இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க மற்றவர்களுக்கு இருக்கும் தடைகள் என்னவென்றும், அவைகளை நீக்க என்ன செய்யவேண்டும் என்றும் அதற்குள் அநேகர் பிரவேசித்து வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகளைப்பற்றி சற்று தியானிப்போம்.

## 22. விசுவாசத்தின் முழு நிச்சயத்தை நாம் பெற்றுக்கொண்டு அதை எப்படி தக்கவைத்து கொள்வது?

**R2353 :-** (போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்)

நம்முடைய காரியம் எதுவானாலும் சரி, மேலே சொல்லப்பட்டக் கோட்பாடுகள், சகலத்திற்கும் நேர்த்தியாகப் பொருந்துகிறது. தேவனுடன் உடன்படிக்கை செய்த ஜனங்களைப் பொறுத்த வரையில், விசுவாசத்தின் பாடமானது, சத்தியம், போதனைகள் மற்றும் உபதேசங்களின் மேல் விசுவாசமாக இருந்தால் மட்டும் போதாது, தேவன் மேலும், அவர் சொல்லிய வாக்குறுதிகளை அவர் நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார் என்றும், முழு நம்பிக்கையோடிருக்க வேண்டும். இந்த விசுவாசம் வருங்காலத்திற்கு மட்டும் அல்லாமல் நிகழ்காலத்திற்கும் பொருந்துவதாக இருக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசம் வரக்கூடிய மகிமையான காரியங்களைக் குறித்து மட்டும் சந்தோஷப்படாமல், தேவனுடைய கண்ணோட்டத்தில் மிகச்சரியாக தோன்றினதும், இப்பொழுது நமக்கு அனுமதிக்கப்பட்ட சகல பாடுகளிலும், சோதனைகளிலும், கஷ்டங்களிலும் களிக்கூருவதாக இருக்கும். ஆகவே அப்போஸ்தலர்கள் சொன்னபடி எல்லாவற்றிலும் மகிழ்ச்சியாக இருப்போம். "சகலத்திற்காகவும் தேவனை ஸ்தோத்தரியுங்கள்" - 1தெச 5:18, எபே 5:20

இந்த உண்மையான விசுவாசத்திற்கு , தொடர்ந்து தேவன் மேல் நம்பிக்கையாயிருப்பதே தகுந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுவின் அனுபவங்களில் இதை நாம் காணலாம். இந்த உலகத்தில் அவர் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றினார் என்பதை உணர்ந்தவராய், அவருடைய சகல காரியங்களிலும், தெய்வீக ஞானத்தால் வழிநடத்தப்பட்டார் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் தன்னுடைய பிதாவினிடத்தில் ஜெபிக்கும்பொழுதும், அவர் பெற்ற ஒவ்வொரு அனுபவத்தின் போதும், அநேக எதிர்ப்புகளை அவர் சந்தித்தப் போதும், அவர் தெய்வீக வழிநடத்துதலின் கீழ் இருந்ததை உணர்ந்தார். அவர் தன்னை முழுமையாக பிதாவினிடம் ஒப்புக்கொடுத்ததை அறிந்து, தன்னுடைய சித்தத்தை அல்ல, அவருடைய சித்தத்தை செய்யவே காத்திருந்தார். ஆகவே எல்லா சூழ்நிலைகளிலும், பிதாவாகிய தேவனின் வழிநடத்துதலை அவர் உணர்ந்திருந்தார்.

பிலாத்து நம்முடைய ஆண்டவருக்குப் பதில் அளிக்கையில் இந்த ஒரு காரியம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது -" பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது..." மேலும்,

அவருடைய பாடுகளை மற்றும் உபத்திரவங்களைக் குறித்து அவர் பேசுகையில் - "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்". உண்மையில், எல்லா காரியங்களிலும் பிதா தன்னை வழிநடத்துகிறார் என்பதை அவர் அறிந்திருந்தார் - அவர் சகலவிதமான துன்பங்களையும், பாடுகளையும் சகிக்க இந்த உணர்வே அவருக்குத் தைரியம் கொடுத்தது.

நம்மை நேசித்து, நமக்காக மரித்த அவருக்குள் ஜெயிக்க விருப்பமுள்ள ஒவ்வொருவரும் அவரைப்போலவே, தெய்வீக வழிநடத்துதலின் மேல் நம்பிக்கையாய் இருப்பது மிக அவசியம். தேவனுடைய அழைப்பின்படி நாம் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்துவிட்டோம் என்பதில் நாம் உறுதியாக இருந்தால், நமக்கு சகலமும் நன்மைக்காக நேரிடுகிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளையும், தேவன் நமக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதையும், அதில் நாம் பிரவேசித்து ஜெயிக்கும்பொழுது, நமக்காக ஆசீர்வாதங்களையும் வைத்திருக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும். - பிதாவின் பிரதிநிதியாகிய, நம்முடைய ஆண்டவராம் இயேசு, நாம் அனுபவிக்கும் சோதனைகளையும், பாடுகளையும் கண்காணித்து, இவ்வுலகத்தின் சாத்தானின் ஊழியக்காரர்கள் மூலம் நமக்கு அனைத்தையும் அனுமதிக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும். ஆகவே நம்முடைய எந்தவிதமான உலகக் காரியங்கள் நஷ்டமடைந்தாலும், அதை மகிழ்ச்சியோடே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அறிவை இதன் மூலம் பெறுகிறோம். ஆகவே நமக்கு இப்படிப்பட்ட சோதனைகளை ஏற்படுத்துபவர்களிடத்தில், அன்போடும், கனிவோடும், அவர்களை மன்னிக்கும் மனப்பக்குவத்தோடும் நடந்துக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவருக்கும் இப்படிப்பட்ட விசுவாசம் இருப்பதற்கு வாய்ப்பில்லை - இந்த உலகத்தைப் பொறுத்தவரையில் - ஒரு விசேஷித்த வகுப்பார் - சிறு மந்தைக்கு - மட்டுமே இந்த விசுவாசம் இருக்கவேண்டும். இவர்கள் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மேல் விசுவாசம் வைத்து, நீதிமான்களாகி, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக தங்களைப் பொருத்திக்கொண்டு, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவரோடு பாடுகளைச் சகித்து, அவரோடுகூட மகிமையடையக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

## 23. விசுவாசத்தின் உறுதியான அஸ்திபாரம் எது?

"நான் உங்களை கைவிடுவதே இல்லை" என்று தேவன் சொல்லிய வாக்கின் அடிப்படையில், "போதும் என்ற மனதோடுக்கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" என்று அப்போஸ்தலன் வலியுறுத்திச் சொல்லிய காரியத்தை நம்முடைய பாடத்தின் ஒரு பகுதியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆம், உண்மையில் தேவனுடைய பராமரிப்பையும், அவருடைய ஞானமும், கிருபையும் நம்மிடம் செயல்படுகிறதை உணரவேண்டும் என்பதே இதன் முக்கிய கருத்தாக இருக்கிறது - மேலும், நாம் நமக்காக தேர்வு செய்யும் காரியங்களைவிட தேவன் நமக்கு அனுமதிக்கிற காரியங்கள் சகலத்திலும் நேர்த்தியானதாக இருக்கிறது.

அப்போஸ்தலர் சொல்லும்பொழுது - "கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே" என்கிறார். தேவனுடைய தாழ்மையான ஜனங்களின் நுண்ணறிவுள்ள தைரியத்தைக் குறித்து, இந்த முழு உலகம் அநேக முறை ஆச்சரியப்பட்டிருக்கிறது. இவர்களின் தைரியத்திற்கும், பலத்திற்கும் காரணமாக இருப்பது - "தேவனே எங்கள் சகாயர்" என்றும், அவருடைய அனந்த

ஞானத்தினாலும், அன்பினாலும், சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார் என்றும், இவர்கள் தேவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையே காரணமாக இருக்கிறது.

இந்தக் காரியங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன் கொடுக்கப்படுகிறது? என்று சிலர் நினைக்கலாம். இதற்குப் பதிலாக ஆவியின் கனிகளாகிய அன்பு, மற்றும் இன்னும் பல காரியங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்திருக்கலாமே என்றும் நினைக்கலாம். ஆனால் இந்த பாடங்கள் இந்த காலத்திற்கு மிகப் பிரயோஜனமுள்ளதாக இருக்கும் என்று எண்ணி இதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று பதில் அளிக்கலாம். நம்முடைய தேவன், நம்மேல் வைத்த கிருபையினால், அநேகக் குருட்டாட்டமான தவறுகளை நம்மை விட்டு அகற்றிவிட்டு அவருடைய மகிமையான திட்டங்களின் தெளிவான விவரங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்று நாம் அறிவோம். இவர்கள் தேவனுடைய திட்டங்களை அறிந்துகொள்வதற்கு மட்டும் அல்லாமல், இந்தத் தெய்வீக சத்தியத்தினால், இவர்கள் மேலும் பரிசுத்தப்படுவதற்கு அவர் இவைகளை வெளிப்படுத்தி, “ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைய.” நம்மைத் தகுதிப்படுத்துகிறார். ஆகவே தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு வெறும் உபதேசங்களின் சோதனைகளை மட்டும் அனுமதிக்காமல், இந்த அறுவடையின் காலத்தில், சகோதரர்களின் ஆவியின் கனிகளின் அடிப்படையில் இவர்கள் மத்தியில் பிரிவுகள் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

நீங்கள் என்னுடைய சில காரியங்களை அறிந்துகொள்ளவில்லை என்றால், நீங்கள் ஒருபோதும் என்னுடையவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்றும், என்னைப் பற்றிய அறிவு உங்களிடம் போதிய அளவு இல்லாததினால், நீங்கள் என்னுடையவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்றும் தேவன் அவருடைய முடிவை எங்குமே எப்பொழுதும் சொன்னதில்லை. ஆனால், “கிறிஸ்துவின் சிந்தை (ஆவி) இல்லாத எவனும் தேவனை உடையவன் அல்ல” நாம் இதில் தெளிவாக இருந்தால், சிலுவையின் போர்வீரர்களாக, இரட்சணியம் என்னும் தலைச்சீராவை அணிந்து, விசுவாசம் என்னும் மார்க்கவசத்தை தரித்து, அன்பு மற்றும் சத்தியத்தின் நீதியைத் தரித்து, அவர் காட்டியப் பாதையில் நடப்போம், அப்பொழுது இடது புறமாக ஆயிரம்பேரும், வலதுபுறமாக பத்தாயிரம்பேர்கள் விழுந்தாலும் தீங்கு நம்மை அணுகாது - சங் 91:7, மத் 24:24, 2தெச 2:11

காலங்கள் சமீபித்திருப்பதால், இந்தப் பாடம் நமக்கு மிக முக்கியமானது என்று நம்பி, இதுவரைக்கும் இந்த ஆவியின் கனியை வளர்க்காமல் இருக்கும் தேவப் பிள்ளைகள், இந்தப் பாடத்திற்காக தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்து, தங்களுக்குள் விசுவாசத்தை வளர்த்து, தேவ இராஜ்யத்தில் நல்லதொரு பங்கைப் பெற “போதும் என்ற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்” என்ற வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு நடப்போம். ஒருவேளை நாம் இந்த உலகத்தின் ஆவியைப் பெற்றவர்களாக இருந்தால், வெகு சீக்கிரத்தில் மகா உபத்திரவத்தின் காலத்தைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும். போதும் என்ற மனமும், விசுவாசமும் தெய்வீகத்திற்கு மிக முக்கியமானது. இந்தக் குணங்கள் இல்லாமல் மற்ற ஆவியின் கனிகளை வளரச் செய்வது கூடாதக் காரியம். நம்முடைய இருதயத்தில் உலகத்தின் ஆவியினால் வளர்ந்திருக்கும் அதிருப்தி என்னும் களைகளும் நமக்குள் இருக்கும் பெலத்தையும், பக்தியையும் உறிஞ்சி விட்டு, அன்பு, சமாதானம், பொறுமை, சாந்தம், நீடிய பொறுமை, சகோதர அன்பு போன்ற குணங்களின் வளர்ச்சியைத் தடுத்துவிடும்.

**E229 - E230 :-**

ஒரு மனுஷனின் சிந்தை அல்லது ஆவி அவனுடைய வார்த்தைகளினாலும், நடத்தைகளினாலும் அறியப்படும், அதை போல தேவனுடைய சிந்தையை அவருடைய வார்த்தைகளின் மூலம் அறிந்துகொள்ளலாம். இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் வரும் அனைவரையும் (தங்களுடைய துர்க்கிரியைகளிலிருந்தும், செத்தக்கிரியைகளை விட்டு மனந்திரும்பி, விசுவாசத்தின் மூலம் சீர்ப்பொருந்துபவர்களை) அவர் ஏற்றுக்கொள்வதாக அவர் வாக்குறுதிக்கொடுக்கிறார். (எபி 7:25) ஆகவே நமக்குள் எழவேண்டிய கேள்விகள் என்னவெனில் - நான் எப்பொழுதுதாவது கிறிஸ்துவினிடமாய் இழுக்கப்பட்டேனா? - அவரை நான் என்னுடைய இரட்சகராக அடையாளம் கண்டுக்கொண்டு, அவருடைய நீதியின் வழியாக பிதாவாகிய தேவனை சேர்ந்து, அவருக்கு ஏற்றவனாக இருக்கிறேனா?

இதற்கான பதில் - ஆம் என்று இருக்கும் பட்சத்தில், நமக்குள் எழும் அடுத்தக் கேள்வி என்னவெனில் - நான் என்னை முழுமையாக ஒப்புகொடுத்திருக்கிறேனா? - என்னுடைய ஜீவன், நேரம், செல்வாக்கு மற்றும் அனைத்தும் தேவனுக்கு முழுமையாகக் கொடுக்கிறேனா?

இந்தக் கேள்விக்கும் ஆம், என்ற பதிலைச் சொல்லுவோமானால், நிச்சயமாகத் தேவன் அவருடைய ஒரே பேறானவருக்குள் நம்மை ஏற்றுக்கொண்டு, நம்மை அவருடைய குமாரர்களாகப் பாவிக்கிறார். மேலும், நாம் அவருடைய இருதயத்தின் சிந்தையை கூர்ந்து கவனித்தால், அவர் இன்னும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் கவனமாக இருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபை நம்மை தாங்கும் பொழுது, நாம் பெறும் அனுபவங்களினால், தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் நமக்குள் கட்டப்படக்கூடிய குணங்கள், ஒருபோதும் மாறாது. ஒருவேளை நம்முடைய இருண்ட காலங்களில் , பயமும் , சந்தேகமும் எதிர்ப்படும்பொழுது, நாம் தேவனுடைய வார்த்தையாகிய விளக்கை மட்டும் கையில் எடுத்து நம்முடைய இருதயம் தேவன் மேல் முழு விசுவாசத்தோடு இருக்கிறதா என்ற உண்மையை ஆராய்ந்து அறிந்துகொண்டால் போதும், நம்முடைய சந்தோஷமும், சமாதானமும் நம்மிடத்தில் வந்து சேரும். ஒரு வேளை "விலையேறப்பெற்ற இரத்தத்தின்" மேல் உள்ள விசுவாசம் தடுமாறுகையில், நாம் இதை உணர்ந்துக்கொண்டு, உடனடியாக அதை செப்பனிட்டு, மறுபடியுமாக நம்முடைய விசுவாசத்தை முபமையாக ஸ்தாபிக்கக்கூடியவர்களாக இருக்கிறோம் (எபி 10:22) ஆனால் ஒவ்வொருவரும் - "தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைப்போட்டு நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்" (யோவ 3:33) ஏனெனில் நம்முடைய தேவன் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர். தேவனுடைய ஜனங்கள் இந்த தெய்வீக கிருபையின் கீழ் வந்தபின் சமாதானமாக இளைப்பாறலாம். தேவனிடம் முழு மனதோடு உண்மையாக இருந்து, அவர்களுடைய சித்தம் தேவனுடைய சித்தத்தோடு இசைந்து இருந்து, அவருடைய தெய்வீக கற்பனைகளைக் கைக்கொண்டு, கீழப்படிதலோடிருக்கும் வரை நாம் சுகமாக இந்த விசுவாசத்திற்குள் இளைப்பாறலாம் - மொத்தத்தில் தேவனிடத்திலும், ஜனங்களிடத்திலும், அன்பாக இருக்கவேண்டும்.

இந்த சுவிசேஷ யுகத்தில் எவர் ஒருவர் தன்னை தேவனுடைய பிள்ளை என்று உணர்ந்து, தேவனுடைய வார்த்தைகளுக்கு உண்மையான சாட்சி அளிக்கிறார்களோ, அவர்கள் மெய்யான திராட்சச்செடியில் கொடிகளாக இருக்கிறார்கள் , அதாவது உண்மையான சபை வகுப்பாராக இருக்கிறார்கள். (யோவ 15:1) இப்படிப்பட்டவர்கள் உண்மையான சபையின் அங்கத்தினர்கள் என்று தேவனுடைய வார்த்தைகள் சாட்சியிடுகிறது. இந்தச்சாட்சி அவர்களின் ஆவிக்கும், சிந்தைக்கும் தேவன் அவருடைய

ஆவியினால் அவரின் வார்த்தைகளின் மூலம் சாட்சி கொடுக்கிறார். தேவன் பேரில் தொடர்ந்து விசுவாசம் வைத்து இயேசுவின் பாதையில் சந்தோஷத்தோடு அவரவருடைய சிலுவையை சுமக்க மனப்பூர்வமாக முன் வருபவர்கள் வெகு சீக்கிரத்தில், உண்மையாக சபை அங்கத்தினராக மாற்றப்படுவார்கள் என்று அதே சத்தியத்தின் ஆவி சாட்சிகொடுக்கிறது - அவர்களின் ஓட்டத்தை முடித்தபின், முதலாம் உயிர்த்தெழுதலாகிய, அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். பிலிப்பியர் 3:10

## 24. நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பது எது?

**F691 P2 :-**

"ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்." (யாக்1:5-8) தேவன் நமக்கு இன்று அளித்த பொக்கிஷங்களையும், வரவிருக்கும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு அவைகளை தக்கவைத்துக்கொள்வதற்கு விசுவாசம் எவ்வளவு முக்கியமானது என்று யாக்கோபு மிகத் தெளிவாகக் காட்டுகிறார். விசுவாசத்தில் உறுதியில்லாமல் நாம் ஒருபோதும் எதையும் ஜெயிக்கமுடியாது என்பதை அவர் வலியுறுத்துகிறார். ஆகவே, அனைத்து வசனங்களும், விசுவாசத்தில் கட்டாயமாக நாம் வளர வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. ஆகவே நாம் அப்போஸ்தலர்கள் ஜெபித்ததுப் போல ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் - "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்". இந்த ஜெபங்கள் கேட்கப்படுவதற்காக தேவன் அமைத்துள்ள வழிமுறைகளின் வழியாக நாம் ஜெபிக்கவேண்டும். இப்படி ஜெபித்தால், நாம் தேவனைத் தேடி, அவருடைய வார்த்தைகளை அறிந்துகொண்டு, அவைகளை கீழ்ப்படிய முயற்சித்து, அவருடைய ஊழியத்தில் மகிழ்ச்சியடைந்து, அவருடைய கிருபையின் ஆவியை தரித்துக் கொள்ளலாம். இப்படியாக விசுவாசத்தில் உறுதிப்படுவதினால், அவர்கள் என்றுமே தோல்வியைத் தழுவுவதில்லை - "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள், இவைகளை செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." - 2பேதுரு 1:10,11

**R1967 (col. 2 P5):-**

தேவனுடைய ஊழியத்தின், விசுவாசத்திற்கான பரிசுகளை எதிர்ப்பார்க்கவேண்டும் என்றும், தெய்வீக இரக்கங்களின் விசேஷித்த வெளிப்பாடுகள் மற்றும் நம்மிடத்திலும், மற்றவர்களிடத்திலும் கிறிஸ்துவ குணலட்சணங்களை வளர்க்க தடையாக இருக்கும் அனைத்து பிரச்சனைகளையும் தடைகளையும் அகற்ற வேண்டும் என்றும் லூக்கா 17:7-10 ம் வசனங்கள் காட்டுகிறது. நாம் இந்த வேலைகளைத் தொடர்ந்து நடத்தும் வரை தெய்வீக இரக்கங்களின் பரிசுகளை எதிர்ப்பார்க்கமாட்டோம். மேலும், அவைகளை நாம் பெற்றபின் நாம் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கான ஆதாரங்கள் என்று கருதாமல், இவையனைத்தும் நம்மேல் விழுந்த கடமை என்று நினைத்துக் கொள்ளவேண்டும். தேவனுடைய ஊழியக்காரர்களாக நாம் நம்முடைய முழு திறமைகளையும் செலவளிக்க வேண்டும். இதன் காரணமாக, நாம் பரலோக ஆசீர்வாதத்தையும், கிறிஸ்துவின்

பங்காளிகளாக இருக்கும் தகுதியையும், பெற்றுக்கொண்டோம் என்ற உணர்வுகளைப் பெறாமல் இருக்கலாம். நாம் நம்முடைய கடமையை மாத்திரம் செய்திருக்கிறோம். ஆனால், தேவன் நமக்காக ஆயத்தப்படுத்தியிருக்கும் அளவுக்கு அதிகமான ஐசுவரியமுள்ள கிருபைகளையும், அவருடைய ஊழியத்தையும் விரும்பி ஆவலோடு செய்பவர்களுக்காக வைத்திருக்கும் பரிசுகளும், நாம் எதிர்பார்த்திருப்பதை விட மிக அதிகமானது. நாம் எவ்வளவு நேர்த்தியாக வேலைகளை செய்தாலும், அதில் அநேக அபூரணமான காரியங்கள் தென்படும். அவைகள் ஒருபோதும், தேவனுக்கு முழு திருப்தியைக் கொடுக்காது. கிறிஸ்துவினால் முடிக்கப்பட்ட பூரணமான வேலைகள் நம்முடைய வேலைகளின் குறைபாடுகளை நிரப்பாவிட்டால் நம்முடைய கிரியைகள் மதிப்பற்றதாக இருக்கும்.

இப்படியாக, நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பது

(**a**) ஜெபம், (**b**)வேத வாசிப்பு, (**c**) தேவனுடைய வாக்குறுதிகளைத் தொடர்ந்து நினைவுக்கூருவது, (**d**) நம்முடைய அனுபவங்களைக் கவனிப்பது.

(**a**) ஜெபம் - இந்தப் பாடத்திற்குப் பின் விவரிக்கப்படுகிறது.

(**b**) வேத வாசிப்பு

**F315(1) :-**

கிரியைகள் மற்றும் நல்லொழுக்கமுள்ள குணங்களைக் காட்டிலும் போதனைகள் மற்றும் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். போதனைகளுக்கும், விசுவாசத்திற்கும் எந்தவிதமான மதிப்பில்லாத ஒரு காலமாக இருக்கிறது. நாம் இந்த கருத்தோடு ஒத்துப்போக முடியாது. ஏனெனில், திவ்விய வார்த்தைகளின் அடிப்படையில், விசுவாசம் முதல் இடத்தையும், கிரியைகள் இரண்டாவது இடத்தையும் பெறுகிறது. முதன்முதலில் தேவன் நம்முடைய விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்றவாறு பலனளிக்கிறார். ஆகவே நம்முடைய உறுதியான விசுவாசம் நம்முடைய பலவீனமான மாம்சத்தில் நம்மால் முடிந்த காரியங்களைச் செய்ய உதவி செய்யும். எல்லா வசனங்களிலும், இதுவே விசுவாசத்தின் கோட்பாடாகக் கொடுக்கப்பட்டுள்ளது . “விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதக் காரியம்”, “நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்” (எபி 11:6, 1யோவான் 5:4) சரியான விசுவாசமில்லாமல் ஒருவரும் இந்த உலகத்தை ஜெயிக்கமுடியாது . ஆகவே தேவனுக்குள்ளும் , அவருடைய வாக்குத்தத்தங்களுக்குள்ளும் விசுவாசத்தை நடைமுறைப்படுத்தி, அதை சரியாக புரிந்துகொண்டு, விசுவாசத்தில் வளர்ச்சியடையும் பொழுது, அவருடைய தெய்வீகத் திட்டங்களை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, போதனைகளும், கற்பனைகளும் மிக முக்கியமானது. இவைகள் தேவனைப் பற்றியும் அவருடைய திட்டங்களைப் பற்றியும் அறிந்துகொள்வதற்கு மாத்திரம் அல்ல, மாறாக அவைகளினால் நம்முடைய கிரியைகள், சிந்தைகள் மற்றும் அனைத்திலும் நாம் முழுமையாக பரிசுத்தப்படவேண்டும் என்பதே அதன் நோக்கமாக இருக்கிறது. “அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுப்போல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்”. (1யோவான் 3:3) இந்த வசனம் தெளிவாகக் குறிப்பிடுவது போல, ஒருவர் தன்னை சுத்திகரிக்க விரும்பினால், முதலில் தன்னுடைய இருதயத்தில் தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் தூண்டப்பட்டு, தன்னை சுத்திகரிக்க

வேண்டியதாக இருக்கிறது. அதாவது கிறிஸ்துவின் போதனைகளை முதலாவது அறிந்த பின்பு தான் நாம் சுத்திகரிப்பை படிப்படியாக நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவரமுடியும்.

(**c**) தேவனுடைய வாக்குத்தத்தங்களைத் தொடர்ந்து நினைவில் கொண்டு, அதை நமக்குரியதாக்கிக்கொள்ள ஜெபிக்க வேண்டும்.

**R2642 (col 2P7) :-**

விசுவாசக் குறைச்சலை நிறைவு செய்து, அந்த விசுவாசத்தை விருத்தி செய்ய நாம் என்ன செய்யவேண்டும்? "தேவனே எங்களுடைய விசுவாசத்தை விருத்தியாக்கியருளும்" என்று அப்போஸ்தலர்கள் ஜெபித்ததுப் போல நாமும் ஜெபித்து விட்டு, அந்த ஜெபத்திற்கு ஏற்றவாறு நம்முடைய இருதயத்தில் விசுவாசத்தை வளர்க்க வேண்டும் என்று பதில் அளிக்கலாம். இதற்கு தேவனுடைய வார்த்தைகளில் உள்ள வாக்குத்தத்தங்களை நாம் தொடர்ந்து நினைவுக்கூர்ந்து, நாம் தேவனோடு செய்த உடன்படிக்கையை அன்றாடம் புதுப்பித்துக்கொண்டு, நம்முடைய இருதயமும், உதடுகளும் ஒருமித்து காரியங்களைச் சிந்தித்து, செயல்பட்டு, தேவனுக்கு எல்லாவற்றிலேயும் நன்றியோடு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கவேண்டும். அவர் நமக்கு கொடுக்க சித்தமானக் காரியங்களை நாம் விரும்பி வேண்டி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(**d**) நம்முடைய அனுபவங்களைக் கவனித்துப் பார்த்து.

**R2643 (col 1P2) :-**

சோதனைகளும், பிரச்சனைகளும் எழும்பும்பொழுது, நாம் தேவனுடைய வாக்குறுதிகளை நினைவுக்கூர வேண்டும். இவைகளை தேவனே அனுமதித்திருக்கிறார் என்ற உணர்வும் நமக்குள் இருக்கவேண்டும். ஏனெனில், அவரோடு பலியினால் உடன்படிக்கை செய்தவர்களை அவர் நேசிக்கிறார். ஆகவே நாமும் அவரிடத்தில் முழுமையாக அன்புகூறும்பொழுது, நமக்கு நேரிடும் சகல காரியங்களும் நன்மைக்கு ஏதுவாகவே இருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. நமக்கு ஏற்படும் ஒவ்வொரு காரியங்களிலும், தேவன் நமக்குண்டானப் பாடங்களை வைத்திருக்கிறார். அதை பொறுமையோடு கற்றுக்கொள்ளும் பட்சத்தில் நாம் நிச்சயமாகவே நன்மையைப் பெற்றுக்கொள்வோம். இதுவே தேவன் நம்மை ஆசீர்வதிக்கக்கூடிய ஒரே வழியாக இருக்கிறது. அவரிடத்தில் அன்புகூர்ந்து, முழுமையாக அர்ப்பணிக்கக்கூடியவர்களுக்கு இவ்விதமான ஆசீர்வாதங்களை நிச்சயமாக தேவன் வாக்களித்திருக்கிறார். ஆகவே கிறிஸ்துவின் நிமித்தம் நாம் படக்கூடிய பாடுகளின் அடிப்படையில் நம்முடைய ஆசீர்வாதங்களை நாமே உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

எனவே நாம் ஒவ்வொருவரும் அப்போஸ்தலர்களின் வார்த்தையின்படி - நாம் பாவிகளாயிருக்கும் போதே தேவன் நம் மேல் வைத்த அன்பு அளவில்லாததினால், அவருடைய சொந்த குமாரனையே அவர் நமக்கு இரட்சகராகக் கொடுத்து, மேலும் அவர் நம் மேல் வைத்த அன்பை அவர் விளங்கச் செய்தார். மேலும், அவருடைய அன்பின் நிமித்தம் நம்மை நீதிமான்களாக்கியும் இருக்கிறார். நாம் நம்மை முழுமையாக ஒப்புவிக்கும் பட்சத்தில், சில நிபந்தனைகளின் அடிப்படையில் அவருடைய குடும்பத்தின் உறுப்பினராகவும் நம்மை ஏற்றுக்கொள்கிறார். ஒருவர் தேவனுடைய சிந்தைனைகளுக்கு இசைவாக இருக்கும் பட்சத்தில் அவருக்குள் இப்படிப்பட்ட நற்கிரியைகளை துவங்கின தேவன், அந்த தனிநபர்களுக்குள், அதை முற்றிலும் முடிக்க வல்லவராகவும் இருக்கிறார்.

தேவன் என்றும் மாறாதவர். அவர் சொன்ன காரியங்கள் எதுவும் மாற்றப்படுவதில்லை. ஆகவே நம்முடைய அர்ப்பணிப்பு உண்மையாக இருக்கும் பட்சத்திலும், நம்முடைய சித்தத்தை நினைக்காமல், அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் பட்சத்திலும், அவருடைய வாக்குத்தத்ததை நாம் நினைவுக்கூறும் பொழுது, இன்று நாம் அவருடைய பாதுகாப்பையும், வழிநடத்துதலையும், பெறுவது உறுதியான ஒன்றாகும். தேவன் மேல் நாம் வைக்கும் இந்த நம்பிக்கையே, விசுவாசத்தினால் நமக்கு கிடைக்கும் மாபெரும் வாக்குறுதியாகும்.

## 25. உங்களுடைய விசுவாசத்தை அதிகரிக்க இன்றைய சத்தியங்களின் சில முக்கிய அம்சங்களைக் கூறவும்?

## 26. கிரியைகளுக்கும், விசுவாசத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

யாக் - 2:14

**R3586 (col. 1 P2.3) :-**

யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டங்களோடு தொடர்புள்ள ஒவ்வொரு வேத வசனங்கள் மற்றும் வசனங்களிலுள்ள உண்மைகளின் அடிப்படையில் நமக்கு ஒரு தேர்வு உண்டாயிருக்கிறது. நாம் எதை இழந்தாலும், சுயத்தை வெறுத்தும், நம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தும், தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பித்தும், இந்த ஒரு தேர்வில் வெற்றிப்பெற விரும்புகிறோம். அப்போஸ்தலர்கள் சொல்வதுப் போல் - “அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.” (பிலி 2:12, உன் 2:22) இருந்தாலும், இந்த நற்கிரியைகளெல்லாம் “புது சிருஷடிகளுக்குரியதாக” இருக்கிறது. - கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு சம்பந்தப்பட்டதே தவிர நம்முடைய மாம்சத்தினாலானதல்ல. இவையனைத்தும் தேவனுடைய கிரியைகளாக இருக்கிறது, ஏனெனில், அவருடைய வார்த்தைகள், நமக்குள் பெற்றிருக்கும் தேவ ஆவியினால் செயலாற்றப்படுகிறது - “ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.” பிலி 2:13, எபே 3:20

எப்படியிருந்தாலும், நாம் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. நம்முடைய நீதிமானாக்கப்பட்ட நிலைமை, நம்மை அழைத்த அழைப்பு, அல்லது தேவனுடைய இராஜ்யத்தில் நமக்களிக்கப்படும் மேன்மையான நிலை அனைத்துமே, நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளாமல், நாம் வைத்திருக்கும் எளிமையான விசுவாசத்தின் அடிப்படையிலேயே நாம் பெற்றிருக்கிறோம். நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய சமாதானத்தைப் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் எந்த வேலைகளை செய்வதற்கு முன்னும் நாம் அவருடைய பார்வையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோமா என்று நாம் முதலில் நிதானிக்க வேண்டும். இப்படியாக நாம் நம்முடைய அழியக்கூடிய சரீரங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்து, அவருடைய ஒவ்வொரு வேலைகளிலும், முழு ஈடுபாடோடு கிரியைகளை துவங்கும் பொழுது, அவருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படும். அதற்குப் பின் நம்முடைய பலியின் ஜீவியம் துவங்கும், சுயக்கட்டுப்பாடு அதிகரிக்கும், இந்த உலகத்தை மேற்கொள்ள துவங்குவோம், இந்த உலகத்தோடும், மாம்சத்தோடும், பிசாசோடும் போர் புரிய துவங்குவோம். நம்முடைய இருதயங்களில் இந்த போர்களில் நாம் ஜெயிக்கவேண்டும் (நாம் மாம்சத்தில் பூரணப்படாமலிருந்தாலும்). இல்லாவிட்டால் நம்முடைய தேர்ந்தெடுத்தலை உறுதிப்படுத்தவும் முடியாது, நமக்காக தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை

கிரயத்திற்கு வாங்கி, தன்னுடைய பங்காளிகள் என்று நம்மை அடையாளப்படுத்தும் அந்தக் கீரிடத்தையும் பெற முடியாது.

**R2847 (col. 1P5 – col. 2 P1) :-**

ஆபிரகாமின் விசுவாசத்திற்கு ஆதாரமாக அவருடைய அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததின் அடிப்படையில் - "ஆண்டவரே, என்னுடைய விசுவாசத்தின் நிமித்தம் நீர் என்னை ஆசீர்வதித்து, பாபிலோனிலும், கல்தேயாவிலும், என்னை பயன்படுத்தி என்னுடைய விசுவாசத்தை அறிந்துகொள்ளும் என்று எவ்வளவு அவர் மன்றாடியிருந்தாலும் , பயனற்றதாக இருந்திருக்கும், இதை போல இன்றைக்கும் அநேக ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள், இதே கோணத்தில் சிந்திக்கிறார்கள். இது மிகவும் தவறான ஒன்றாகும். தேவன் நம்முடைய இருதயத்தை பார்ப்பது உண்மைதான், ஆனாலும் அவர் நம்முடைய அபூரணமான கிரியைகளை அல்ல, அவரிடத்தில் நம்மை சேர்க்கக்கூடிய நம்முடைய விசுவாசத்தையே அவர் கவனிக்கிறார். இந்த விசுவாசம் அதிகரிக்கும்பொழுது தானாகவே, கிரியைகள் பூரணப்படுத்தப்படுகிறது. மேலும், நாம் அதிகமான விசுவாசமுள்ளவர்களாக இருந்தும், கிரியைகளைச் செய்யாமல் போனால், நாம் கொண்டிருக்கும் விசுவாசம் வெகு சீக்கிரத்தில் மரித்து விடும். நாம் விழுந்துப்போன மனுக்குலமாக இருப்பதால், தேவன் நம்மிடத்தில் பூரணமானக் கிரியைகளை எதிர்பார்ப்பதில்லை. ஆனால் நீதிமானாக்கப்பட்ட நிலையில் தேவனுக்கு முன் நிற்பவர், தன்னுடைய விசுவாசத்தின் மூலம் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கவேண்டும், நாம் பெற்ற விசுவாசத்திற்கு ஏற்றவாறு கிரியைகளைச் செய்யாவிடில், நம்முடைய விசுவாசம் செத்ததாகிவிடும். - "அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" - யாக் 2:17

நீதிமானாக்கப்பட்ட நிலைமை ஓர் இலவசமான பரிசாக இருக்கிறது - "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" - கிறிஸ்துவின் ஈடுபலியினால், கிறிஸ்துவின் மூலம் தேவன் நமக்கு கொடுத்தப் பரிசாகும். ஆனால் இந்த வாய்ப்பு, நாம் பரிசுத்தமடைந்து, ஜீவபலி செலுத்த பயன்படுத்தப்பட்டால் மட்டுமே இதன் விளைவுகள் பலனுள்ளதாக இருக்கும் பட்சத்தில் நாம் - "தேவனுடைய கிருபையை ... விருதாவாய்ப் பெறவில்லை..." என்பதை நிரூபிக்கலாம் - எபே 2:9, 11கொரி 6:1

## 27. யார் இந்த "விசுவாச வீட்டார்"?

கலாத்தியர் 6:10 - "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்"

**R2740 [col.1p1 – col.2p2] :-**

கேள்வி : ஆண்டவர் நம்மை நன்மை செய்யக் கட்டளையிட்டிருக்கிறார், "விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கு". யார் இந்த விசுவாசக் குடும்பம்? இவர்கள் உடன்படிக்கைப்பண்ணின பரிசுத்தவான்களா? அல்லது நீதிமானாக்கப்பட்ட வகுப்பினரா அல்லது பரிசுத்தப்பட்டுக் கொண்டிருப்பவர்களா? அல்லது முழுமையாகப் பரிசுத்த-மடைந்தவர்களா?

பதில் - வசனங்கள் கூறுகிறபடி, தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கையில், "கிறிஸ்துவின் சபை" என்பது இயேசு கிறிஸ்துவுக்குள் பரிசுத்த-மாக்கப்பட்டவர்களையே குறிக்கும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதாவது, விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, அதற்கு மேல், தங்களைச் சுத்திகரிக்கும் முயற்சியில் உடன்படிக்கைச் செய்பவர்கள்.

ஆனால் "விசுவாசக் குடும்பத்தினர்" மேலும் அதிக எண்ணிக்கை உள்ளவர்கள் - தங்களுடைய பாவங்களிலிருந்தும், அதன் பலன்களிலிருந்தும் விடுபட, இயேசுவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் - இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்கள், கடும் முயற்சிகள் எடுத்து, அவருடைய நீதியின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த விரும்புவோர்கள் சகல பரிசுத்தவான்கள் மேல் வைத்திருக்கும் அன்பையும், அரவணைப்பையும் வெளிப்படுத்த வேண்டும். இவர்கள் மேல் மட்டும் அல்ல நீதியின் கோட்பாடுகளின் கீழ் இருக்கும் விசுவாசிகள் அனைவர் மேலும் இந்த அன்பை வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுது நாம் இந்த உலகத்திற்கு மரித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக, அவரோடு புதிய ஜீவியத்தில் நடந்து, வருங்காலத்தில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இராஜ்யத்தில் அவருடைய பங்காளிகளாக இருப்போம்.

## 28. யாக்கோபு 5:14 முதல் 16 வசனங்களின் விளக்கம் கூறவும்

"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."

**F637[P2] – F638[1] :-**

புது சிருஷ்டிகள் தங்களுடைய உடல் நல குறைவுகளிலிருந்து நலம் பெற, தெய்வீக வல்லமையை சார்ந்திருக்க வேண்டும் என்பதற்கு இந்த வேதப்பகுதி மற்றும் மாற்கு 16:17,18 ம் வசனங்களே ஆதாரமாக இருக்கிறது. மாற்கு சுவிசேஷத்தில் உள்ள இந்த வசனங்கள் கிரேக்கப் பிரதிகளில் காணப்படுவதில்லை என்றும், இவ்வசனங்கள் ஐந்தாம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டவைகள் என்றும் நாம் எளிதில் விட்டு விடலாம்.

யாக்கோபின் வார்த்தைகளைப் பொறுத்தவரையில் - இந்த வியாதிகள் அனைத்தும் பாவத்தினால் வருகிறதாக பதினாறாம் வசனத்திலிருந்து நமக்கு குறிப்புகள் காணப்படுகிறது - இது எளிதாகத் தோன்றினாலும், சபையின் மூப்பர்களை வரவழைக்கும் அளவிற்கு மிக கொடூரமாகவே இருக்கிறது. இவைகள் அனைத்தையும் பார்க்கும்பொழுது, வியாதிப்பட்டவர், அதாவது அந்தக் குறிப்பிட்ட பாவி தேவனுடைய ஐக்கியத்தை துண்டிக்கும் அளவிற்கு பாவம் வளர்ந்திருப்பதை காட்டுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், பாவங்களுக்காக மனம் வருந்தி, மன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது - "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" - (வசனம் - 15) என்று வாசிக்கிறோம்.

## 29. விசுவாசம் மற்றும் நம்பிக்கைக்கும் அடையாளமாகச் சொல்லப்படும் கேடயம் மற்றும் நங்கூரத்திற்கும் உள்ள தொடர்பின் முக்கியத்துவம் என்ன?

எபே 6:16 "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்."

**F657 [P5] :-**

சாத்தானின் பொறி பறக்கும் அம்புகளிலிருந்து காப்பதற்கு விசுவாசத்தின் கேடயம் கட்டாயமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்”, “தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் ஜெயம், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.” - எபி 11:6, 1யோவான் 5:4

எபி 6:19 - அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.

**R3109 [col.1P4,5] :-**

தேவன் ஒருபோதும் அவர் செய்த உடன்படிக்கைகளை முறிக்கமாட்டார் என்றும், எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்றபடி அவர் அதை மாற்றவோ, திருத்தவோ, மாட்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கிற உடன்படிக்கையின் - வாக்குத்தத்தங்கள் நமக்கு உறுதியளிக்கிறது. ஆகவே நாம் நம்பிக்கையில் இளைப்பாறிக்கொண்டு, இந்த உலகத்தின் சார்பாக நமக்குள் நல்ல கிரியைகளைத் துவங்கினவர், அதை முடிக்கவும் வல்லவராக இருக்கிறார் என்று அதிக உறுதியோடு அவருடைய சித்தத்திற்கு இசைவாகச் செயல்படுவோம். என்றும் மாறாத நாம் பெற்றிருக்கும் இந்தத் தெய்வீக உடன்படிக்கைகளின் அறிவு, தேவன் மேல், நாம் வைத்திருக்கும் நம்பிக்கையையும், விசுவாசத்தையும், அதிகரித்து ஒவ்வொரு சோதனைகளிலும், துன்பங்களிலும், இன்றையக் காலங்களில் வரும் ஏமாற்றங்களிலும் - சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்ற உறுதியான ஆறுதலைக் கொடுக்கிறது அல்லவா, நாம் பெறும் மகிமை, கனம், அழியாமைக்கு மட்டும் அல்ல இந்தத் தெய்வீகத் திட்டத்தில் முழு மனுக்குலமும் பெறப் போகிற ஆசீர்வாதங்களுக்காகவும் இவைகள் சம்பவிக்கிறது என்று நமக்கு உறுதியளிக்கிறது அல்லவா? நிச்சயமாக, அல்லேலூயா, எப்படிப்பட்ட இரட்சகரை நாம் பெற்றுள்ளோம்.

அப்போஸ்தலர்கள் புதிய ஏற்பாட்டில், இந்த வாக்குத்தத்தங்களைக் குறித்து விரிவாக விவரித்தக் காரியங்களின் சாராம்சத்தை இப்பொழுது நம்முடைய சிந்தையில் கூட்டிச்சேர்த்துப் பார்த்தால், இனிவரும் ஜீவனைக் குறித்து மட்டும் அல்ல, இப்பொழுது உள்ள ஜீவனைக் குறித்தும் உறுதியளிக்கக் கூடியதாக இருக்கிறது. இவைகள் நமக்கு புதிய சந்தோஷத்தையும், புதிய தைரியத்தையும், புதிய வைராக்கியத்தையும், இந்த உலகத்தில் - நம்முடைய குடும்பம் , நண்பர்கள் , வேலைகளைச் செய்வதற்கு புத்துணர்ச்சியும், எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனோடு நல்லுறவையும் இந்தக் காலத்தில் பெறுவதற்கு வாய்ப்பளிக்கிறது. மேலும், சுவிசேஷத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிதான, கிருபையுள்ள நம்பிக்கையின் மேல் நமக்கு உறுதியான விசுவாசத்தை ஏற்படுத்துகிறது மற்றும் தேவன் நமக்குக் கொடுக்க விரும்பும் அனைத்தையும், அதாவது அவருடைய வல்லமையை நாம் சிந்திப்பதற்கும், கேட்பதற்கும் அதிகமாக அவர் கொடுக்ககூடியவராக இருக்கிறார்.

## 30. விசுவாசம் மற்றும் அறிவுக்கும் உள்ள தொடர்பு ஆயிர வருட ஆட்சியில் எப்படிப்பட்டதாக இருக்கும்?

**R2677[col.1 P5,6] :-**

இந்த சுவிசேஷ யுகத்தில் “விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்” என்று சபை பெற்றுள்ள தகுதியைப்போல் (பழைய ஏற்பாட்டின் நீதிமான்களும் இப்படியாக

நீதிமானாக்கப்பட்டிருந்தார்கள்.) ஆயிரவருட ஆட்சியில் காணப்படுவதில்லை, அது அக்காலத்தில் தேவைப்படுகிறதுமில்லை. ஏனெனில் நாம் வாழக்கூடிய இக்காலத்தைக் காட்டிலும், அக்காலத்தின் சூழ்நிலைகள் முற்றிலுமாக வேறுப்பட்டிருக்கும். நாம் இப்பொழுது “தரிசித்து நடவாமல் , விசுவாசித்து நடக்கிறோம்”, - இப்பொழுதும் விசுவாசத்தினால் மட்டுமே தேவனுடைய திட்டங்களையும், அவர் தரும் வெகுமதிகளையும் அறிந்துகொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆனால் ஆயிர வருட ஆட்சியில், விசுவாசத்தின் யுகம் முடிந்தவுடன், அனைவருக்கும் இந்த அறிவை மிகத் தெளிவாக புரிந்துகொள்ளக்கூடிய காலம் துவங்கும். தவறுகள் இன்றி சகலவிதமான ஆதாரங்களோடு சத்தியம் வெளிப்படுத்தப்படும். “அங்கு பேதையராயிருந்தாலும் திசைக்கெட்டுப் போவதில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.” இத்தகைய அறிவை இந்த உலகம் பெற்றபின் ஒருவரும் தன் அயலானுக்குத் தேவனைப்பற்றி அறிவிக்கவேண்டிய அவசியமில்லை.

நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை செயல்முறைப்படுத்துவதில் வித்தியாசங்கள் உண்டு. இன்று நாம் அநேககாரியங்களை வேத வசனங்களின் மூலம் விசுவாசிக்கிறோம். அதே காரியங்களை ஆயிர வருட ஆட்சியில் முழு மனுக்குலமும் நம்பும். ஆனால் நாம் இன்று விசுவாசிப்பதுப்போல் அல்ல, அவர்கள் அதற்கான ஆதாரங்களைக் காண்பார்கள். அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளுக்கும் இடமில்லாமல், காணக்கூடிய காரியங்களை நம்பவேண்டிய கட்டாயத்தில் இருப்பார்கள். எடுத்துகாட்டாக *ஶ*“நம்முடைய கடந்த காலப்பாவங்கள் அனைத்தையும் மன்னித்து, இன்று நாம் தேவனுடையப் பார்வையில் நீதிமான்களாகப் பாவிக்கப்படுகிறோம்.” ஆகவே நம்முடைய சரீரங்களிலும், சிந்தையிலும் இருக்கக்கூடிய பெலவீனங்களை நாம் தொடர்ந்து பரிசோதித்தால் நமக்குள் பாவங்கள் இருப்பதை நாம் அறிந்துகொள்ளுகிறோம். நம்முடைய பாவங்கள் அனைத்தும் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது. சபை ஜனங்களின் இந்த மாம்ச சரீரம் முழுமையாக அழிவைக் காணும் வரை இந்தத் தற்காலிகமான மூடல் தேவைப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் இவர்கள் முதலாவது உயிர்த்தெழுந்து, பூரணமான சரீரங்களைப் பெற்று மகிமையடையும் பொழுது, முற்றிலுமாக பாவத்திலிருந்து விடுதலைப் பெறுவார்கள். ஆனால் இன்று நம் அனைவரின் பாவங்களும் மூடப்பட்டிருக்கிறது என்று விசுவாசிக்க வேண்டும். இதை நாம் விசுவாசிக்கும் பட்சத்தில், தேவன் நமக்களித்திருக்கும், உன்னதமான அழைப்பை ஏற்றுக்கொண்டவர்களாக, மகிமையையும், அழியாமையையும் பெற்றுக்கொள்ள நம்முடைய உலகப் பிரகாரமான ஆசைகளையும், இச்சைகளையும் வெறுக்கிறோம். இவ்வனைத்துக் காரியங்களையும் நாம் விசுவாசக் கண்களினால் மட்டுமே காண முடியும். இந்த ஓட்டத்தை ஓடும் அனைவரும் விசுவாசத்தைத் துவக்கினவரும், முடித்தவருமாகிய இயேசுவை மட்டும் கவனித்தால் போதாது , அந்த நீதியுள்ள நியாயதிபதி விசுவாசமுள்ளவர்களுக்கு வைத்திருக்கும் நீதியின் கிரீடத்தையும் கவனிக்க-வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படியாக, நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலமே, விசுவாசத்தின் மிகச் சிறந்த காலமாக இருக்கிறது. அவருடைய வாக்குத்தங்களின் மேல் உள்ள விசுவாசத்திற்கு நாம் நிச்சயமாகப் பலன் பெறுவோம்.

**F106 [ P3 - F107] :-**

உண்மையில், நாம் பெற்றிருக்கும் தற்காலிகமான நீதிமானாக்கப்படுதலை, நிரந்தரமாக மாற்றுவதற்கு விசுவாசம் மிக அவசியமாக இருக்கிறது. ஏனெனில், விசுவாசிக்காமல் தேவனைத் தரிசிப்பது கூடாதக் காரியம் என்று வாசிக்கிறோம். மேலும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களும், கொடைகளும் விசுவாசத்தின் அடிப்படையில்தான்

கொடுக்கப்படும். புது சிருஷ்டிகளாக, இயேசு கிறிஸ்துவின் உடன் பங்காளிகளாக அழைக்கப்படுபவர்களிடம் எதிர்பார்க்கப்படும் விசுவாசம் வேறு, இனி வரவிருக்கும் ஆயிர வருட ஆட்சியில் எதிர்பார்க்கப்படும் விசுவாசம் வேறு. தேவனுடைய இராஜ்யத்தில் சாத்தான் முற்றிலுமாகக் கட்டப்படும், கர்த்தரை அறிகிற அறிவு பூமியெங்கும் நிரம்பியிருக்கும். அப்பொழுது, தெய்வீக வாக்குறுதிகளின் நிறைவேற்றம் அனைவராலும் நேரில் காணப்படும். அவைகளைக் காணக்கூடிய அனைவரும் விசுவாசிப்பார்கள். இதே காரியங்களை நாம் காணாமல் விசுவாசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த யுகம் முடிவிற்குள் நாம் அனைவரும் இந்த விசுவாசத்தில் பூரணப்பட அழைக்கப்-பட்டிருக்கிறோம். நாம் விசுவாசத்தோடு, நடப்பிக்கும் விடாமுயற்சியோடு கிரியைகளின் அடிப்படையில் நாம் பூரணராக்கப்படுவோம். இப்படியாக, நாம் உண்மையான நீதிமானின் நிலையை அடையலாம். “அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்-படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.” என்று எழுதியிருக்கிறபடி ஆயிர வருட ஆட்சியில் அவரவர் கிரியைகளின் படி நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள். நாமோ, விசுவாசத்தின் அடிப்படையில் இன்று நியாயத்தீர்க்கப்படுகிறோம். அவர்கள் கிரியை செய்தால் மட்டும் போதும், நாமோ நம்மால் முடிந்த வரைக்கும் விசுவாசத்தைக் கிரியைகளினால் பூரணப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**R2220-** “கிறிஸ்துவுக்குள் விசுவாசம் அவசியமா?” (கேள்வி எண் 7 காண்க)

மதங்களின் உலகப் பாராளுமன்றத்தின் தலைவராகிய ஜான் 11 பாரோவுஸ், சிக்காகோவில் நடந்த மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து சென்றார். அவருடைய அனுபவங்களைப் பற்றி அவர் எழுதுகையில் , “இறுதியாக , அனைவரும் மீட்பு பெறுவார்களா?” என்று இந்துக்கள் அவரிடம் கேட்ட ஒரு கேள்வியை குறிப்பிடுகிறார். “இப்படிப்பட்ட ஒரு கருத்தை ஊக்குவிக்க என் எஜமானன் என்னை அனுமதிப்பதில்லை. ஆனாலும், இது வரைக்கும் கிறிஸ்துவைப் பற்றி அறியாதவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படும் என்று நான் விசுவாசிக்கிறேன் என்றும் சாக்ரெட்டீஸை போல சிலருடைய சிந்தை இயற்கையாகவே கிறிஸ்தவர்களைப் போலிருக்கும். ஒருவேளை நாம் பரலோகத்தில் சாக்ரெட்டீஸை சந்திக்கவில்லை என்றால், நான் ஒருவேளை தவறானப் பாதையில் சென்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவேன் என்று பதில் அளித்தார்.

இன்றைய தினங்களில் மிக வேகமாக வளர்ச்சியடையக்கூடிய கிறிஸ்துவர்களின் கண்ணோட்டத்தை ஓர் எடுத்துக்காட்டாக டாக்டர் பாரோவ் காண்கிறார். இந்த ஜனங்கள் அனைவருமே நம்முடைய ஆண்டவரால் போதிக்கப்பட்ட சுவிசேஷத்தையும், அவருடைய தூண்டுதலைப் பெற்ற அப்போஸ்தலர்களையும், நிராகரித்ததினால், புதிய ஏற்பாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த சுவிசேஷத்தின் நன்மைகளைப் புறக்கணிக்கிறார்கள்.

1. ஆதாம் பாவம் செய்து தேவ சாயலை இழந்தார். ஆனால் கிறிஸ்து இயேசு மனிதனின் பாவத்திற்காக மரித்து, தன்னுடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுத்து ஆதாமையும், அவர் இழந்த அனைத்தையும் மீட்டார் என்பதே புதிய ஏற்பாட்டின் சுவிசேஷத்தின் மையக்கருத்தாகும். ஆனால் இப்பொழுது போதித்து வரப்படும் புதிய தவறான சுவிசேஷம் இந்தக் கருத்தை மறுக்கிறது. ஆதாம் குரங்கின் சாயலாக இருந்தான் என்றும் கடந்த ஆறாயிர வருடங்களாக அவன் வீழ்ச்சி அடையவில்லை மாறாக அவன் மனிதனாக வளர்ச்சி அடைகிறான் என்று கூறுகிறது. இந்த அடிப்படைக் கருத்திலிருந்து பார்க்கும்பொழுது, இயேசுவின் ஈடுபலிக்கு எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்று தெரிகிறது. ஏனெனில் நாம் பார்க்கையில், கடந்த ஆறாயிர வருடங்களாக மனிதன்

பாவத்தில் வளருவதற்குப் பதிலாக, முன்னேற்றமான பாதையில் செல்லுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே பாவத்தைக் கருத்தில் கொள்ளாவிட்டால், பாவத்திற்கான பலியும், மறுக்கப்பட வேண்டும். இவ்வாறாக பரிணாமக் கொள்கையை நம்பும் அனைவரும் இயேசுவின் ஈடுபலியை ஏற்றுக்கொள்ள வாய்ப்பில்லை.

2. ஈடுபலியை விசுவாசித்து, முழு மனதோடு ஏற்றுக்கொள்பவர்களுக்கு, தேவன் மன்னிப்பளித்து , தன்னோடு ஒப்புரவாக்கிக்கொண்டு , அதற்கான சகல ஆசீர்வாதங்களையும் தருவார் என்பதே புதிய ஏற்பாட்டின் சாராம்சம். ஆனால் புதிய தவறான சுவிசேஷம் இந்த ஈடுபலியை மறுத்து, தேவன் கொடுக்கும் மன்னிப்பையும், உறவையும் நிராகரித்து, தேவனுடைய உறவு இன்னும் துண்டிக்கப்படவில்லை என்றும், பாவத்திலே நாம் பிறந்ததையும் மறுதலிக்கிறார்கள். ஆதாம் திராட்சைக் காய்களைப் புசித்தார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயிற்று - எசே 18:2 என்பதை மறுக்கிறார்கள்.

3. புதிய ஏற்பாட்டின் முழுமையான ஆசீர்வாதங்களைப் பகிர்ந்துக் கொள்வதற்குத் தேவை - விசுவாசமே. கிறிஸ்துவின் மரணத்தின் வழியாக தேவனோடு ஒப்புரவாகும் சிலாக்கியத்தை அவருடைய கிருபையினால் நமக்கு அளித்தார். பாவிகளாக இருக்கும் அனைவரும் இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்த நாம் பெற்ற விசுவாசத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஏனெனில் அப்போஸ்தலர் கூறுவது போல - “நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம்”. மேலும் இதன் வழியாக தான் நாம் அனைத்துத் தெய்வீக நன்மைகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். (ரோமர் 5:1,2) இது பொதுவான விசுவாசம் அல்ல, அல்லது நாம் மகிழ்ச்சியாக இருப்பதின் மேல் வைக்கும் விசுவாசம் அல்ல, மாறாக இது தேவன் பேரிலும், இயேசுவின் பேரிலும், நாம் வைக்க வேண்டிய விசுவாசமாக இருக்கிறது. மேலும், இது ஊடுருவி இயேசுவின் மரணத்தின் மேலும், நம்முடைய பாவங்களுக்காக இரட்சகரானார் என்பதையும், பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை ஜெயித்து, அவருடைய இரண்டாம் வருகையில் தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும்.

புதிய தவறான சுவிசேஷம் கிறிஸ்துவோடு ஐக்கியத்தில் விசுவாசத்தோடு வாழ வேண்டும் என்பதைக் கூறுகிறார்கள். வேறு எதுவும் தேவை இல்லை என்பதே அவர்களுடைய கருத்து. நிச்சயமாக இவர்கள் “மெய்யான வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் தொலைத்து விட்ட அபாயத்திலிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இவர்கள் வசனங்களில் குறிப்பிடுவதுப்போல் சரியான பாதையில் இவர்கள் நடக்கவில்லை.” என்பது தெளிவாகிறது.

ஆனாலும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டப்பின் நேர்மையான சிந்தையுடையவர்கள் மற்றும் உண்மையுள்ளவர்கள் அனைவரின் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, உண்மையான விசுவாசத்தை அறிந்தவர்களாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதில் நாம் மகிழ்ச்சியடையலாம். பிரேதக் குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும் என்று சொன்னது போல, நிச்சயமாக அவர்கள் பிரேதக் குழியிலிருந்து வெளிவரும் சாக்ரேட்டிஸை காண்பார்கள். (2கொரி 4:4, வெளி 20:2,3) அப்பொழுது காட்டப்படும் இரக்கம், பூமிக்குரிய பரதீஸ் திரும்பக் கொடுக்கப்படக்கூடிய காலமாக இருக்கும். அது பரலோக அழைப்பு அல்ல. இது சுவிசேஷ யுகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை உறுதிப்படுத்திக் கொண்டு, விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் இருந்தால் பந்தயப் பொருளைப் பெறலாம். (2பேதுரு 1:10) ஆண்டவரின் வார்த்தைகளைக் கேட்போம் - (கலா 3:22,23,

1கொரி 1:21,23,24, 1தெச 4:14, யோவ 20:31, யோவ 17:20, அப்போஸ்தலர் 13:37-39, அப் 8:12, 1பேது 1:18-23, அப் 20:27, 1கொரி 15:11, வெளி 10:8-14)

**F688 - F692 –**"ஆவிக்குரிய கனியாகிய விசுவாசம், புது சிருஷ்டியின் நிகழ்கால சொத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது." (கேள்வி எண் 12 காண்க)

நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதற்கு முன் விசுவாசம் நம்முடையதாக இருக்க வேண்டும். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதற்கு முன்னதாகவே நாம் பாவமன்னிப்பைப் பெற்று தேவனோடு சமாதானமாகிவிட்டோம். பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன் நாம் பெற்ற விசுவாசம் இதை செயல்படுத்த முடியாது. ஆகவே, ஆவியின் வரத்தின் - ஆவியின் கனியாகிய - விசுவாசத்தைப் பெற வேண்டும். தேவன் பேரிலும், அவருடைய வாக்குறுதிகளின் மேலும் நம்முடைய சிந்தையைச் செலுத்துவதே விசுவாசமாகும். தேவன் மேல் உள்ள நம்பிக்கையை அறியாமையினாலோ, அல்லது விழுந்துபோன நிலையினாலோ நடைமுறைப்படுத்தாதவர்கள், சுவிசேஷ யுகத்தின் விசேஷித்த ஆசீர்வாதங்களைப்பெற முடியாது. வருங்கால ஆட்சியில் பொதுவாக அனைவரும் ஆசீர்வதிக்கப்படும்பொழுது இவர்களும் அதில் பங்குபெறுவார்கள். இந்த சுவிசேஷ யுகத்தின் அழைப்பை தரிசித்து நடப்பவர்களுக்கு அல்ல, விசுவாசித்து நடப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இப்படியாக விசுவாசத்தினால் நடக்க முடியாதவர்கள், தேவனோடும் நடக்க முடியாது. ஏனெனில், "விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருப்பது கூடாதக் காரியம். இப்படியாக விசுவாசியாதவர்கள், விசுவாசத்தில் துவங்கினாலும், இவர்கள் அதில் முழுமையாக வளர வேண்டும். வளர்ந்தால் மட்டுமே எதிர்த்து நின்று ஜெயிக்க முடியும் - "இந்த உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் - நம்முடைய விசுவாசமே."( 1யோவான் 5:4)

எதையும் எளிதில் நம்பக்கூடிய மனப்பக்குவத்திற்கும், விசுவாசத்திற்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மில்லியன் கணக்கான ஜனங்கள் மூடநம்பிக்கையில் மூழ்கியிருக்கிறார்கள். மேலும் ஆதாரம் இல்லாத ஆயிரக்கணக்கானக் காரியங்களை எளிதில் நம்புகிறார்கள். நம்பக்கூடாதக் காரியங்களை நம்பி, நம்ப வேண்டியக் காரியங்களை நம்பாதிருக்கிறார்கள். இதில் பில்லியன் கணக்கான ஜனங்கள் கிறிஸ்தவர்கள். இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும், தவிர்க்கப்பட்டு, சீர்த்திருத்தி கண்டிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மையான விசுவாசம் ஊக்குவிக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து, பலப்படவேண்டும். இது பாரம்பரியக் கொள்கைகள், மற்றும் தத்துவங்கள் அல்லது கற்பனைகளின் அடிப்படையில் அல்ல தேவனுடைய தெய்வீக வாக்குறுதிகளின் அடிப்படையில் தேவன் பேரில் உள்ள விசுவாசமே உண்மையான விசுவாசம்.

தேவனுடைய பெயரின் அர்த்தத்திற்கு ஏற்றவாறு அவர் தம்மில் தாம் ஜீவனுடைய-வரும், சர்வவல்லமையுள்ளவரும், சர்வஞானம் படைத்தவரும், மிகுந்த அன்புள்ளவருமாக இருக்கிறார் என்று நாம் விசுவாசித்து, அவரை உண்மையாகத் தேடுபவர்களுக்கு அவர் பலனளிப்பார் என்பதை நாம் விசுவாசிக்கும் பட்சத்தில், அவரை உண்மையாகத் தேடி, அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதைப்பற்றி நாம் தெரிந்துக் கொண்டால், அவர் பேரில் நாம் முழு நம்பிக்கைக் கொள்ளலாம். மேலும், அதற்கேற்றவாறு நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். தெய்வீக இரக்கங்களின் அடிப்படையில் இப்படிப்பட்ட, விசுவாசத்தின் துவக்கம் நம்மை கிறிஸ்துவைப் போல புதிதும், ஜீவனுள்ள நிலையில் தேவனோடு ஒப்புரவான ஒரு வாழ்க்கையில் வளரச் செய்கிறது. இப்படிப்பட்ட

விசுவாசம் நம்மில் வளரும்பொழுது, கீழ்படிதலும், அதிகரித்து, புது சிருஷ்டிகளின் உறுப்பினர்களாக வேண்டிய ஆசீர்வாதங்கள் நம்மை வந்துசேரும். விசுவாசத்தின் வளர்ச்சி, தேவனுடைய புத்திரர்களாகவும், இயேசுவின் உடன் சுதந்திரர்களாகவும் தேவன் நமக்களித்த வாக்குறுதிகளை அதிகமதிகமாகப் பற்றிக்கொள்ளச் செய்கிறது. இதன் விளைவாக நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்று ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக, அபிஷேகிக்கப்பட்டு, தேவப் புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவோம்.

மேலும், பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள குத்துவிளக்கின் வெளிச்சம், விசுவாசத்தினால் மட்டுமே காணக்கூடிய காரியங்களைக் காணச்செய்து, குத்துவிளக்கு, சமூகத்து அப்பங்கள், தூபப்பீடம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் ஆசரிப்புப் பெட்டியை பொறுத்த வரையில் மகா பிரதான ஆசாரியரின் விசேஷித்த ஊழியங்களைப் பற்றிய தெளிவானக் காரியங்களையும், அதிகமான பலனை அடைய நம்மை ஊக்குவிக்கும். தெய்வீக வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருப்பதுப் போல, இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையில், கீழ்ப்படிதலான விசுவாசம், தெய்வீகக் கிருபைகளின் வெவ்வேறு வழிகளிலும், உறுதியாக வளர்ச்சியடைந்து, தெளிந்த புத்தியைக் கொடுத்து, புதிய சிந்தையின் துவக்க நிலையை அடைகிறது. இந்நிலையை நாம் அடையும் வரைக்கும், அந்நிலையில் நாம் பெறக்கூடிய நன்மைகளைப் பற்றி அறிவதில்லை. (1கொரி 2:9)

பரிசுத்த ஆவியின் எடுத்துக்காட்டுகளில், வாக்குத்தத்தங்களின் வார்த்தையின் மூலம் நாம் பார்க்கும்போது, மிகுதியான விலையேறப்பெற்ற பரலோகக் காரியங்கள், முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையோடு பெறுவதை நாம் காணலாம். தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, நீதி வாசம் செய்யும், அப்பொழுது, பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தேவனுடைய மகிமையோடும், அவருடைய தெய்வீக அன்பின் பிரமாணத்தோடும் இசைந்து வாழ மனதில்லாத அனைத்து தனி நபர்களும் அழிக்கப்படுவார்கள். புது சிருஷ்டிகள் தங்களுடைய விசுவாசக்கண்களின் மூலம் அனைத்தையும் காண்பார்கள். இயற்கையான மனிதனுக்குத் தெளிவாகவும், உறுதியாகவும் தெரியாதக் காரியங்கள் அனைத்தையும், இந்த விசுவாசக்கண்களின் மூலமாகக் காணலாம் என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். (1கொரி 2:9,10)

ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட விசுவாசத்தின் கிரியைகள் முழுமையாகக் காணப்படாமல் இருந்தாலும், புது சிருஷ்டியின் இன்றைய நிலைக்கான பொக்கிஷத்தின் ஒரு பங்காகும். மேலும் ஒவ்வொரு நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அதனோடு இணைந்திருப்பதினால் "வரவிருக்கும் மகிமையின்" முன்னறிவிப்பை இது மட்டுமே தரக்கூடியதாக இருக்கிறது. "உண்மையில், இந்த விசுவாசத்தின் அடிப்படையில்தான் நம்முடைய நம்பிக்கையும், சந்தோஷங்களும் கட்டப்பட்டிருக்கிறது" என்று அப்போஸ்தலர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். (எபிரெயர் 11:1) இதனால், இதுவரைக்கும் காண முடியாதக் காரியங்களை நம்முடைய மனது காண்கிறது. - "காணக்கூடியவைகள் அநித்தியமானவைகள், காணக்கூடாதது நித்தியமானவைகள்" என்று இதை குறித்து அப்போஸ்தலர் தெளிவாகக் கூறகிறார்.

இன்று நாம் பெற்றிருக்கும் சொத்துக்களைத் தக்கவைத்துக் கொள்ள விசுவாசம் எவ்வளவு அவசியமாக இருக்கிறது. மேலும் இனி வரும் ஆசீர்வாதங்களையும் இது தெளிவாகக் காட்டுகிறது என்று யாக்கோபும் கூறுகிறார் - "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது, அவனுக்குக்

கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பனாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்." (யாக் 1:5-8)

உறுதியான விசுவாசமில்லாமல், எதையும் மேற்கொள்வது கூடாதக் காரியம் என்று அவர் தெளிவாகக் காட்டுகிறார். ஆகவே வேதத்தில் உள்ள ஒவ்வொரு வசனமும் விசுவாசத்தில் நாம் வளர்ச்சியடைய நம்மைத் தூண்டுகிறது. இந்த விசுவாசம் வளர நாம் "ஆண்டவரே எங்கள் விசுவாசம் விருத்தியடைய கிருபை செய்தருளும்" என்று அப்போஸ்தலர்களைப் போல ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். மேலும் நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படுவதற்காக தேவன் வைத்திருக்கும் விதிமுறைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் நேர்மையாக இருக்கும் பட்சத்தில், நேர்மையான உள்ளத்தோடு தேவனைத் தேடி, அவருடைய வார்த்தைகளை அறிந்துகொண்டு, அவைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய ஊழியத்தில் மகிழ்ந்து, ஆவியின் கிருபைகளைப் பெற்று விசுவாசத்தில் பூரண வளர்ச்சி அடையலாம். "ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் , இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி-விழுவதில்லை. இவ்விதமாய் , நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.

**R1859 [col.1] :-** (கேள்வி எண் 14 காண்க)

கிறிஸ்துவ வாழ்க்கையைக் குறித்து இதே காரியத்தை அப்போஸ்தலனாகிய பவுலும் வலியுறுத்துகிறார். மிகவும் அபாயமான ஒரு யுத்தமாக அவர் இதை அடையாளப்படுத்தி, கிறிஸ்துவின் உண்மையான படைவீரர்கள் அனைவரையும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ள துரிதப்படுத்துகிறார். ஏனெனில், சாத்தானின் பலவிதமான தந்திரமான எதிர்ப்புகளைக் குறித்து அவர் பேசும்போது - "மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைதனங்களோடும், அதிகாரங்களோடும், அந்தகார லோகாதிபதிகளோடும்.... எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாக இருக்கும்படிக்கு.... சத்தியம் என்னும் கச்சையையும், விசுவாசம் என்னும் கேடகத்தையும் நீதி என்னும் மார்க்கவசத்தையும் அணிந்திருங்கள்" ( எபே 6:10-18 ) என்று அறிவுரைக்கூறுகிறார்.

நம்முடைய எதிராளியாகிய சாத்தான் இவ்வுலகத்தின் கோட்பாடுகள், நம்பிக்கை, குறிக்கோள், ஆசை மற்றும் விருப்பங்களில் எவ்வளவு வல்லமையுள்ளவனாகச் செயல்படுகிறானோ, அதற்கு எதிரானப் பாதையில் கிறிஸ்துவ வாழ்க்கை பயணிக்க வேண்டும். இந்த உலகத்தின் காரியங்களில் நம்முடைய பலவீனங்களை அறிந்த சாத்தான் நம்மை எளிதாக ஏமாற்றி பாவ வழிகளுக்கு நம்மை நடத்திவிடுகிறான். இவைகளை நாம் பார்க்கும்பொழுது நிர்ப்பந்தமான சூழ்நிலையில் நாம் அகப்-பட்டிருக்கிறோம் என்பதை உணரலாம்.

அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுவதுப்போல நம்முடைய எதிராளி - மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை - ஆகிய மூன்று

காரியங்களில் நம்மை வீழ்த்த முயற்சிக்கிறான். (1யோவா 2:16)

முதலாவதாகச் சொல்லப்படும் காரியம், இந்த முழு உலகமும் தீவிரமானப் பசியோடு அல்லது அதிகமான உணர்ச்சிகளோடு செயல்படுகிறார்கள். இவர்கள் சட்டப்படி செய்வதாக நினைத்துக்கொண்டு, சட்ட விரோதமானக் காரியங்களைச் செய்து, மனித நிலையைத் தரம் குறைத்துக் கொள்கிறார்கள்.

இரண்டாவது - “கண்களின் இச்சை” - மனிதக்கண்கள் காணும் யாவையும் சொந்தமாக்கிக்கொள்ள முயற்சிக்கும். இது நன்மையாகத் தோன்றும். அதாவது விழுந்துப்போன நிலையில் இது உகந்ததாகத் தோன்றும். தங்களுடைய கண்ணோட்டத்தில் மற்றவர்களின் உரிமைகளையும் அவர்கள் பொருள்படுத்துவதில்லை. ஒருவேளை சொத்துக்காக அல்லது புகழ்ச்சிக்காக அல்லது வல்லமைக்காக அல்லது சமுதாயத்தில் நல்ல பதவிக்காக மனிதன் போராடலாம். இதற்காக சரீரத்தின் முழு பெலமும், சிந்தையும் செலவழிக்கப்படுகிறது.

மூன்றாவதாக - “ஜீவனத்தின் பெருமை” - இது சுயநலத்தின் மலர்ச்சியாக இருக்கிறது. இது தேவனுக்கும், சகலவிதமான நல்ல ஜனங்களுக்கும் வெறுப்பூட்டும் காரியமாக இருக்கிறது. இது ஒரு மனிதனின் அவமானங்களைப் பிரகடனப்படுத்துவதாக இருக்கிறது. மாம்சத்தின் இச்சைகளும், கண்களின் இச்சைகளும் அவர்களுக்கு குறுகிய மனப்பான்மை, குருட்டுப் பிடிவாதம் போன்ற சாபங்களை வருவிக்கிறது. மேலும் இப்படிப்பட்ட குணங்களில் அவர்கள் வளர்ச்சியடையும்போது, மற்றவர்களுடைய சுதந்தரத்தையும், உரிமைகளையும் பற்றிக்கொண்டு, அர்த்தமில்லாத பெருமையிலும், வளர்ந்து, குறுகியக்காலத்தில் பாழாக்கப்படுகிற காரியங்களில் வல்லமையாகச் செயல்பட்டு, உயர்வாக வாழ்ந்து கொண்டிருப்பர்.

இந்த மூன்று காரியங்களையும் கொண்டு எதிராளி நம்மைத் தாக்காதப்படிக்கு நம்முடைய ஆண்டவர் அயராத கண்விழிப்போடு நம்மை காத்துக் கொண்டிருக்கிறார். தன்னடக்கத்தோடு, விழித்திருந்து, நம்முடைய எதிராளியானவன் எந்த வகையிலும் நம்மை மேற்கொள்ளாதப்படிக்கு நாம் மிகவும் எச்சரிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும்.

அவன் தொடர்ந்து நம்மை தாக்கிக்கொண்டிருக்கிறான் என்பது நிச்சயம், மேலும் இந்தத் தாக்குதல்கள் எந்த எச்சரிப்புமில்லாமல், திடீர் என்று பலத்த வேகத்தோடு வருகிறது. இதை அனைவரும் நம்முடைய வாழ்க்கையில் சந்திக்கிறோம். நாம் அசதியாக இருக்கும் நேரத்திலும், கவனியாத நேரங்களிலும், நம்முடைய எதிராளி நம்மை மேற்கொள்ள குறிவைப்பான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நம்மால் முடிந்த-வரைக்கும் சர்வஜாக்கிரதையாக இருந்தாலும், எதிராளியை நாம் மேற்கொள்ளும் பொழுது, நாம் வேதனை அடைகிறோம். ஏனெனில், நாம் பெற்ற வல்லமை அனைத்தையும் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளில் நாம் நம்முடைய பெலத்தை நம்பினால் சகலமும் தகர்த்துப் போடப்படும். ஆகவே நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், கிறிஸ்துவுக்கேற்ற போர் வீரனாகவும் இருக்கும்பட்சத்தில் இவ்விதமான பொறி பறக்கும் சோதனைகளை ஏதோ புதுமையாக எண்ணவேண்டாம் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு நம்மை எச்சரிக்கிறார். (1பேதுரு 4:12-16) ஒரு கிறிஸ்துவ போர்வீரன் இவைகளுக்கு மிக எச்சரிப்போடு ஆயத்தமாக இருக்கவேண்டும்.

“விசுவாசத்தில் உறுதியாக நின்று பிசாசை ஜெயிக்கவேண்டும்” என்று பேதுரு

இங்கு குறிப்பிடுகிறார். இதே கருத்தை யோவானும் வலியுறுத்துகிறார். (1யோவா 5:4) நாம் விசுவாசத்தில் உறுதியாக இருந்தால் அதில் நாம் நீடித்திருப்பது எப்படி? தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அதன் மகத்துவங்களையும் நாம் இறுகப்பற்றிக்கொண்டு, விசுவாசத்தோடு தேவனுடைய வல்லமையையும் பற்றிக்கொண்டு, தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் நாம் உதவிகளைப்பெற கிருபாசனத்தண்டையில் சேரவேண்டும். தேவனுடைய தனிப்பட்ட நீதியினால் நாம் விசுவாசிகளாகக் காணப்படுகிறோம். ஆகவே அவருடைய கண்கள் எப்பொழுதும் நம்மேல் நோக்கமாயிருக்கிறது. எனவே, நாம் அவருடைய பிரியமானக் குணங்களை நமக்குள் வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய இறுதியான போராட்டத்திற்கு இவைகள் மிக அவசியமானது என்று பேதுருவும் கருதுகிறார் - 11பேதுரு 1:5-10

மிக சிறந்ததும், விலையேறப் பெற்றதுமான வாக்குத்தங்களின் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசம், நமக்கு புத்துணர்வோடு, புதுப்பிக்கப்பட்ட தைரியத்தையும், அந்தத் தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் என்று அவர் நம்மை துரிதப்படுத்துகிறார். மேலும், இவைகளை செய்வீர்களானால், நிச்சயமாக நீங்கள் விழுந்துப்போக மாட்டீர்கள் என்கிறார்.

மேலே கூறப்பட்ட குணங்களில் நாம் வளர்ச்சியடைகையில், தேவனுடைய சத்தியங்களை முழுமையாக அறிந்துகொள்ள நம்முடைய ஆவிக்குரிய கண்களும் தெளிவாகக் காரியங்களைப் புரிந்துகொள்ளும். இப்படியாக, "நீதி என்னும் ஆயுதத்தை நம்முடைய வலது கரத்தில் ஏந்தி, எதிராளியின் பொறி பறக்கும் அம்புகளை நமது இடது கரத்தால் தகர்த்து எறிந்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை ஜெயித்து, நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

கிறிஸ்துவ ஜீவியத்தில் இந்த மாபெரும் யுத்தத்தில் நமக்கு முன் எப்படிப்பட்ட வேலைகள் வைக்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள். இது நம்முடைய ஜீவியகாலம் முழுவதும் உள்ள போராட்டமாக இருக்கிறது. நம்முடைய மாம்சத்திற்குள் ஊடுருவி-யிருக்கும் வல்லமையுள்ள எதிராளியோடு நாம் யுத்தம் புரிய வேண்டும். இது மிகப் பயங்கரமானதும், ஆபத்தானதுமாக இருக்கிறது. இந்த உலகத்தின் ஆவியால் நாம் அதிகமதிகமாகப் பாதிக்கப்படும்போது, சுயநீதி, பொறாமை, பெருமை, வீணான மகிமை, தான் என்ற அகங்காரம் போன்ற குணங்கள் நம்மை ஆட்கொண்டு விடும்.

ஆகவே, நித்தமும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் தேவனுடைய கிருபையைத்தேடி உலகம், மாம்சம் மற்றும் பிசாசை எதிர்த்து நல்ல போராட்டத்தைப் போராடுவோம். "பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன் , பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." (நீதி 16:32) ஆம், இந்தப் பொறுப்பு மிகப் பெரியது. ஆகவே இந்த வசனத்தின் அடிப்படையில் நாம் நல்ல போராட்டத்தைப் போராடுவோம். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு மணி நேரத்திலும், இந்தப் போராட்டத்தை வெற்றியுடன் நடத்தி, நம்மை நாம் பரிசுத்தப்படுத்தி, நம்முடைய குணலட்சணங்களை மெருகேற்றுவோம். முடிவு பரியந்தம் இவைகளைத் தொடர்ந்து நடப்பிப்போம்.

முழு அன்போடும், கனிவோடும், ஆண்டவரின் போர்ச்சேவகர்களுக்கு

அப்போஸ்தலனாகிய பேதுரு - “கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக” என்று ஊக்கமளிக்கிறார். இப்படிப்பட்ட பாடுகளின் மூலமே நாம் கிறிஸ்துவுக்கு ஏற்ற போர் வீரராக மாற முடியும். பூரணமான தன்னடக்கம், பொறுமை, ஞானம் மற்றும் அவருடைய வார்த்தைகளின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இயேசுவுக்குள் நாம் இளைப்பாறவேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி, தன்னுடைய அனுபவத்தையே அவர் நமக்கு எழுதியுள்ளார். ஆகவே நாம் ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும், பூரணத்தை நோக்கி வளர்ச்சி அடைவோம்.

**R2309 –** "கிறிஸ்தவர்களின் போராட்டம்” (கேள்வி 13 மற்றும் 15 காண்க)

“...நல்ல போராட்டத்தைப் போராடினேன், நித்திய ஜீவனைப் பற்றிக்கொண்டேன்...” 1 தீமோ - 6:12

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை சமாதானம் செய்கிறவர்களாகவும் , “கூடுமானவரைக்கும் அனைவரோடும் சமாதானமாக இருங்கள் என்று சொல்லியிருந்த போதிலும், தன் ஆவியை அடக்குவதினால், இந்த உலகத்தில் கேள்விப்படாத அளவிற்கு அவர்களே சிறந்த போர்வீரர்களாக இருக்கிறார்கள். ஆனால் அதில் இரண்டு விதமான போராட்டங்கள் உண்டு. நன்மையானவைகளை அடைவதற்கும், உண்மையை நிலைநாட்டுவதற்கும், தூய்மையான தெய்வீகத்திற்காகப் போராடுவதும் நல்ல போராட்டம் - இதுவே நீதியின் போராட்டமாகும். மற்றொன்று தீமையானப் போராட்டங்கள், இது தேவையற்ற காரியங்களுக்கானப் போராட்டம்.

ஆனால் நம்முடைய பாடத்தில், விசேஷமாக நல்ல போராட்டத்தை நடத்துவதற்காக பவுலால் குறிப்பாகச் சொல்லப்படும் வீரர்கள் யார்? அவர் அனைவரையும் இந்தப் போராட்டதிற்கு அழைக்கிறாரா? அல்லது பாவிகளை அழைக்கிறாரா? அல்லது கிறிஸ்தவர்களை மட்டும் அழைக்கிறாரா? நிச்சயமாக இல்லை. அவர் கிறிஸ்துவின் சரீரமாக அழைக்கப்பட்டிருக்கும் அர்ப்பணிக்கப்பட்ட சபையை அழைக்கிறார். இதை இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசு கிறிஸ்துவின் வாய்மொழிகளாக அப்போஸ்தலர் இங்கு குறிப்பிடுகிறார். அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே இந்தப் படையில் சேர்ந்து பணிபுரியும் அனுமதி பெறுவார்கள். இருப்பினும், இந்த அழைப்பு பொதுவாக இந்த உலக ஜனங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதாவது தேவனோடு உடன்படிக்கை செய்யாதவர்களிடம் இந்த அழைப்பு கொடுக்கப்படுவதில்லை. அவரோடுக்கூட உடன்படிக்கை செய்தவர்களை அவர் அறிவார். இந்நாள் வரைக்கும் நடக்கக்கூடிய போராட்டங்களுக்கு இவர்களுக்கு மட்டுமே சில விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய இரட்சிப்பின் அதிபதி தன்னுடைய போராட்டத்தைத் துவங்கியது முதல், கிட்டத்தட்ட பத்தொன்பது நூற்றாண்டுகளாக இது நடந்துவருகிறது.

நாம் யாருக்காகப் போராட வேண்டும்? தேவனுக்காகவா? - கிறிஸ்துவுக்காகவா? இல்லை. நாம் நமக்காகத்தான் போராட வேண்டும். சிலர் நல்ல போராட்டத்தைத் தேவனுக்காகப் போராடி, அவரிடத்தில் பரிசுகளையும், நன்றிகளையும் பெற்றுக்-கொள்ளலாம் என்ற தவறானக் கருத்தை கற்பனை செய்து கொள்கிறார்கள். சர்வ வல்லமையுள்ள தேவனுக்காக யாரும் போராட வேண்டிய அவசியம் இல்லை. எல்லையற்ற வல்லமை பெற்ற நம்முடைய சர்வ வல்லமையுள்ள தேவன், தன்னைத்தான்

பாதுகாத்துக்கொள்வார் . நம்முடைய விழுந்துப்போன முயற்சிகள் அவருக்கு அவசியமில்லை . எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் வாழ்பவர்கள் நாங்கள் அமெரிக்காவுக்காகப் போராடுகிறோம் என்றால் பொருள் என்ன? அமெரிக்காவில் உள்ள தங்களுக்காக தான் போராடுகிறார்கள் என்று பொருளாகும். அதேபோல் நமக்காகப் போராடும் தேவன், நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கு நம்மை ஊக்குவிக்கிறார். அதேபோல் இந்தப் போராட்டத்தின் அம்சங்கள் அனைத்தையும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

நாம் யாருக்கு எதிராகப் போராட வேண்டும்? நாம் நம்முடைய அயலகத்தாரோடு அல்லது போராயுதங்களோடு நாம் போராடுவதில்லை என்று நாம் பதில் அளிக்கிறோம். நம்முடைய எதிரிகளிடமும், நம்மை உபத்திரவப்படுத்துபவர்களிடமும், நமக்கு எதிராக தவறான காரியங்களை பழிச்சொல்லுபவர்களிடமும் அல்லது சாத்தானின் வஞ்சகமானத் தந்திரங்களினாலும், மூடநம்பிக்கை, தவறானப் போதனை இன்னும் பல காரியங்களால் குருட்டாட்டம் பிடித்தவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் இவர்களைக் காணும்போது தெளிவாக அறிந்துகொள்ளலாம். ஆகவே நாம் இவர்களுக்கு எதிராக செயல்படாமல், வாய்ப்புகள் ஏற்படும்போது அவர்களுக்கு நன்மையானவைகளைக் கற்றுக்கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம் - "எதிர்த்துப் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாக..... சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்." (2தீமோ 2:25,26) மேலும், இப்படிப்பட்டவர்களோடு நாம் தொடர்பு கொள்கையில், ஒருவேளை அவர்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டு, உண்மையான அன்பின் ஆவியை அவர்களும் பெறுவதற்கான வாய்ப்பு உண்டாகும்படி தீமைக்குப் பதிலாக நன்மையையும், இரக்கமற்றவைகளுக்குப் பதிலாக கரிசனையையும், வெறுப்புக்குப் பதிலாக அன்பையும், நம்மைப்பற்றி தவறாகப் பேசுபவர்களைப்பற்றி நன்மையாகப் பேசவும், நம்மை உபத்திரவப்படுத்துபவர்களை நேசிப்பதற்கும், நம்முடைய இரட்சிப்பின் அதிபதி நமக்குக் கட்டளைக் கொடுத்திருக்கிறார்.

ஆகவே நம்முடைய போராட்டம் பாவத்திற்கு எதிராக இருக்கவேண்டும் - இதுவே நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமின் மூலம் முழு மனுக்குலத்தைக் கைப்பற்றின மிகப்பெரிய விசாரணைக்காரன். இந்நாள் வரைக்கும் தன்னுடைய ஆதிக்கத்தை மனுக்குலத்தின் மேல் செலுத்தி அதன் பலனாகிய மரணத்தைக் கடந்த ஆறாயிரம் வருடங்களாக வியாதி, வலி, வேதனை, மற்றும் உபத்திரவம், கொடுமைகள் மூலம் செலுத்தி வருகிறான்.

சாத்தான் நம்முடைய மறைமுகமான எதிரி, ஏனெனில், அவனே நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமை பாவத்தில் விழத்தள்ளி, முதல் அடிமையாக்கினான். இந்நாள் வரைக்கும் சாத்தான் இதே தந்திரத்தைப் பயன்படுத்தி வருகிறான். நம்மையும் இந்தப் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கும்படி வழிநடத்துகிறான். இருப்பினும் நம்முடைய யுத்தம் சாத்தானோடு அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். "தேவன் உன்னை கடிந்துகொள்வார்" என்று மிகாயேல் தூதன் சாத்தானிடம் சொன்னப் பதிலை நாம் இங்கு நினைவுக்கூறலாம். தேவன் சாத்தானை அழிக்க நியமித்திருக்கும் குறித்தக் காலத்திற்காக நாம் காத்திருக்க வேண்டும். ஆகவே நாம் சாத்தானைக் கடிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அவனுடைய வஞ்சகமான தந்திரங்களையும், பாவத்திற்கு ஏதுவாக அவனுடைய தவறான வழிநடத்துதலையும் நாம் புரிந்துகொண்டு அதிலிருந்து விலக வேண்டும், எச்சரிப்போடும் இருக்க வேண்டும்.

“ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.” (எபே 6:12) என்று ஆண்டவர் நமக்குக் கட்டளையிடுகிறார். பாவத்தின் அதிபதியாகிய சாத்தானின் விதவிதமான வலைவீசுதல்களுக்கு நாம் எதிர்த்து நிற்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அவனுடைய தந்திரமான சூழ்ச்சிகளே நமக்கு எதிராக யுத்தத்தை வருவிக்கிறது. ஆகவே நாம் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும், ஏனெனில், நம்முடைய சாமர்த்தியத்தை அவனோடு என்றுமே ஒப்பிடமுடியாது. அவனைப் பார்க்கும்போது நாம் மிகவும் பலவீனரும், விழுந்துப்போன நிலையில் இருக்கிறோம். இப்படியிருக்க, இந்தப் போராட்டத்தை போராடுவதற்கு நிரந்தரமாக நாம் விடப்படுவதும் இல்லை. நம்முடைய அதிபதியாகிய இயேசு, பாவத்தைவென்று மகிமைப்பட்டிருக்கிறார். இப்பொழுது நாம் அவருடைய பங்காக இருக்கிறோம். ஆகவே - “தேவன் நம் பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாக நிற்பவன் யார்?” என்று நாம் தைரியமாகச் சொல்லலாம்.

உலகம், மாம்சம், சாத்தான் ஆகிய இந்த மூன்றும் நம்மை பாவத்திற்கு அடிமையாகத் தன்வசம் சிறைபிடிப்பதற்கு ஏற்பாடு செய்யும் அனைத்து வழி-முறைகளையும் இங்கு அப்போஸ்தலர் நமக்கு மொத்தமாகக் குறிப்பிடுகிறார். பாவத்திற்கு அதிபதியான சாத்தானுடைய வல்லமையானச் செயல்களை இந்நாள் வரைக்கும் நாம் கண்டிருக்கிறோம். அடுத்ததாக, இந்த உலகத்தை நம்முடைய எதிரியாக எந்தவிதத்தில் காணலாம்? இதை நாம் எவ்வாறாக ஜெயிப்பது? நிச்சயமாக இந்த உலகத்தில் நாம் காணக்கூடியவர்களோடு போராட வேண்டியதில்லை, அல்லது துன்மார்க்கரோடு போராட வேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் அனைவரின் மனக்கண்களையும் சாத்தான் குருடாக்கிவிட்டான். ஆகவே நாம் இந்த உலகத்தின் ஆவியோடு மட்டுமே போராட வேண்டும். இந்த உலகத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன் சிந்தனைகளுக்கும், அதன் இலக்குகளுக்கும், ஆசைகளுக்கும், ஜீவனத்தின் பெருமைகளுக்கும் நாம் எதிர்த்து நிற்க வேண்டும் - இது நம்முடைய அனுதின போராட்டமாக இருக்கிறது.

இறுதியாக, நம்முடைய போராட்டம் மாம்சத்தோடு அதாவது நம்முடைய சொந்த மாம்சத்தோடு தொடர்கிறது. நம்முடைய முற்பிதாவாகிய ஆதாம் பாவத்தில் விழுந்த நாளிலிருந்து, பாவம் மனுக்குலத்தை இறுகப்பற்றிக் கொண்டு, நம்முடைய சிந்தை, செயல்பாடுகள் அனைத்தின் தரத்தையும் குறைத்துக்கொண்டே வருகிறது. இது தொடர்ந்து தீமைக்கு மட்டுமே வழிநடத்துகிறது. பாவங்களினால் ஏற்படும் நன்மைகள், பாசம், நம்பிக்கை விருப்பம், ஆசைகள் மற்றும் இன்னும் அனைத்துக் காரியங்களையும் வெறுத்தால் மட்டுமே நாம் இதிலிருந்து தப்பிக்கமுடியும். இவைகளைக் கண்டறிய மெய்யான வெளிச்சம் தேவைப்படுகிறது. இந்த வெளிச்சத்தில் நம்முடைய விழுந்துப்போன நிலைமையைத் துல்லியமாக அளவிடலாம். ஆனால் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய பிரதான ஆசாரியர் நம்மை இந்தப் பாவத்திலிருந்து மீட்க தன்னுடைய ஜீவனையே கொடுத்தார். நம்முடைய இயலாமையைக் கண்டு அவர் மனதுருகி, பாவத்தின் நுகத்திலிருந்து நம்மை விடுவித்தார்.

இருப்பினும், நம்முடைய சரீரங்களில் பாவங்களின் செயல்பாடுகள் இந்நாள் வரைக்கும் காணப்படுகிறது. கடந்த 6000 வருடங்களாக நாம் அடிமையாக இருந்ததினால், பாவம் செய்யக்கூடிய எண்ணங்கள் இன்னும் நம்மைவிட்டு விலகவில்லை. நாம் இப்பொழுது விடுதலைப் பெற்று கிறிஸ்துவின் புதிய கற்பனைகளை சிந்தையில்

நடைமுறைப்படுத்தவும், அவருடைய சிலுவையின் ஒரு போர் வீரனாக அழைக்கப்பட்டு, நீதிக்காகவும், நன்மைக்காகவும் நாம் போராடுவதால், நம்முடைய பழைய மாம்சத்தின் தவறான விருப்பங்களைச் செயல்படுத்துவதற்கு, அந்தப் பழைய விசாரணைக்காரனுக்குக் கீழ் நம்முடைய மாம்சம் இனி ஒருபோதும் கீழ்படுத்தப்படுவதில்லை. ஆகவே கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக வளர, நம்முடைய மாம்சத்தின் விருப்பங்களுக்கு எதிராக நாம் அதிகபட்சமானப் போராட்டங்களை அனுதினம் போராடவேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய யுத்தகளத்தில், ஒரு மிகப் பெரிய போர் வீரனாகிய பவுலைப் போல நாமும் - “மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை (மாம்சத்தையும் அதன் ஆசை விருப்பங்களையும்) ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (புது சிந்தைக்கு).” (1கொரி 9:27)

நாம் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியின் கீழ் வந்த காலமுதல், நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, நம்முடைய ஜீவனையும் அவருடைய பணிக்காக அர்ப்பணிக்கிறோம் - அந்நேரமுதல் புது உடன்படிக்கையின் அடிப்படையில் நம்முடைய சரீரங்கள் மரித்ததாகக் கருதப்படுகிறது. அப்பொழுது நம்முடைய சிந்தை புதுப்பிக்கப்படுகிறது. தேவனோடு தொடர்புகொள்ளும் ஒரு புதிய ஜீவனைப் பெறுகிறோம். அதற்கு பின் நம்முடைய மாம்சத்திலிருக்கும் பாவக்கிரியைகள் தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்துவுக்குள் முழுமையாக செயலற்றுவிடும். அதற்கும் மேலாக சில பாவக்கிரியைகளைத் தேவன் புது சிருஷ்டியின் கிரியைகளாகக் கருதாமல், அப்படிப்பட்ட பாவங்களை எதிர்த்து நின்று போராட அவருடைய சுத்தக் கிருபையை அளிப்பதாக வாக்களித்திருக்கிறார்.

மாம்சத்திலிருக்கும் இந்த சத்துருக்களே, நமக்கு அதிகமான உபத்திரவங்களைத் தரக்கூடியதாக இருக்கிறது. சாத்தான் இதன் வழியாகப் புது சிந்தைக்கு எதிராக நம்முடைய மாம்சத்தை ஊக்குவித்து நம்மை மீண்டுமாக பாவத்திற்கு அடிமைகளாக வழிநடத்த முயற்சிக்கிறான். சொல்லப்போனால், “கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டி சுற்றிலும், எதிராளிகளால் சூழப்பட்டு, மீண்டும் அடிமைத்தனத்திற்குக் கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகிறது.” ஆகவே நாம் போராட வேண்டும். நமக்காகப் போராட வேண்டும், நம்முடைய விடுதலைக்காகப் போராட வேண்டும், நம்முடைய பலவீனங்களுக்கு எதிராகப் போராடவேண்டும், இந்த உலகத்தின் ஆவிக்கு எதிராகப் போராட வேண்டும், சகலமும் நன்மையாகத் தோன்றச் செய்யும் சாத்தானின் வஞ்சனையான கண்ணிக்கு எதிராகப் போராட வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு கிறிஸ்துவப் போர்வீரன் எச்சரிப்போடு தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்துகொள்ள வேண்டும். விசேஷமாக தன்னுடைய சொந்த மாம்சத்தைக் குறித்து எச்சரிப்போடிருக்க வேண்டும். நம்முடைய தேவனை இரட்சிப்பின் அதிபதியாகப் பெற்றிருப்பதற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நம்முடைய அறியாமையைத் தவிர்க்கவும், சாத்தானின் வஞ்சனைகளை உணர்ந்துக் கொள்ளும் ஞானத்தை அவரே நமக்கு இரட்சிப்பின் தலைச்சீராவாக தந்ததற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் ஈடுபலியினால் வந்த நன்மையை நம்முடைய அபூரணத்தை நிறைவாக்கி, நித்திய ஜீவனைப் பெற வழிநடத்தி, நமக்கு நீதி என்னும் மார்க்கவசத்தைத் தந்த தேவனுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நம்முடைய விசுவாசம் என்னும் கேடகத்திற்காகவும், நம்பிக்கைக்காகவும், அவர் நமக்குள் துவங்கின நல்ல கிரியைகளை முடிக்க வல்லவராக இருப்பதற்காகவும் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கும் போதே தேவன் நம்மை நேசித்து, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற

இரத்தத்தினாலே நம்மை மீட்டு, நம்மை இன்று நேசிப்பதைவிட அதிகமாக நேசித்து, நீதியின் ஊழியக்காரனாக நம்மை மாற்றினார் . தேவன் நமக்குக் கொடுத்த பாதரட்சைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். நீடிய பொறுமையுள்ளவர்களாக நம்மை காத்துக்கொள்வதற்குக் கொடுக்கப்பட்ட சத்தியமும், பரதேசிகளாக நாம் இந்த உலகத்தில் பயணிப்பதற்குத் தந்த பாதுகாப்புக்காகவும் அவரை ஸ்தோத்தரிப்போம். சாத்தானை எதிர்க்கும் சத்திய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்திற்காகவும் நாம் அவருக்கு நன்றிகளை ஏறெடுப்போம். நம்மை விலைக்கு வாங்கினவரும், நம்மை நேசித்தவராலும் நாம் வெற்றிப் பெறுவோம்.

மற்றவர்களுக்கானப் போராட்டம்

நம்முடைய போராட்டம் நம்முடைய சார்பிலும், மற்றவர்களின் சார்பிலும் இருப்பதை நாம் காண்கிறோம். மரணபரியந்தம் நம்மை காத்துக்கொள்வதற்கும், சுயாதீனத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் போராடுகிறோம் . “பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.” (எபி 12:4) என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் நம்முடைய சகோதரர்களுக்காகவும் நம்முடைய ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாக இருக்கிறோம். மேலும், நம்முடைய இராஜாவின் சார்பில் நாம் போராட வேண்டிய அவசியமில்லாதிருந்தும் அவருக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு அவருடைய நாமத்தின் மகிமைக்காகவும், நீதியான ஆட்சிக்காகவும் நாம் போராடுகிறோம். இவைகள் அனைத்தையும் விட வேறு ஒரு காரியத்திற்காக நாம் போராடவேண்டியதாக இருக்கிறது. நாம் இதை தெளிவாகப் புரிந்துகொள்ள கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக இருந்த வளர்ச்சியையும் , அதற்கு பின் நடந்து வரும் காரியங்களும் , யுத்தங்களின் பின்விளைவுகள் என்று நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுவதை நாம் காணலாம்.

நாம் மட்டும் அல்ல, இந்த முழு உலகமும் ஆதாமினால் “பாவத்திற்குக் கீழ் விற்கப்பட்டது” - ஆகவே நாமும் இந்த முழு உலகமும் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கிறோம். அதுமாத்திரம் அல்ல நம்முடைய இரட்சகர் தன்னுடைய விலையுயர்ந்த இரத்தத்தினாலே நம்மை மீட்டு, நமக்கு மட்டும் அல்ல, இந்த முழு உலகத்திற்கும் மீட்பை ஏற்படுத்தினார். இப்படியாக நம்மை மீட்பதற்காக அல்ல, நம்மை பாவத்திலிருந்தும், பழைய விசாரணைக்காரனிடமிருந்தும், சகல அடிமைத்தனத்திலிருந்தும் மீட்க இயேசு உரிமை பெற்றிருக்கிறார். அவர் இந்த முழு உலகத்தையும் இப்பொழுது மீட்காவிட்டாலும், ஒரு சிறு கூட்டத்தாரை அவர் மீட்டுக்கொண்டிருக்கிறார். இந்நாளில் மீட்கப்பட்டவர்களே அவருடைய சேனைகளாக வருங்காலத்தில், அவரோடு நீதியுள்ள இராஜ்யத்தை ஸ்தாபித்து, இந்த முழு உலகத்தின் பாவங்களையும், தொலைத்து அவர்களை இரட்சிப்பதற்கு உதவி செய்வார்கள்.

“மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ-வேதனைப்படுகிறது.” (ரோமர் 8:19,21,22) என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

இந்த முழு உலகமும் அடிமைத்தனத்தில் ஏகமாய் தவித்துக் கொண்டு, இந்த

உலகத்தின் மீட்புக்காக காத்திருப்பதை நாம் காணும்போது - “இன்னும் கொஞ்சம் காலத்தில், வருவேன் என்றவர் சீக்கிரம் வருவார், அவர் தாமதிப்பதில்லை” என்ற பவுலின் வார்த்தைகளை நாம் நினைவு கூறலாம். அந்த நாள் தேவனுடைய பார்வையில் நேற்று கழிந்த நாள்போலவும், இராச்சாமம் போலவும் இருக்கிறது. நம்முடைய கண்ணோட்டத்தில் பார்க்கும்போது கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாகக் காத்திருந்த நாம் இன்னும் சற்று நேரம் மாத்திரம் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு பின் இரட்சிப்பின் அதிபதியோடே இந்த உலகத்தின் மனுக்குலத்தை விடுவிக்கவும், பாவத்தின் நுகத்தை உடைக்கவும், மரணத்தின் சிறையிலிருந்து இரட்சிக்கவும் இவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும்.

**R1798 –** “விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்” (16ம் கேள்வி காண்க)

“விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார் . நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.” - எபி 10:38,39

சிந்திக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் நிச்சயமாக இந்தக் கருத்தைத் தவறவிட-மாட்டார்கள் என்று அறிந்து அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த வார்த்தைகள் உலகத்தாரை நோக்கிச் சொல்லப்படாமல், இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே சொல்லப்படுகிறது. விசுவாசத்தினால் அவர்கள் மரணத்திலிருந்து புதிதான ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின, அவர்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கிறார்கள். தேவனுடைய புத்திரர்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவுக்கு உடன்பங்காளிகளாக இருக்கிறார்கள், ஆகவே அவர் பட்டப்பாடுகளில் பங்கடைந்து, மரண பரியந்தம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவார்கள். இவர்கள் நித்திய ஜீவனில் ஜெநிப்பிக்கப்பட்டு, பரலோகத்தில் அழியாமை என்னும் நிலையை அடைய வழிநடத்தப்படுகிறார்கள்.

இந்த வகுப்பாருக்குத் தேவன் மிகுதியாக விசேஷித்த வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். இவைகளை நாம் பெற்றுக்கொண்டோம் என்ற நம்பிக்கை உறுதியாக இருந்தால், நிச்சயமாக இவைகள் நம்முடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். ஒருவேளை இதை விசுவாசியாமற்ப் போனால் அதனால் நமக்கு ஒரு பயனும் இராது. தனிப்பட்ட வாழ்க்கையில் இது நடக்காவிட்டாலும், நாம் “விசுவாசத்தின் வழியாக மட்டுமே ஜீவிக்கவேண்டியவர்களாக” இருக்கிறோம். நாம் மரணத்திலிருந்து ஜீவனைப் பெற்றிருக்கிறோம் என்று விசுவாசிக்கவேண்டும். மேலும், அந்த விசுவாசத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், அதில் வளர்ச்சியடையவும், சத்திய வார்த்தைகளினால் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படவும், தேவையான ஆவிக்குரிய ஆகாரங்களை அனுதினம் உட்கொள்ளவேண்டும்.

இவ்விதத்தில் நாம் விசுவாசத்தில் வளர்ந்தால், இக்காலத்திலும், வருங்காலத்திலும், நாம் அதிகபட்சமான சலுகைகளைப் பெறுவோம். மேலும் நம்முடைய ஆண்டவருடைய பிரசன்னத்திலும், பிதாவினுடைய சமூகத்திலும், உள்ள ஐக்கியத்திலும், நாம் அனுதினமும் மகிழ்ந்து களிக்கூறலாம். இப்படியாக, வசனங்களின்

ஆறுதல்களினாலும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்திலும், பரிசுத்த ஆவியின் அச்சாரத்துடன் நாம் தேவனுடைய புத்திரர்கள் என்று சாட்சிப்பெறுவோம். இன்றைக்கு நாம் கொண்டிருக்கும் மகிமையான நம்பிக்கைகளோடு, பெறும் சிறப்புரிமைகள், நம்மை ஊக்குவித்து, நமக்குள் இருக்கும் புது சிருஷ்டியை ஜீவனோடு வைத்திருக்கிறது. இதுவே உலகம் அறிந்திராததும், நாம் அனுதினம் உட்கொள்ளவேண்டிய ஆகாரமாக இருக்கிறது. நாம் இந்த உலகத்தை விட்டும், அதன் ஆவியை விட்டும் தனித்து வாழ்வதற்கு இந்த உணவே நமக்கு வழி வகுக்கிறது. இதுவே விசுவாசத்தினால் நடப்பதாகும். இந்த உலகத்தின் வழக்கத்திற்கு முரண்பாடான ஒரு வாழ்க்கையை இது நமக்கு குறிப்பிடுகிறது. நாம் பொதுவாக காணக்கூடிய வாழ்க்கை மற்றும் மாம்சத்தின் விருப்பங்களே இந்த உலக வாழ்க்கையாகும். உலகத்தார் காணக்கூடியவைகளை நோக்குகிறார்கள். சிருஷ்டிகரின் கோரிக்கைகளையும், விருப்பங்களையும் முற்றிலுமாக நிராகரித்து விட்டு, தங்களுடைய விருப்பத்தின்படியும், நோக்கத்தின்படியும் அவர்கள் கண்களினால் அதை நியாயந்-தீர்க்கிறார்கள். தெய்வீக வார்த்தைகளின் மேல் விசுவாசம் இல்லாததினால், வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கை அற்றவர்களாக இருக்கிறார்கள். எந்தவிதத்திலும், தேவனை ஒரு பொருட்டாக எண்ணாமல், பூமிக்குரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ள தீவிரமாக முயற்சிக்கிறார்கள்.

தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இப்படியிருப்பதில்லை. அவர்கள் காணப்படாதவைகள் நித்தியமானவைகள் என்று விசுவாசித்து, (2கொரி 4:18) காணக்கூடிய அனைத்தும் அநித்தியமானவைகள் என்று எப்போதும் மனதில் நிச்சயிக்கிறார்கள். ஆகவே அவர்கள் இந்த உலகத்திற்காக அல்ல, தேவனுடைய இராஜ்யத்தில் நித்தியமாக ஜீவிப்பதற்காக இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், தேவன் அவர்களுக்காக வெளிப்படுத்தின விசேஷித்த வாக்குத்தத்தங்களை அவர்களின் விசுவாசத்தின் கண்கள் கண்டது. விசுவாசத்தின் இந்த ஜீவியத்தில், சகல விதமான எதிர்பார்ப்புகள், இலக்குகள், நம்பிக்கைகள், கொள்கைகள், மகிழ்ச்சிகள் அனைத்துமே, இந்த உலகத்தின் காரியங்களைவிட மேன்மையாகவே உள்ளது. ஆனால் இவையனைத்தும் விசுவாசத்தையே சார்ந்திருக்கிறது. கிறிஸ்துவ விசுவாசம் புறக்கணிக்கப்பட்டால், விசுவாசத்தின் வாழ்க்கை முடிவுபெறும். அதாவது அவர்களுக்குள் இருக்கும் விசுவாசத்தின் தூண்டுதல் நின்றுவிடும். மேலும் அவிசுவாசத்தினால், அவர்களின் ஆவிக்குரிய பார்வை மங்கிவிட்டால், ஆவிக்குரிய விஷயங்களைச் சரியாக சீர்த்தூக்கிப் பார்க்கமுடியாமல், சாத்தான் முன் வைத்திருக்கும் உலகத்தின் வஞ்சனையானக் காரியங்களில் இழுக்கப்பட்டு, தேவனை விட்டு வெகுதூரம் சென்றுவிடுவார்கள்.

அவிசுவாசத்தின் பலன்களை விரும்புபவர்கள், விசுவாசத்தை விட்டு நழுவி, தேவனுடைய கிருபைகளையும் விட்டுவிலகி செல்கிறார்கள். விலகி செல்வது அல்லது பின்னிட்டுச் செல்ல ஓர் அபாயகரமானக் காரியமாக இருக்கிறது." பின்வாங்கிப்-போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது ... நாமோ கெட்டு போய் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்." (எபி 10:38-39) என்று வசனங்கள் குறிப்பிடுகிறது.

இடுக்கமான வாசலில் பிரவேசித்து பலி செலுத்துவதை நிறுத்துவதே, விசுவாசத்தில் பின்வாங்குவதற்கான முதல் படியாகும். மேலும் நாம் விட்டு வந்த காரியங்களை ஓயாமல் சிந்தித்துக்கொண்டிருப்பதன் காரணமாக நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் பந்தயப் பொருளின் மேல் நோக்கங்கள் குறைந்து விடுகிறது. இதுவும் விசுவாசத்தில்

பின்வாங்குவதற்குக் காரணமாகவும் அமைகிறது. அதற்கு பின் உலகப்பிரகாரமானக் காரியங்களுக்கு (விழுந்து போன நிலை) நாம் இசைவான ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறோம். இப்படியாக நம்முடைய பலவீனங்களை அறிந்த சோதனைக்காரன், ஏற்பாடு செய்திருக்கும் வழிகளில், இடறலின்றி நடந்து மகிழ்ச்சியோடு இந்த உலகத்தில் வாழ்க்கையை அனுபவிக்கலாம். மாம்சத்தின் சிந்தனைக்கு முன் மிக நுணுக்கமான தவறுகள் கொண்டுவரப்பட்டு அதில் நியாயமாக நடந்துக்கொள்வதுப்போல ஒரு தோற்றம் அளிக்கப்பட்டு, தங்களைத்தாங்களே நீதிமான்களாக நினைப்பதற்கு சாத்தான் எல்லா சூழ்நிலைகளையும் அமைத்து தருகிறான். அப்பொழுது, தேவனுடைய முதல் அன்பையும், அவருடைய நடத்துதலையும் விட்டுவிட்டு சத்தியத்தை விட்டுவிலகி தனக்கு நியாயமானவைகளை நடப்பிப்பார்கள். தேவனுடைய ஆவி இனி ஒருபோதும் அவர்களை வழிநடத்தாது.

தேவனுடைய சில பிள்ளைகள் சோதிக்கப்படும்போது, இப்படிப்பட்ட வழிகளை அவர்கள் தேர்வு செய்வதில்லை. ஏனெனில் நாம் விலையேறப்பெற்ற பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். பழைய சுபாவத்திற்கும், புது சிருஷ்டிக்கும் தொடர்ந்து பிரச்சனைகள் ஏற்படும்போது, விழிப்பாயிருந்தால் மட்டுமே நம்முடைய புது சிருஷ்டி பழைய சுபாவத்தைத் தனக்குக் கீழ்ப்படுத்தமுடியும். நீண்ட காலப்-போராட்டங்களில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு மிக அவசியமாக இருக்கிறது. "தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ?" கட்டளைகளினாலும், ஒழுக்கத்தினாலும், அனுபவங்களினாலும், அவர் நம்மை நடத்துகிறார். நாம் அவருடைய ஆவியை பூரணமாகப் பெற்றிருந்தால், இவைகளை நாம் சந்தோஷத்துடனும் மனத்தாழ்மையுடனும் ஏற்றுக்கொண்டு, அதிக நன்மைகளைப் பெறுவோம். அப்போது நமக்கு கிருபைக்கு மேல் கிருபை தந்து, வெற்றிக்கு மேல் வெற்றி தந்து நம்மை வழிநடத்துவதில் தேவன் மகிழ்ச்சியடைவார். நாம் யுத்தகளத்தில் நின்று கொண்டு எதிராளிகளோடு எதிர்த்துப் போரிடுவது பெரிய காரியமல்ல. உண்மையாக வெற்றியைப் பெற நாம் தேவனுடைய சர்வாயுதத்தை மட்டும் தரித்துக்கொள்ளாமல், யுத்தத்தின் நாயகர்களாக இருந்து, கண்களின் இச்சைகளையும், ஜீவனத்தின் பெருமைகளையும், மாம்சத்தின் இச்சைகளையும், நீதி மற்றும் பரிசுத்தத்தின் சகல எதிரிகளை நம்மை விட்டு முற்றிலுமாக அழிக்கக்கூடிய போர் வீரர்களாக இருக்கவேண்டும். அன்பு - தேவனிடத்தில் அன்பு, அவருடைய சத்தியத்தின் மேலும், நீதியின் மேலும் நாம் வைக்கும் அன்பு, இந்தக் காரியங்களை முற்றிலுமாக அகற்ற.......நம்மை அனுதினம் ஊக்குவித்து, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் பங்கைப்பெற நம்மை வழிநடத்தவேண்டும். கொழுந்து விட்டு எரியும் அன்பு, நம்மை முழுமையாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும். 99ரூ அளவு யுத்தம் வெற்றிபெறும். இருப்பினும், "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்." (யூதா 21) என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

சத்தியத்திற்கு, ஏற்ற விசுவாசமும், அதன் கோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிதலும், இருக்கும் பட்சத்தில், நாம் அதிகமதிகமாக சத்தியத்தில் வளர்ந்து, நீதி மற்றும் சமாதானம் என்ற பாதையில் வழிநடத்தப்பட்டு, நம்மை நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கச்செய்யும்.

விசுவாச ஓட்டம் ஒரு தனிநபருக்குரிய ஓட்டமாக இருந்தாலும், அது தலைக்கு இசைவான ஓட்டமாக இருக்கிறது. வசனங்களை ஆதாரமாகக் கொண்ட உபதேசங்களை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது. நாம் சத்தியம் என்று ஏற்றுக்கொண்ட அனைத்தையும் நாம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அப்பொழுது சத்தியத்தின்

கோட்பாடுகள் நம்முடைய கோட்பாடுகளாகவும், தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நம்முடைய சுவாசமாகவும் மாறும். “தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்படும் அனைவரும் தேவனுடைய புத்திரர்கள்” என்று நாம் வாசிக்கிறோம். ஆனாலும் இந்த உலகத்தை ஜெயிக்க நமக்குள்ள பெலன் போதாது என்று நாம் உணருகிறோம். நம்முடைய மாம்சமும், சாத்தானும் அதிக பலமுள்ளவர்களாகத் தோன்றுகிறார்கள். நமக்குள் நற்கிரியைகளைத் துவங்கினவர் அதை முடிக்கவும் வல்லமையுள்ளவராக இருக்கிறார் என்று வாசிக்கிறோம். ஆகவே நாம் மனத்தாழ்மையோடு அவரிடம் நம்மை ஒப்புவித்தால் அவர் நம்மை வழிநடத்துவார். நம் தேவனுடைய வாக்கு என்றுமே மாறாதவைகள். நம்மால் தாங்க முடியாத சோதனைகளை அவர் அனுமதிப்பதில்லை. ஆகவே நம்முடைய விசுவாசத்தை மிக உறுதியாகப் பற்றிக்கொண்டு, அவருடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைத்தவர்களாக, நீதியிலும், விசுவாசத்திலும், சத்தியத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, பூமிக்குரிய காரியங்களில் நாம் பின்னிட்டுத் திரும்பாதபடிக்கு நம்மை நாமே ஜாக்கிரதையாக தேவனிடத்தில் அர்ப்பணிப்போமாக.

**R1949** - “விசுவாசத்தின் சோதனைகள்” - ஏன் அனுமதிக்கப்படுகிறது? (கேள்வி 17 காண்க)

தேவனுடைய ஜனங்களைக் குழப்பங்களுக்குள்ளாகும்படி தப்பறையானப் போதனைகள் அனுமதிக்கப்படுவதின் காரணம் என்ன என்று அநேகர் திகைப்படைகிறார்கள். உண்மையான சத்தியத்தைப் பெற்றுக்கொண்டபின், சகல முரண்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வந்ததென்று எண்ணி, மகிழ்கிறார்கள். அதாவது சமாதானத்தின் நகரத்தை அடைந்துவிட்டோம் என்றும் இனி ஒருபோதும் நாம் திசைத்திருப் பப்படுவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் இந்த ஒரு தவறானக் கூற்று, நம்முடைய மிகப் பெரிய எதிராளியாகிய சாத்தான், வெளிச்சத்தின் பிள்ளைகளை எந்த இடறுதல்களின்றி அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க அனுமதிப்பதில்லை. சாத்தானுடைய வல்லமை இன்னும் பூரணமாகக் கட்டப்படாததினால், தேவனுடைய இராஜயத்திற்கு எதிராகவும், அதன் கோட்பாடுகளுக்கு எதிராகவும், அவன் காரியங்களை நம்பவைக்கிறான்.

அவன் மிக தந்திரமுள்ளவனும், நீடித்த நாட்களாகத் தேவனுக்கு எதிராகச் செயல்படுகிறவனுமாக இருக்கிறான். வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருக்கும் இராஜயத்தின் புத்திரர் அவனுடைய பொறி பறக்கும் அம்புகளால் குறிபார்க்கப்-படுகிறார்கள். இருளின் இராஜ்யத்திலிருந்து தப்பித்து, வெளிச்சத்தில் நடக்கும் போது, தங்களுடைய பாதத்திற்குக் கண்ணிகள் விரித்து வைக்கப்பட்டு, அவர்களின் பாதங்கள் இடறுதலுக்கானக் காரியங்கள் வழியிலே வைக்கப்படுகிறது. இந்த வேலை மிகவும் நுட்பமாகச் செய்யப்படுகிறது. இருளிலிருந்து தப்பித்தவர்கள் மீண்டும் ஏமாந்து சிக்கிக்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. இந்தத் தீமையான நாட்களில், இப்படிப்பட்ட சாத்தானின் பலமான சோதனைகளிலிருந்து வெகு சிலரே தப்பிக்கிறார்கள்.

இந்தத் தீமையான நாட்களிலே, அநேகருடைய விசுவாசங்கள் கரையத்தக்கதாக இப்படிப்பட்ட வல்லமையான சோதனைகளைத் தேவன் ஏன் இன்னும் அனுமதித்துக்-கொண்டிருக்கிறார் என்ற கேள்வி நியாயமானதாகதான் இருக்கிறது. இந்தக் கேள்விக்கான விடை - “கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால்

சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்-படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்." (11தெச 2:10-12) என்று அப்போஸ்தலனாகிய பவுல் பதில் அளிக்கிறார்.

இப்படியாக, தேவன் அனுமதிப்பது மட்டும் அல்ல, அப்படிப்பட்ட சோதனைகளைத் தேவன் அனுமதிப்பதற்கு விரும்புகிறார் என்றும் தெளிவாகிறது. பொறி பறக்கும் அம்புகளினால் ஆயிரம் பேர் விழுந்து போனால், அந்த ஆயிரம் பேர்களும், சத்தியத்திற்கு ஏற்ற சாட்சிகளாக இருக்க வாய்ப்பில்லை என்பது பொருள். அவர்கள் தூய அன்பினால் சத்தியத்தைப் பெறவில்லை என்பது வெளிப்படுகிறது. ஒரு குழந்தை புதிய விளையாட்டுப் பொருளைப் பெற்றுக்கொள்வதைப் போல அநேகர் மிகுந்த சந்தோஷத்துடன் சத்தியத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். சிலர் நூதனப்பிரியத்தோடு சத்தியத்தைக் கேட்பார்கள். கேட்டப்பின் மகிழ்வார்கள். அதற்கு பின் அதை விட ஆர்வமூட்டும் காரியங்கள் கிடைக்கும்போது, அதை தள்ளிவைத்துவிட்டு மற்ற காரியங்களில் ஈடுபடுவார்கள். அல்லது வாக்குவாதங்களில் தங்களுக்கு வெற்றி கிடைப்பதற்காகவும், தங்களுக்குக் கீர்த்தி சேர்த்துக் கொள்வதற்காகவும், சத்தியங்களைக் கற்றுக்-கொள்கிறார்கள். அல்லது வாழ்க்கையில் சில தீராத பிரச்சனைகள் மற்றும் வேதனைகள் நீங்க சத்தியத்தைத் தேடுகிறார்கள். ஆனால் சத்தியத்தின் அம்சங்களை அவர்கள் உணராமல், பிரச்சனைகள் வரும்போது அதிலிருந்து தப்பித்து, பரலோகத்திற்குள் நுழைய முயற்சிக்கிறார்கள்.

சத்தியத்தை இலகுவாக மதிப்பிடுபவர்கள், அதற்கு அபாத்திரராகப் போய்-விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இந்தச் சத்தியத்தை இழந்துவிடவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. ஆகவே, விருப்பத்தோடு, தெய்வீகமாக அனுமதிக்கப்பட்ட விசுவாசத்தின் சோதனைகள் - சத்தியத்தில் வேரூன்றி நிலைத்திராவிட்டால் *ஶி* "கூடுமானால், தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும் - ஆனால் ஒருவர் அன்பினால் சத்தியத்தைப் பெற்றிருந்தால், அவர்கள் ஒருபோதும், அந்தச் சத்தியத்தை துன்மார்க்கத்திற்க்காவது அல்லது விருதாவாவது அதை விட்டுவிட-மாட்டார்கள். ஆகவே சிலர் அபாத்திரராக மாறிவிடுகிறார்கள், சிலர் சத்தியத்தினால் வரும் சுயாதீனத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். "நீதியைப் பிறப்பிப்பதற்காக வெளிச்சம் (சத்தியம்) விதைக்கப்படுகிறது, இருதயம் களித்திருக்க மகிழ்ச்சி (சத்தியத்தின் மகிழ்சசி) விதைக்கப்படுகிறது." அதேபோல், கிறிஸ்துவின் இராஜ்யம் வல்லமையாக ஸ்தாபிக்கப்பட்டு, இந்த பூமியை முழுமையாக தன்னுடைய பிடியில் கொண்டுவரும் வரைக்கும், துன்மார்க்கன், தவறுகளினால் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

இதன் காரணமாக, பிதாவாகிய தேவன் கடந்த கால மூடநம்பிக்கைகளுக்கு இன்று மனிதனின் சிந்தையில் ஒரு தடுக்கலைப் போட்டிருக்கிறார். மேலும், தேவனுடைய ராஜ்யத்திற்கு மிக அருகில் உள்ளதினால், சில தவறுகளின் கட்டுப்பாட்டை தளர்த்தியிருக்கிறார். ஆனால் மகா உபத்திரவத்தின் காலத்தில், இவைகள் முற்றிலுமாகக் கட்டவிழ்க்கப்பட்டு, மிகுந்த கலவரத்தில் முடிவடையும். அப்பொழுது நடக்கும் இருப்புக்கோலாட்சி, அவைகளைச் சீர்ப்படுத்தும். அப்பொழுது அனைவரும் சத்தியத்தின் முக்கியத்துவதை உணர்ந்து, சத்தியத்தைத் தவறாகப் பயன்படுத்தினதின் விளைவுகளை அறிந்து சீர்ப்பொருந்துவார்கள். ஆகவே இப்பொழுது இந்தத் தவறான நோக்குடன் சத்தியத்தைப் பெற்றவர்கள் அதை இழந்து விடவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய உண்மையான பிள்ளைகள், அந்தச் சத்தியத்தைத்

தங்களுடைய ஜீவனைப் போல நேசிக்கிறார்கள். அவர்கள் நீதியை விரும்புகிறார்கள், தங்களுடைய சகோதரர்களை நேசித்து அவர்களுக்குத் தேவையான நேரத்தில் உதவிகளைச் செய்கிறார்கள். அவர்கள் உருக்கமான அன்பையும், சாந்தத்தையும் பெற்றிருக்கிறார்கள். சம்பாஷணைகளின் போது மிகவும் சாந்தமாக, தேவனுடைய நாமம் மகிமைப்பட சத்தியத்தைத் தெரிவிக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தின் விலைமதிப்பை அறிந்தவர்கள். அவர்கள் அதை நித்தமும் தியானிப்பார்கள். அதற்குள் இருக்கும் மகா பிரம்மாண்டமான குணநலன்களை (நீதி, அன்பு, அஹிம்சை) நோக்குவார்கள். அவர்கள் கிறிஸ்துவின் பங்காளிகளாக இருப்பதற்கு மட்டுமே மகிழ்வார்கள். அவர்கள் மகிமையான நன்மைகளையும், அன்பையும், ஞானத்தையும் நீதியையும், தேவனைப்போல் பிரதிபலிப்பார்கள். ஆகவே, அவர்கள் சத்தியத்தையும், அதை கொடுத்தவரையும் அதிகமாக நேசித்து, தங்களுடைய இருதயத்தில் ஒரு பொக்கிஷமாக அதை பத்திரப்படுத்தி, அதை மீண்டும் மீண்டுமாக புரட்டிப் பார்த்து அதன் மகத்துவத்தை ருசிப்பார்த்து தங்களையும் அதன் குணலட்சணங்களுக்கு மாறுவதற்கு முயற்சித்து, மற்றவர்களும் அந்த ஆசீர்வாதத்தைப் பெற அதில் நடத்த விரும்புவார்கள்.

இதுவே சத்தியத்தை உண்மையான இருதயத்தில் உத்தமமான நோக்குடன் பெறுவதாகும். இப்படியாக சத்தியத்தைப் பெற்றவர்கள் ஒருபோதும் தப்பறையால் வஞ்சிக்கப்படமாட்டார்கள். அந்தச் சத்தியம் நன்மையானது என்று அவர்கள் உணர்ந்த பின் அதை எந்தச் சூழ்நிலையிலும், அவர்கள் கைவிடமாட்டார்கள். காந்தத்தோடு இரும்பு ஒட்டிக்கொள்வதைப்போல இவர்கள் சத்தியத்தோடு ஐக்கியப்பட்டிருப்பார்கள். ஆனால் மரத்தூள் அந்தக் காந்தத்தில் ஒட்டிக்கொண்டிருந்தாலும், ஊதிவிடும்போது அது பறந்துபோய்விடும். இப்படியாக தான் அநேகர் தேவனோடும் அவர் கொடுத்த சத்தியத்தோடும் உறவு வைத்துக்கொள்கிறார்கள். தப்பறையானப் போதனைகளாகிய காற்றுகள் அவர்கள்மேல் அடிக்கும்போது அவர்கள் பறந்துவிடுகிறார்கள். காற்று அடிக்கும் போது அவர்கள் ஒரே நேரத்தில் பறந்துவிடுவதில்லை, காற்று பலமாக அடிக்கஅடிக்க ஒவ்வொன்றாக பறந்துவிடும். ஆனால் உண்மையான தேவனுடைய ஜனங்களை அவர்களுடைய திராணிக்கு மேல் சோதிப்பதற்குத் தேவன் அனுமதிப்பதில்லை. அவருடைய பாதங்கள் கல்லில் இடறாதபடிக்கு தேவன் அவர்களை காத்துக்கொள்ள அவரவருக்குரிய தூதர்களை நியமித்திருக்கிறார்.

ஆகவே தேவனால் நியமிக்கப்பட்டவர்கள், சத்தியத்தைத் தெளிவாகப் பகுத்து அறிந்து, தாமே தேவனுடைய கிரியையாக இருப்பதைக் கற்றறிந்து, மற்றவர்களைக் கவனத்தோடு வழிநடத்துவார்கள். அவர்கள் தங்களுடைய மந்தையைப் போஷிக்க ஆர்வமுள்ள ஒரு தாயைப்போல் இருப்பார்கள். இப்படியாக, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச் சகலத்திலும் போஷித்து, வழிநடத்துவார், அவர்கள் ஒருகாலத்திலும் இடறுவதில்லை.

நாம் பெற்ற சத்தியத்தை அன்பினால் இந்நாள் வரைக்கும் பற்றிக் கொண்டிருக்கிறோமா? என்பது அழைக்கப்பட்ட அனைவரும் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது . " ஒருவன் கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராவிட்டால் , அவன் கிறிஸ்துவினுடையவனாக இருக்கமுடியாது." என்று சொல்லியிருப்பதினால், ஆசீர்வதிக்கப்பட்ட ஆவியை நமக்குள் தாராளமாகச் செயல்பட அனுமதிக்கவேண்டும். "ஆவிக்குரிய சுத்திகரிப்பினாலும், சத்தியத்தின் நம்பிக்கையினாலும், நீங்கள் பெரிதான இரட்சிப்புக்காகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று வெகுசீக்கிரத்தில் வெளிப்படும். (11தெச 2:13) சத்தியத்தின் நம்பிக்கையானது உத்தமமான இருதயத்தில் நல்ல

கனிகளைக் கொடுக்காவிட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அதாவது, ஆவியை சுத்திகரிப்பது, முழுமையாக தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதாகும். இந்தப் பாடத்தை நம்முடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்டு, பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுவோம். எவ்வளவு விலைக்கொடுத்தாவது (சுயபலி) " சத்தியத்தை வாங்கு " எந்த சூழ்நிலையிலும் , உலகப் பிரகாரமானக் காரியங்களுக்கு "சத்தியத்தை விற்காதே".

**R1822 –** "உங்கள் விலையேறப்பெற்ற விசுவாசம்" (17ம் கேள்வி காண்க)

"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." - 1 பேது 1:7

விசுவாசம் இரண்டு அடிப்படையானப் பகுதிகளைக் கொண்டது - அறிவாற்றலுள்ள உறுதி மற்றும் இருதயத்தின் நம்பிக்கை. முதலில் சொல்லப்பட்ட பகுதி பொதுவாகவும், இரண்டாவதாகச் சொல்லப்பட்டப் பகுதி மிக உறுதியானதுமாக இருக்கிறது. இரண்டாவது பகுதியைப்பற்றி நாம் வாசிக்கும்போது - "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும்" (ரோம 10:10) தலை மற்றும் இருதயமும் - அறிவு மற்றும் உணர்வுகள் - விசுவாசத்திற்குத் தேவையானது. இந்த விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாதக் காரியம். (எபி 11:6) இதில் அநேகர் விசுவாசத்தின் ஒரு பகுதியை மட்டும் கொண்டிருக்கிறார்கள். சிலர் உணர்ச்சிப்பூர்வமாகவும், சிலர் அறிவுப்பூர்வமாகவும் பெற்றிருக்கிறார்கள். பொறி பறக்கும் அம்புகளாகிய சோதனை வரும்போது இவர்கள் அதை எதிர்த்து நிற்க திராணியற்றவர்-களாகிறார்கள். ஆகவே விசுவாசத்தின் இந்த இரண்டு பகுதிகளையும் நாம் கொண்டிருப்பவர்களாக இருந்து, முடிவு பரியந்தம் நிலைத்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது , அவருடைய மகிமையும், கனமும் உண்டாகும்படி நாம் காணப்பட வேண்டும்.

தெய்வீக சத்தியத்தின் அடிப்படைக் கோட்பாட்டை இந்த அறிவாற்றலோடு புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, தனிப்பட்டவகையில் ஞானமுள்ள, சர்வ வல்லமையுள்ள தேவனே சர்வத்தையும் சிருஷ்டித்து, அவைகளைப் பராமரித்து, தன்னுடைய ஒரே பேறான குமாரன் இயேசுவின் வழியாக இரட்சிப்பின் திட்டத்தை வகுத்தார் என்பதே விசுவாசத்தின் அஸ்திபாரமாக இருக்கிறது. அந்த அஸ்திபாரத்திற்கு மேல் மிக அற்புதமாகக் கட்டப்படும் கட்டிடமே நம்பிக்கை மற்றும் தேவன் அவருடைய பிள்ளைகளை அன்பாக கொடுத்த வாக்குறுதிகளாகும்.

ஆகவே நாம் பெற்றிருக்கும் அறிவுப்பூர்வமான தெய்வீக சத்தியத்திற்கு மட்டும் விசுவாசத்தின் சோதனை அனுமதிக்கப்படாமல், நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பும் சோதிக்கப்படுகிறது. ஆகவே இந்த இரண்டு காரியங்களிலும் ஒவ்வொரு உண்மையான தேவ பிள்ளைகளும் கடுமையாகச் சோதிக்கப்படுவார்கள். கிறிஸ்துவின் போர்வீரனாக இருக்கும் ஒவ்வொருவரும் சோதனையில் விழுந்துவிடாதபடிக்குத் தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்துகொள்ளவேண்டும். நம்முடைய விசுவாசத்தின் அறிவுப்பூர்வமாகச் சோதிக்கப்பட்டால் - நம்முடைய நம்பிக்கையின் சகலக் காரியங்களுக்கும், தேவனுடைய வார்த்தைகளே பதில் அளிக்கப்பட்டும், எவ்வளவு

நேர்த்தியாக இருந்தாலும், மனிதனுடைய சிந்தைகளும், நோக்கங்களும் நம்மைத் தப்பறையானச் சூழ்நிலைகளில் சிக்கிக்கொள்ள விடாதபடிக்கு எச்சரிப்போடு இருக்க வேண்டும். ஏனெனில், விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாக இராவிட்டால், மேலுள்ள கட்டிடம் நிலைத்திருக்க முடியாது. சாத்தானின் பலவிதமானக் காற்றுகளும், அதற்கு எதிரான சோதனைகளும் அதை கீழேவிழத் தள்ளிவிடும். சந்தேகங்களும், பயமும் அந்தக் கட்டிடத்தை அசையச் செய்யும். சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும் பட்சத்தில் சாத்தான் மிகக் கொடிய சோதனைகளை முன்வைக்கும்போது முழுமையாக அந்த ஆத்துமா நஷ்டமடையும்.

ஆகவே, நாம் முதலில் நம்முடைய விசுவாசத்தில் அஸ்திபாரத்தை கவனிக்க வேண்டும் - அடிப்படை சத்தியத்தைப் பற்றிய அறிவை நாம் தெளிவாகக் கற்றறிய வேண்டும். தேவனுடைய ஜனங்களை ஊக்குவிக்கும் தெய்வீக சத்தியத்தின் ஒவ்வொரு பகுதிகளையும் அறிவுப்பூர்வமாக தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும், அதில் நாம் ஆழமாக வேர் கொண்டவர்களாக விசுவாசத்தை ஸ்தாபித்து, தேவனுடைய போதனைகளை உறுதியாக பற்றிக் கொள்ளவேண்டும். நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும். (எபி 2:1)

விசுவாசத்தின் அடிப்படைப் போதனைகளில் நாம் தெளிவுள்ளவர்களாக இருந்தாலும், அதற்கு மேல் கட்டப்பட்டிருக்கும் நம்முடைய இருதயத்திற்குள்ளான நம்பிக்கையைப் பற்றியும் கவனமாக இருக்கவேண்டும். அதிகமாக வெள்ளமும், புயலும் காணக்கூடிய கட்டிடத்திற்குப் பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். சோதிக்கப்பட்டபின்பு, சகலவிதமான அம்புகளையும் எதிர்த்து நின்று வெற்றிப் பெறுவோர்கள் தேவனுடையப் பார்வையில் மிக விலையேறப்பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்று பேதுரு கூறுகிறார். இருளிலாவது, வெளிச்சத்திலாவது, சத்தியத்தின் போதனைகளில் மட்டும் அல்ல, நாம் தேவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்கள் மேல் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தில் , நம்முடைய முழு இருதயமும் , அதன் நோக்கங்களும் , நாம் சத்தியத்திலும் , நீதியின் மேலும் வைத்திருக்கும் வைராக்கியத்தையும் நாளுக்கு நாள் அதிகரித்து, உறுதிபட்டு, கிறிஸ்துவின் குணலட்சனங்களில் வளரும்போது, நமக்குள் இப்படிப்பட்டக் காரியங்களை எதிர்பார்க்கும் தேவனை பிரியப்படுத்தமுடியும்.

ஆகவே - “பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்” - 1பேது 4:12,13 இந்த வசனத்தின் அடிப்படை போதனைகளைப்பற்றி குறிப்பிடாமல், போதனைகளில் நிலைத்திருப்பதற்காவது, நீதியை நிலைநாட்டுவதற்காவது, கிறிஸ்துவின் நிமித்தம் வரும் உபத்திரவங்களினால் வரும் சோதனையைப்பற்றி சொல்லப்படுகிறது. ஆகவே அப்போஸ்தலன் குறிப்பிடும்போது - “கிறிஸ்துவின் நிமித்தம் துன்பப்படுத்தப்படுவீர்களானால், சந்தோஷப்பட்டுக் களிக்கூறுங்கள், ஏனெனில், தேவனுடைய மகிமையான ஆவி உங்கள் மேல் தங்கியிருக்கிறதே”. நாம் தவறுகளைச் செய்து பாடுகளை அனுபவியாமல், சத்தியத்தின் நிமித்தமாகப் பாடுகளைச் சகிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே நாம் கிறிஸ்தவ போதனைகளுக்காகவும், கிறிஸ்துவுக்காகவும், பாடுகளை அனுபவித்தால் நாம் வெட்கப்படாமல், இதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவோம்.

தானியேல் தீர்க்கதரிசி விசேஷவிதமாக இந்தகடைசி காலத்தைப்பற்றிக் கூறும்போது, “அநேகர் சுத்திகரிக்கப்பட்டு, வெண்மையும் தூய்மையுமாக்கப்படுவார்கள்”. மல்கியா கூறும்போது - “புடமிடகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும், தேவனுடைய ஜனங்கள் சுத்திகரிக்கப்படுவார்கள்”. “முடிவு பரியந்தம் நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். (1தீமோ 6:12, 2தீமோ 2:3) மேலும் சோதனையில் அகப்பட்டு உபத்திரவப்படும் அனைத்து தேவனுடைய ஜனங்களுக்கும் சங்கீதக்காரன் அநேக ஆறுதலான வசனங்களைக் கொடுத்திருக்கிறார். (சங் 77:1-14, 116:1-14, 34:19, 31-24, 2தெச 3:3)

அன்பான சகோதர, சகோதரிகளே, நீங்கள் எப்பக்கத்திலும், நெருக்கப்படுவதினால், தேவனுடைய பாதுகாப்பையும், அன்பையும், அரவணைப்பையும், அவர் உங்களுக்குக்கொடுத்த வாக்குத்தத்தங்களையும் சந்தேகிக்கிறீர்களா? சோர்ந்துப் போய் தளர்ந்து விட்டீர்களா? உங்கள் எதிராளி உங்களைவிட மிகவும் பலசாலி என்று நினைக்கிறீர்களா? உங்களை நசுக்கக்கூடிய பாரத்தோடு உபத்திரவங்கள் உங்களை எதிர்நோக்குகிறதா? உங்கள் தலை எதிர்க்கமுடியாத அளவிற்கு அதைச்சுற்றி பாரமான மேகங்கள் தொங்குகிறதா? மிகவும் எளிது - உங்கள் விசுவாசம் தன்னுடைய வெற்றியைக் கோரவேண்டும். இந்நேரத்தில் நீங்கள் உங்கள் விசுவாசத்தினால் சகலத்தையும் ஜெயிக்கலாம். இப்போது உங்கள் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. வருங்காலத்தில் நீதியின் சூரியன் உங்கள் மேல் பிரகாசிக்கும். இப்பொழுது நாம் அமைதியாக விசுவாசத்திற்கான அஸ்திபாரத்தைப் (அடிப்படை சத்தியங்கள்) போட்டு, அதில் கிறிஸ்துவின் குணலட்சணங்களைக் கட்டிடமாகக் கட்டவேண்டும். இப்பொழுது உங்கள் விசுவாசத்தை நிரூபிப்பதற்காக உலைக்களத்தில் போடப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே உங்கள் விசுவாசம் ஒழிந்துப்போகாமலிருக்க முழு தைரியத்தோடு, நீடிய பொறுமையுடன், சிந்தையில் சகல வாக்குத்தத்தங்களையும் பற்றிக்கொண்டு, பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்ள அமைதியாக இருக்கக்கடவோம். “நீங்கள் பொறுமையோடு, விசுவாசத்தோடிருப்பதே உங்கள் பெலன்”. “கர்த்தருக்குள் இளைப்பாறி, அவருக்காகக் காத்திருங்கள்”. அப்போது விசுவாசத்தில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அதற்கு பின் கர்த்தர் குறித்தக் காலத்தில் தேவனுடைய கரம் சகல கிரியைகளையும் உங்களுக்கு நன்மைக்கு ஏதுவாக அங்கீகரித்து உங்களுக்கு நன்மைகளைக் கட்டளையிடுவார். இப்படியாக மெய்ப்பிக்கப்பட்ட உங்கள் விசுவாசம் அக்கினியினால் சோதிக்கப்படும் அழியக்கூடிய பொன்னைக் காட்டிலும் விலையேறப்பெற்றது என்று பேதுரு கூறகிறார்.

**F721 - F729 -** (19ம் கேள்வி காண்க) **The End** 2.3.10

மற்றவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்து சபையின் வேலைகளை இதுவரைக்கும் நாம் கவனித்துவந்தோம். இப்பொழுது முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்து வேத வசனங்கள் என்ன கூறுகிறது என்று பார்க்கலாம். புது சிருஷ்டிகள் எப்படிப்பட்ட சரீரத்தோடு எழும்புவார்கள்? அவர்கள் எப்படிப்பட்ட வல்லமையையும், குணலட்சணங்களையும் பெற்றிருப்பார்கள்?

“மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே, வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே” (1கொரி 15:48) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். பொதுவாக உலக ஜனங்கள் ஆதாம் பரிபூரணமாகப் படைக்கப்பட்ட நிலைக்கு அதாவது இந்த உலகத்தில் வந்த “மனிதனாகிய

இயேசு கிறிஸ்துவைப்" போல் சீர்பொருந்தப்படுவார்கள் என்று தெளிவாகப் புரிகிறது. அப்பொழுது இந்த முழு உலகமும் தெய்வீகமான சிருஷ்டிகருடைய பூமிக்குரிய சாயலை முழுமையாகப் பெறுவதை எண்ணி நாம் களிக்கூறலாம். ஆனால் சுவிசேஷ யுகத்தின் சபை ஜனங்களாக அழைக்கப்பட்டவர்களுக்கு சில விசேஷித்த நோக்கங்களுக்காகத் தேவன் கொடுத்திருக்கும் விசேஷித்த வாக்குத்தத்தங்களுக்காக மேலும் நாம் களிக்கூறலாம். இவர்கள் தேவனுடைய சாயலைப் பெறக்கூடியவர்கள். அதாவது பூமிக்குரிய தேவனுடைய சாயலை அல்ல, பரலோகத்திற்குரிய ஆவிக்குரிய தேவனுடைய சாயலைப் பெறப்போகிறார்கள். "அவர் வெளிப்படும்போது, நாம் அவருக்கு (மகிமையடைந்த இயேசு) ஒப்பாக இருப்போம்..." என்று நாம் வாசிக்கிறோம். அவர் பரிபூரணமான மனிதன் நிலையைக் காட்டிலும், ஓராவிக்குரிய ஜீவியாகிய அவரை போல் மாறி, அவருடைய மகிமையிலும், வல்லமையிலும் பங்கடைந்தால் நாமும் பிதாவின் சாயலை பெறுவோம். நாம் தேவனுடைய சாயலைப் பெறுவதினால், "மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரிடம் நாம் சென்று, அவரை தரிசிக்கப் போகிறோம்" - 1யோவ 3:2, 1தீமோ 1:17, 6:16, யாத் 33:20

"மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே, வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே" என்ற வசனத்தை நாம் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. அதாவது, அனைவரும் வானத்துக்குரிய சாயலைப் பெறுவோம் என்று பவுல் இங்கு குறிப்பிடவில்லை. இது தேவனுடைய திட்டமும் இல்லை. அவர் மனிதனை சிருஷ்டிக்கையில், பூமிக்குரிய ஜீவியாகவும், மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அவருடைய சாயலில் அவரை சிருஷ்டித்து, இந்தப் பூமியை ஆண்டுகொள்ளவும், பரலோக சிருஷ்டிகளைப் பிரதிநிதிகளாகவும் வைத்தார். (ஆதி 1:26, சங் 8:4-7) புது சிருஷ்டியின் தேர்வு பொறுத்தவரையில் இந்தப் பூமிக்குரிய படைப்பிற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இவர்கள் உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஆயிர வருட ஆட்சியில் இந்த முழு உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்காக "சிறு மந்தையாக" தெரிந்துகொள்ளப்பட்டு, ஆண்டவரின் இராஜ்யத்தின் வகுப்பார் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகவே இது மேலும், தெய்வீக திட்டங்களைச் செயல்படுத்த மிகப் பொறுப்பான ஒரு வேலையாக இருக்கிறது.

ஆனால் அப்போஸ்தலன் மேலும், இதன் பொருளைக் குறித்த 50வது வசனத்தில் விளக்குகிறார் - "சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது, அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை." இப்படியாக நாம் இந்த மாம்சத்திலிருக்கும் நிலையையும், வருங்காலத்தில் ஆவிக்குரிய நிலையையும் பிரித்துக் காட்டுகிறார். ஆகவே நாம் இந்த மாம்சத்திலிருக்கும்வரை தேவனுடைய இராஜ்யமாக முடியாது என்று தெளிவாகக் கூறுகிறார். ஏனெனில், அது ஓர் ஆவிக்குரிய இராஜ்யம். அதில் ஆவிக்குரிய ஜீவிகள் மட்டுமே இருக்கமுடியும். நம்முடைய தலையும், வழிக்காட்டியுமான நம்முடைய ஆண்டவர் தாமே சபைக்கு மாதிரியாக இருப்பவர் இப்பொழுது ஆவிக்குரிய நிலையில் இருக்கிறார். "நாமும் அவரைப்போலிருப்போம்" - நியாயத்தீர்ப்பினால் இனி உலக ஜனங்கள் சீர்ப்பொருத்தப்படும், முந்தய ஏதேன் தோட்டத்தில் மனிதன் பெற்ற பூரண மாம்சத்தைப் போல் இது இல்லை.

சபை மாம்சத்திலிருந்து ஆவிக்குரிய நிலைக்கு மாற்றப்படுவதைப் பற்றிய கருத்தைப் புரிந்துகொள்வது மிகக் கடினமாக இருக்கும் என்ற உண்மையை பவுல் அறிந்திருந்தார். மரணத்தின் நித்திரையில் இருப்பவர்களைக் காட்டிலும், உயிரோடு

மாம்சத்திலிருப்பவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்துப் புரிந்துகொள்வது கடினாக இருக்கும் என்று அவர் உணர்ந்திருந்தார் . ஆண்டவருடைய பிரசன்னத்தில் உயிரோடிருக்கும் சபை வகுப்பார் ஆவிக்குரிய சரீரத்தைப் பெறுவதைக் காட்டிலும் மரித்தோர் புதிய ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்திருப்பார்கள் என்று புரிந்துகொள்வது எளிதாயிருக்கிறது. நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலனாகிய பவுலின் மூலம் இதை நமக்கு தெளிவுபடுத்துகிறார் - "இதோ, ஓர் இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன், நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஓர் இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும் , அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்." (1கொரி 15:51,52)

இதை ஒரு இரகசியம் என்று ஆண்டவர் அறிவித்தாலும் , இதில் உள்ள மறைப்பொருளை சற்று புரியும்படி தெளிவுப்படுத்தினாலும், ஆண்டவரின் ஜனங்கள் "நித்திரை" அடைந்தார்கள் என்பதற்குப் பதிலாக "மரித்தார்கள்" என்று எழுதப்பட்டதன் பொருளைப்பற்றிய விளக்கம் சரியாக இங்கு கொடுக்கப்படவில்லை. ஆண்டவரின் பிரசன்னம் வரைக்கும் காத்திருக்கும் பரிசுத்தவான்கள் மரியாமல் எடுத்துக்கொள்வார்கள் என்ற கருத்து இங்கு விவரிக்கப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் எங்கும் சொல்லப்படவில்லை. அப்போஸ்தலர்களின் விஷயத்தில், அவர்கள் மரித்தார்கள், ஆனால் மரித்த நேரத்திலிருந்து அவர்கள் உயிர்த்தெழுப்பப்படும் நொடிவரை நித்திரையில் இருப்பதாகக் கருதப்படுகிறது. "மரிப்பது" என்பது ஒரு நொடிப்பொழுதில் நடக்கக்கூடியது ஆனால் , " நித்திரை " என்பது உணர்வற்ற நிலையில் பல நூற்றாண்டுகளாக இருப்பது.

ஆகவே, புரிந்துகொள்வதற்காக இங்கு 'நித்திரை" என்ற வார்த்தை பவுலின் வசனத்தோடு இணைக்கப்படவேண்டும். அதாவது இயேசுவின் பிரசன்னம் வரைக்கும் மாம்சத்திலிருக்கும் தேவனுடைய ஜனங்கள் மரணத்தில் நித்திரையடைவதற்கு அவசியமில்லை. தேவன் அறிவித்தபடி சபை வகுப்பாரும் மரிப்பார்கள் - "நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள்". -(சங் 82:6,7) பொதுவாக உலகத்தார் பிரபுவாகிய ஆதாமைப் போல் மரிக்கிறார்கள். ஆனால் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்கள் இயேசுவாகிய பிரபுவோடு மரிக்கிறார்கள். (ஏசாயா 9:6, அப்போஸ்தலர் 3:15, 5:31) அவருடைய பலியின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, அவரோடு பலியின் மரணத்தில் மரிக்கிறார்கள். இரண்டாம் பிரபுவைப்போல அவர்கள் மரணத்தில் "விழுகிறார்கள்". "நாம் அவரோடுக்கூட மரித்தால், அவரோடுக்கூட உயிர்த்தெழுப்பப்படுவோம்." இங்கு அப்போஸ்தலனாகிய பவுல், மரணத்தை உணர்வற்ற நிலையாகக் குறிப்பிடுவதில்லை. மாறாக, மரிக்கும் அந்தக்ஷணமே அவர்களுக்குப் பரலோகவீட்டின் ஆவிக்குரிய மேனி கொடுக்கப்படும்.

இயேசுவின் பிரசன்னம் வரைக்கும் காத்திருக்கும், சபை வகுப்பார், மரித்த அந்த நொடிப்பொழுதில் மாற்றமடைவார்கள் (மறுரூபம்) என்பதை முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சபை வகுப்பார் அனைவருக்கும் மரணத்தின் அனுபவம் பொதுவானது. அதில் எந்த வித்தயாசமும் இல்லை. இயேசுவின் பிரசன்னத்திற்கு முன் மரித்தவர்களுக்கும், அதற்கு பின் மரிப்பவர்களுக்கும் ஒரேவிதமான அனுபவங்கள் நேரிடும். ஆனால் இயேசுவின் பிரசன்னத்திற்குப் பின் மரிப்பவர்கள் மரித்த நிலையில் விடப்படுவதில்லை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, "அவர்கள்

நித்திரையடைவதில்லை” என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். இதற்கு மற்றொரு கருத்தை நாம் சிந்திக்கையில், இயேசுவின் பிரசன்னத்திற்குப் பின் மரிப்பவர்கள் இராஜ்யம் வருவதற்கும் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அது முன்னதாகவே ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. இப்படியிருக்க, இயேசுவின் பிரசன்னத்திற்குப் பின் மாம்சத்தில் தேவனுக்குரிய வேலைகளைச் செய்து கொண்டிருப்பவர்கள், மரித்தவுடன் அதே காரியங்களைப் பூரணமடைந்த புது சிருஷடிகளாக, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஆவிக்குரிய நிலையில் தொடர்ந்து செய்வார்கள்.

“...இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை...”

புது சிருஷ்டிகளின் வல்லமை மற்றும் அம்சங்களைப் பொறுத்தவரையில், அதே மகிமை பெறுவார்களே தவிர அந்த மகிமையிலுள்ள நிலைகள் வேறுபடும் என்று அப்போஸ்தலர் இங்கு கூறுகிறார். ஆனாலும் அனைவரும் ஆவிக்குரிய மகிமையில் இருப்பார்கள். அதாவது, ஆவிக்குரிய நிலையை அடைபவர்களுக்குப் பொதுவான ஒரு மகிமை இருக்கும், அதேபோல் பூமிக்குரிய மேனியைப் பெறுபவர்களுக்கும் ஒரு பொதுவான மகிமை இருக்கும். அவரவர் தங்களுடைய பூரண நிலையில் மகிமையுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் பரலோகத்திற்குரியவர்களின் மகிமை எல்லாவற்றிற்கும் மேலானதாக இருக்கும். சபையைக் குறித்துச் சொல்லும்போது, அவர்கள் சூரியனைப் போலிருப்பார்கள் என்று வசனம் குறிப்பிடுகிறது. (மத் 13:43) கோதுமை வகுப்பாராக இருக்கும் அனைவரையும் நம்முடைய ஆண்டவர் வருங்காலத்தில் மகிமையடைவார்கள் என்று சொல்லியிருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் சபை வகுப்பார் ஒவ்வொருவரும் பெறப்போகிற மகிமைகளில் உள்ள வித்தியாசங்களைப்பற்றி தெளிவாகக் கூறுகிறார். ஆகவே சபை வகுப்பார் ஒவ்வொருவரின் நிலையும், மகிமையும் வேறுபடும். அனைவரும் பூரணமாக இருப்பார்கள். அனைவரும் திருப்தியடைவார்கள் ஆனால் சகலத்திற்கும் மேலான பிதாவாகிய தேவன், தனக்கு அடுத்தவராக சகலத்திற்கும் மேலானவராக குமாரனை உயர்த்தியிருக்கிறார். இவர்களின் மகிமை, கனம், மற்றும் அதிகாரத்தில் உள்ள வித்தியாசத்தை நாம் காணலாம். இதேபோல் ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள் மத்தியிலும் இத்தகைய வித்தியாசங்கள் இருக்கும். “சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது.” (1கொரி 15:41)

நம்முடைய ஆண்டவர் சொன்ன இரண்டு உவமைகளில், இந்த வித்தியாசத்தை அவர் உணர்த்துகிறார். பத்து ராத்தல் திரவியம் பெற்றவர்களில் ஒருவன் வந்து பத்து ராத்தல் ஆதாயம் கண்டேன் என்று சொன்னவுடன் அவனை பத்து பட்டணங்களுக்கு அதிகாரியாக்கினார். ஐந்து ராத்தல் ஆதாயம் தேடினவருக்கும் ஐந்து பட்டணங்களைக் கொடுத்தார். (லூக் 19:11-27) இப்படியாக அவனவன் கிரியைக்குத் தக்கதாக அதிகாரத்தையும், கனத்தையும் சேர்த்துக் கொடுப்பார்.

இதை குறித்து நாம் ஆச்சரியப்படவேண்டாம். ஆண்டவர் தேர்ந்தெடுத்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை அவர் நேசித்தாலும், அவர்களில் மூன்று பேரை அதிகமாக நேசித்தார். இந்த மூவரிடமும் அவர் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். அநேக முக்கியமான சந்தர்ப்பங்களில் அவர்கள் அவரோடே இருந்தார்கள். “ஜீவ புத்தகம்” திறக்கப்பட்டப்பின் நம்முடைய ஆண்டவர் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும்போது, அவருடைய வலது பக்கத்தில் அப்போஸ்தலனாகிய பவுலையும், இடது பக்கத்தில் யோவானையும் கண்டு நாம் ஆச்சரியப்படவேண்டாம். இது சிங்காசனத்தைக் குறித்தக்

காரியம் அல்ல, தேவனால் கையளிக்கப்படும் அதிகாரம் மற்றும் மகிமைக்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சிறு மந்தை வகுப்பார் தேவ ஆவியைப் பூரணமாகப் பெற்றதினால், ஒருவருக்கொருவர் மதிப்பு கொடுக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். நிச்சயமாக, அவர்களுக்குள் பொறாமை இராது. ஒவ்வொருவரும் பெறக்கூடிய மகிமைக்கு ஏதுவான தெய்வீக நியாயத்தீர்ப்பைப் புது சிருஷ்டிகள் முழுமையாக அங்கீகரிப்பார்கள். இக்காலத்திலும் இந்த காரியங்களை நாம் காணலாம். தேவன் அவர் விரும்பியபடி கிறிஸ்துவின் சரீரத்தில் ஒவ்வொருவரையும் அங்கமாக நியமித்திருக்கிறார். தேவனைத் தொடர்ந்து தேடும் அனைவரும் அவருடைய திட்டங்களை என்றுமே மாற்றுவதில்லை, மாறாக அதை புரிந்துகொண்டு, அதற்கு இசைவாக செயல்படுவார்கள். அதேபோல் வருங்காலத்திலும் நடக்கும்.

இக்கால நிலையையும், வருங்கால நிலையையும் குறித்த வித்தியாசங்களைப்பற்றி விவரிக்கும்போது, - “அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்.” வசனத்தில் “இது” என்ற வார்த்தை புது சிருஷ்டியை குறிப்பிடுகிறது. ஞானஸ்நானத்தின்போது இந்தப் புது சிருஷ்டி கருத்தரிக்கப்பட்டது. அது வளர்ச்சியடையும்போது மாம்சத்தை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, தெய்வீக சித்தத்தின் ஊழியக்காரனாக மாற்றியது. அதற்கு பின் அழிவுள்ள சரீரத்திலிருக்கும் புது சிருஷ்டி ஒரு புதிய சரீரத்திற்காகக் காத்திருக்கிறது. ஆகவே அழிவுள்ள சரீரத்தில் இருக்கும் புது சிருஷ்டி மரித்ததாகச் சொல்லப்பட்டாலும், சரீரம் மரித்தவுடன் அது மறுரூபமடைந்து, பரலோக வீட்டின் ஆவிக்குரிய மேனியை முதலாம் உயிர்த்தெழுதலில் பெற்றுக் கொள்கிறது.

உயிர்த்தெழுதலில் புது சிருஷ்டி பெறும் ஆவிக்குரிய மேனி அழியாதது என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். அது மரிக்காது. இதற்காகப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை - “அப்த்தாரிசியா”. இதற்கு இனி மரணம் இல்லை என்பது பொருளாகும். (அழியாமை, சாகாமை) 1 கொரி 50,53,54 ம் வசனங்களில் இதே வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ரோமர் 2:7 மற்றும் 2தீமோ 1:10ல் அதே கிரேக்க வார்த்தை (“அழியாமை”) பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய சரீரங்கள் அழிவைக் காண்பதில்லை என்ற காரியம் பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். ஏனெனில், இந்தக் குணாதிசயம் பிதாவாகிய யேகோவா தேவனுக்கு மட்டுமே உள்ளது என்று நாம் அறிந்ததே. மேலும் நம்முடைய ஆண்டவராம் இயேசு முடிவு பரியந்தம் தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டு, தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால் பிதாவாகிய தேவன் தம்மில்தாம் ஜீவனுடையவராக இருப்பதுபோல, இயேசுவும் தம்மில்தாம் ஜீவனுடையவரானார். சபைக்கு தலையானவர் திவ்விய சுபாவத்தில் பங்கடைவதற்கு, மகிமையால் முடிச்சூட்டப்பட்டு அழியாமையை சுதந்தரித்துக் கொண்டார். தேவன் நம்முடைய இரட்சகருக்கு இப்படிப்பட்டவைகளைத் தந்தது மிகவும் நியாயமானவைகள். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இவ்வனைத்தையும் பெற நம்முடைய இரட்சகர் மட்டுமே தகுதி பெற்றிருக்க, அவருடைய சரீர அங்கத்தினர்களுக்கும் தேவன் வாக்களித்திருக்கிறார் என்பதை நாம் நினைக்கும்போது மிகவும் திகைப்பாக இருக்கிறது. “சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.” (ரோம 2:7, 2பேது 1:4)

“கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் , மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும் , பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும் இங்கு மீண்டுமாக புது சிருஷ்டி “இது” என்று குறிப்பிடப்படுகிறது. இக்காலத்தில் இந்த உலகம் நம்மை அறியாது. நாம் பிதாவால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும், அவருடைய பிள்ளைகளாக இந்த மாம்ச சரீரத்தில் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பலியின் உடன்படிக்கையை நாம் விசுவாசத்தோடு நிறைவேற்றுவதற்காகவே, தற்காலிகமாக தரித்திருக்கிறோம் என்பதையும் உலகம் அறியாது. “இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்...” ஆனால் இதை உலகம் உணரவில்லை. நாம் தேவனோடு உடன்படிக்கை செய்திருப்பதால் நாம் இந்த உலக ஜனங்கள் மத்தியில் மேன்மையான பதவிகளை அடையமுடியாது. நாம் இவர்கள் மத்தியில் சராசரி மனிதர்களாக இருக்கிறோம். எந்தச் சூழ்நிலைகளிலும், தனிப்பட்ட நபர்களாகவும், பொதுவான சபையாக இருந்தாலும், நாம் துச்சமாக மதிக்கப்படுகிறோம் ( உலகம் நம்மை ஏற்றுகொள்ளாது ) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கருதுகிறார். ஆகவே நம்மை “அற்பமான சரீரம்” (பிலி 3:21) என்று குறிப்பிடுகிறார். ஆனால் வரக்கூடிய காலத்தில் நிலைமை என்னவாக மாறும்? இந்தச் சபை (தலை மற்றும் சரீரம்) தூதர்கள் மற்றும் மனிதர்களுக்கு முன்பாக கனம்பெறுவார்கள். புது சிருஷ்டிகள் மகிமையடைவார்கள். இதுவே நமக்களிக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம்.

“ பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும் , பலமுள்ளதாய் எழுந்திருக்கும் .” அழியக்கூடிய மாம்ச சரீரத்தில் இருக்கும் புது சிருஷ்டியை இங்கு “பலவீனமுள்ளதாய்” என்று குறிப்பிடப்படுகிறது. எல்லா புது சிருஷ்டிகளும், இந்த அபூரணமான, விழுந்துபோன மாம்சத்தில் வருத்தப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள் . தேவனிடத்தில் புதுசிருஷ்டிகளின் நோக்கங்கள், நேர்மையாகவும், பூரணமாகவும், உண்மையாகவும், உறுதியாகவும் இருக்கும் பட்சத்தில், இவைகளை புது சிருஷ்டிகளின் பலவீனங்களாகத் தேவன் கருதாமல், தம்முடைய மிகுந்த கிருபையினால், அவைகளை மன்னிக்கிறார். இவர்கள் பெறப்போகும் புதிதான சரீரங்களுக்கு இப்படிப்பட்ட பலவீனங்கள் ஒட்டிக்கொண்டிருக்காது என்பது குறிப்பிடத்தக்கது . ஆகவே - “ பலமுள்ளதாய் எழுந்திருக்கும்” என்ற வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய வல்லமையாகிய, புது சுபாவத்தின் வல்லமை அதாவது பூரணமான வல்லமை கொடுக்கப்படும்.

“ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும் இப்பொழுது புது சிருஷ்டி ஜென்மசரீரமாக இருக்கிறது. மாம்சத்திலிருந்து கொண்டுப் போராடுகிறது. தேவனுடைய சுத்தக் கிருபையினால் மட்டுமே, புது சிந்தையை அவர் புது சிருஷ்டியாகக் கருதுகிறார். குறித்தக்காலம் நிறைவேறும்போது, இந்தப் புது சிந்தைக்கு ஏற்ற ஒரு புது சரீரத்தை தேவன் கொடுப்பார். ஆகவே இப்பொழுது பெற்றிருக்கும் மாம்ச சரீரத்தைப் போலவே, புதிதான ஆவிக்குரிய சரீரத்தையும் புது சிருஷ்டி பெற்றுக்கொள்ளும். எப்படிப்பட்ட மகிமையான ஒரு திட்டம். உண்மையில், சராசரி மனிதனால் உணர்ந்துக் கொள்ளமுடியாத இந்த அனுபவத்தை, நாம் வசனத்தின் மூலம் நம்முடைய சிந்தையையும், வாக்குத்தத்தங்களையும், தேவனுடைய வெளிப்பாட்டையும் “இதுவரைக்கும் காணக்கூடாதவைகளையும்” உறுதியாக விசுவாசிக்கிறது.

ஒருவேளை, இனி வரக்கூடிய மகிமையின் சிந்தனைகள், நம்மை இந்த உலகத்தையும், அதின் காரியங்களையும், சோதனைகளையும், மூடத்தனங்களையும், சந்தோஷங்களையும் விட்டுப்பிரித்து, நம்முடைய ஆண்டவரின் பரிபூரணத்திலும்,

மகிமையிலும் பங்கெடுப்போம் என்ற காரியங்கள் எவ்வளவு உண்மையானது என்று நமக்கு விளங்கும். ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை - ஏனெனில் நம்முடைய ஆண்டவர் நிக்கொதேமைப் பார்த்து - “பூமிக்கடுத்தக் காரியங்களை நான் உங்களுக்கு சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே , பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்”? என்று கேட்டார். ஆகவே பரலோகக் காரியங்களைப்பற்றி புரிந்துகொள்வதற்கு நாம் முதலில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட வேண்டும். அதற்கு பின் கேள்விக்கு இடமில்லாமல், இந்த சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய ஓட்டத்திற்கான வாய்ப்பு நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. நாம் பெறும் தெய்வீக ஆலோசனைகள் மற்றும் உலகத்தை எந்த அளவிற்கு வெறுக்கிறோமோ, எந்த அளவிற்கு பாவமான பாரமான சகலத்தையும் தள்ளிவிடுகிறோமோ, எந்த அளவிற்கு சபைக்கூடுதலை அசட்டை செய்யாமல் இருக்கிறோமோ, எந்த அளவிற்கு அனுதினமும் வசனங்களைத் தேடி ஆராய்ந்துகொண்டிருக்கிறோமோ, அந்த அளவிற்கு நாம் இந்த உலகத்தின் ஆவியை மேற்கொண்டு, சாத்தானுடைய தந்திரங்களுக்கு நம்மைக் காத்துக்கொள்ள முடியும். ஆகவே நாம் அனுதினமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டக் காரியங்களை நாம் செய்வோமேயானால், நாம் நிச்சயமாக தோல்வியடை-வதில்லை, மாறாக, நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமான இயேசுவின் நித்திய இராஜ்யத்தில் சந்தோஷமாக அனுமதிக்கப்படுவோம். (1யோவ 3:2,3, ரோமர் 8:17, யோவ 3:12, 1கொரி 2:14, 1யோவான் 2:15, எபே 6:10-18, எபி 12:1-2,10:25, யோவ 5:29, அப் 17:11, 2பேது 1:4-11)

**R2642 –** “விசுவாசத்தின் முழு உறுதி” (23ம் கேள்வி காண்க)

“என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும், நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.” - சங் 23:6

சரியான நிலையில் இருக்கும் தேவ ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முழு நம்பிக்கையின் காப்புறுதியையும், விசுவாசத்தின் முழு காப்புறுதியையும் பற்றி பரிசுத்தவானாகிய பவுல் பேசுகிறார். (எபி 6:11,10:22) இதே கருத்தை தாவீது பக்தனும் வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் - “உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி...” (பிலி 1:5) இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருந்தாலும், வெகு சில கிறிஸ்தவர்கள் மட்டுமே, விசுவாசத்தை முழுமையாக நம்புகிறார்கள். “நாங்கள் தேவனை நேசிப்பதினால், தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின்படி நாங்கள் பரலோக இராஜ்யத்தில் மகிமையான நிலையை அடைவதற்கு தேவனுடைய சகலவிதமான நன்மைகளும், கிருபைகளும் எங்களைத் தொடரும் என்று சந்தேகத்திற்கு இடமின்றி தைரியமாக சிலர் மட்டுமே இப்படி சொல்லமுடிகிறது. இந்தச் சிலர் மட்டுமே மிகுந்த சந்தோஷத்துடன், ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட இருதயத்தை மற்றவர்களிடம் காணமுடிகிறதில்லை. இப்படிப்பட்ட இருதயத்தைப்பெற அவர்களைத் தடுப்பது எது? ஆகவே விசுவாசத்திற்குள் இளைப்பாறுகிறவர்களின் எண்ணிக்கை இவ்வளவு சிறிதாக இருப்பதன் காரணத்தை நாம் காணலாம். இவர்களின் தடுக்கல் அதாவது தடைகள் என்ன? இந்தத் தடைகள் எப்படி அகற்றப்படுவது?

இரண்டு விதமான தடைகள் உள்ளது -

(1) தேவனுடைய பக்கத்தில் இருக்கும் அநேகர் , அவரால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், சத்தியத்தின் அறிவை அதிகம் பெற்றவர்கள், இயேசுவின் ஈடுபலியின் மேல் விசுவாசம் வைத்தவர்கள், வருங்கால ஜீவியத்திற்கு பலியின் ஜீவியமே முக்கியம் என்று உணர்ந்தவர்கள், இப்படியாக நீதிமானாக்கப்பட்டவர்கள், அடுத்து தேவனுடைய குடும்பத்தில் அவருடைய பிள்ளையாகவும், கிறிஸ்துவின் உடன் சுதந்தரராகவும், அவருடைய வாக்குத்தத்தங்களுக்குப் பங்காளிகளாவதற்கான அடுத்த நிலையை அவர்கள் இன்னும் கடக்காமலிருக்கிறார்கள். நம்முடைய அர்ப்பணிப்புக்கான முழு நோக்கம் இதுவே. நம்முடைய விருப்பங்களையும், நோக்கங்களையும், எதிர்காலத்தைக் குறித்தக் கவலைகளையும், இலக்குகளையும், நம்முடைய நேரங்களையும், செல்வாக்குகளையும், நாம் பெற்ற யாவையும் முழுமையாக தேவனுக்கென்று கொடுத்துவிட்டு, அவரிடம் சரணடைய வேண்டும். இப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்காவிட்டால், நாம் இன்னும் கிறிஸ்துவின் சிலுவையை எடுத்து அவர்பின் செல்லவில்லை என்று பொருளாகும். இப்பெரும்பாலான கிறிஸ்தவர்கள், தேவனுடைய வாக்குத்தத்தங்களை இக்காலத்துக்குரியதா? அல்லது வருங்காலத்திற்குரியதா என்ற கேள்வியை எழுப்புகிறார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது. ஒரு கோணத்தில் பார்க்கும்போது சரியாகவும் தோன்றுகிறது. ஏனெனில், அவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து, தங்களுடைய சரீரங்களை தேவனுக்கு ஏற்ற பலிகளாக நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் மூலம் செலுத்தாவிட்டால், இந்தக் கேள்விக்கானப் பதிலை நிச்சயமாக அவர்களால் உணரமுடியாது.

இவர்கள் இனி ஒருபோதும் காலம் தாமதிக்கக்கூடாது என்று நாம் அவர்களுக்கு புத்திசொல்லுகிறோம். சர்வவல்லமையுள்ள தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த மிகப்பெரிய வாய்ப்பை அவர்கள் நழுவ விடக்கூடாது. இனி மேலும் அவர்கள் அதே நிலையில் நின்றுவிட்டு, தேவனுடைய கிருபைகளைப் பயன்படுத்த தவறிவிட்டால் இதுவரைக்கும் நாம் பெற்ற தேவனுடைய சகல காரியமும் வீணாய்போய்விடும். (2கொரி 6:1) இயேசு கிறிஸ்துவின் மீட்பின் அறிவைப் பெற்ற யாவரும், பாவ மன்னிப்பைப் பெறவும், விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக்கப்படவும், தேவனுடைய கிருபை இலவசமாகப் பொழியப்படுகிறது. நாம் செலுத்தக்கூடிய ஜீவ பலிகள், கிறஸ்துவின் பலியின் மூலம் தேவனுடைய பார்வையில், அவருடைய பலிபீடத்தின் மேல் அங்கீகரிக்கப்படுவதற்காகவே இப்படிப்பட்ட இலவசமான கிருபை கொடுக்கப்படுகிறது. தேவன் கொடுக்கும் கிருபைக்கு ஒரே நோக்கம் இதுவே.

ஆகவே யாதொருவர் இவைகளை உணர்ந்து, வாய்ப்புகளை அறிந்தும், தான் பெற்றிருக்கும் மிகச்சிறிய பங்கை அர்ப்பணிக்க மறுக்கிறார்களோ! அவர்கள் கிறிஸ்துவின் அன்பைப் பெறாதபடிக்கு தங்களை கட்டுப்படுத்திக் கொண்டு, தங்கள் மேல் பொழியப்படும் கிருபையையும், இரக்கத்தையும் உணர மறுக்கிறார்கள். தாங்கள் பெற்ற வாய்ப்புகளைப் புறக்கணிக்கும் இவர்கள், தங்களுடைய அபூரணமானப் பலிகளைச் செலுத்தத்தவறிய இவர்கள், இயேசுவின் இராஜ்யத்தில் அதற்கு அதிகமான நஷ்டத்தை அடைவார்கள். இவர்கள் தேவனுடைய கிருபையை வீணிலே வழங்கி, எந்த நன்மையையும் பெறாமல், எல்லாவற்றிற்கும் மேல் இருளில் இருக்கும் உலகக் காரியங்களில் மூழ்கிவிடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் என்ன செய்யவேண்டும்? உடனடியாக, தங்களை தேவனுடைய பணியில் அர்ப்பணிக்கவேண்டும். காரியம் சிறிதாக இருந்தாலும் சரி, பெரியதாக இருந்தாலும் சரி. ஆனால் இக்காலத்தில் எந்தவிதமான நன்மைகளும் பெறாவிட்டாலும்,

அவர்கள் பெற்றக் கிருபையை அவர்களின் கிரியைகளினால் எப்படியாவது வெளிப்படுத்த வேண்டும். நாம் பெறும் சிறுசிறு தெய்வீகக் கிருபைகளையும் நாம் புரிந்துகொண்டு போராடவேண்டும். ஆனால் பலவீனமான சிந்தை, நியாயத்தீர்ப்புகள் நம்மை மீண்டும் இந்த உலகக் காரியங்களில் இழுத்து விடாதபடிக்கு எச்சரிப்போடிருக்கவேண்டும். ஏனெனில், விழுந்துபோன சிந்தையானது சகலத்தையும் சீர்தூக்கிப்பார்க்க மறுக்கும். நாம் உபத்திரவப்படவேண்டியது இன்னும் கொஞ்சம் காலம் தான், ஆனால் நம்முடைய ஆண்டவரோடு, அனுபவிக்கப் போகிற நித்திய சந்தோஷத்திற்கும், ஆசீர்வாதங்களுக்கும், மகிமைக்கும் அளவே இல்லை.

அடுத்து, உண்மையில் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்கள், முழுமையாக இக்காலத்தில் பெற்றிருக்கும் ஆவிக்குரிய ஐஃவியத்தில் முழுமையாக மகிழ்ச்சியடைவார்கள். உண்மையில் இந்த உலகம் கொடுக்க முடியாததும், எடுக்கமுடியாததுமான தெய்வீக சமாதானத்தை அவர்களின் உள்ளம் பெற்றிருக்கும். இந்த முழு உலகம் தேடியும், தவித்தும் பெறமுடியாததை, தேவனிடம் தங்களை முழுமையாக அர்ப்பணித்து அவருடைய ஜனங்கள் பெற்றுக்கொள்கிறார்கள். ஆகவே நிர்விசாரமானவர்களைத் தேவனோடு அவர்களின் உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்ள நாங்கள் வேண்டுகிறோம். இதுவே தேவனுடைய சுதந்தரத்திற்கு அவர்களைப் பங்காளிகளாக ஆக்கமுடியும். ஆகவே அவர்கள் “விசுவாசத்தின் முழு காப்புறுதியின்” மற்றும் “தேவனுடைய கிருபை, நன்மை இந்தக் காலத்திலும், வருங்காலத்திலும் அவர்களை பின் தொடர்ந்து, பரலோக வீட்டில் நித்தியமாக பிரவேசிப்போம் என்ற முழு நம்பிக்கையின்” அஸ்திபாரத்தை அடித்தளமிட்டு, அதற்குள் பிரவேசிக்க வேண்டும்.

(2) உண்மையான கிறிஸ்தவர்கள் மத்தியில், தங்களை முழுமையாக ஜீவபலியாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தவர்களில் அநேகர் - “தேவனுடைய நன்மைகளையும் கிருபைகளையும் இப்போதே நாங்கள் உணருகிறோம். இவைகள் எங்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து எங்களை நடத்தும். நாம் நித்தியமான தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்போம். ஆகவே எங்களிடம் முழுமையான நம்பிக்கையும், விசுவாசத்தின் உறுதியும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். நாங்கள் கர்த்தரை ஏற்றுக்கொண்டோம், ஆவருடைய கிருபையினால் நாங்கள் அனைத்தையும் மேற்கொள்ளுவோம்” என்று தைரியமாக கூறுகிறார்கள். ஆனால் இந்த வகுப்பாரின் குறை என்ன? இவர்கள் தேவன் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தில் சற்று குறைவு படுகிறார்கள். “விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாதக் காரியம், “நம்முடைய விசுவாசம் உலகத்தை ஜெயிக்கும் ஜெயமாக இருக்கவேண்டும்” விசுவாசத்தின் கேடயத்தைப் பிடித்திராதவர்கள் சாத்தானை எதிர்க்கமுடியாது. (எபி 11:6, 1யோவ 5:6)

நம்முடைய விசுவாசத்தின் குறைச்சலை மேற்கொள்வதற்கும், விசுவாசத்தை அதிகரிப்பதற்கும் நாம் என்னசெய்யவேண்டும்? “ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை அதிகரித்தருளும்” என்று நாம் அப்போஸ்தலரைப்போல் ஜெபித்து விட்டு, அதற்கு இசைவான கிரியைகளை நடப்பித்து, நம்முடைய இருதயத்தில் விசுவாசத்தை வளர்க்கவேண்டும்.

(a) தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய நினைவில் ஓயாமல் சிந்தித்து, தேவனுடைய வார்த்தைகளில் பரிட்சயமாக இருக்கவேண்டும்.

(**b**) நாம் தேவனோடு செய்த உடன்படிக்கையைத் தொடர்ந்து நினைவில் கொள்வதற்கு நம்முடைய இருதயத்திலும், உதடுகளிலும், அறிக்கையிட்டு அவருக்கு நன்றிகளை ஏறெடுக்க வேண்டும். நம்முடைய சிந்தையிலும், சகோதரர்களோடு சம்பாஷிக்கும் போதும் பரிசுத்தமான சிந்தைகளோடு அவைகளைப் பகிர்ந்துக்கொள்ள வேண்டும்.

**R2005 col. 2 – R2006 col.1** (24ம் கேள்வியை காண்க)

நாம் எதிர்பார்க்காத காரியங்களுக்காக "வீணான காரியங்களைத் திரும்பத்திரும்ப" நம்முடைய ஜெபங்களில் ஏறெடுப்பதற்கு அவசியமில்லை. ஆகவே நாம் "எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டும்" (யாக் 1:6) மேலும், எவைகளை கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், ஏனெனில் "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" -(மாற் 11:24, ரோம 14:23)

ஆகவே தேவனுடைய பிள்ளைகள் தந்தையின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் மாணவர்களாக இருக்கவேண்டும். நாம் பெற்றுக்கொள்ள வேண்டியதை அவரிடம் கேட்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதனால் அவரின் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. ஆனாலும் அவர் நமக்கு மனப்பூர்வமாகக் கொடுக்கும் காரியங்களை மட்டுமே நாம் கேட்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இவைகளை நாம் முழு விசுவாசத்தோடே கேட்கவேண்டும்.

நிச்சயமாக, இத்தகைய ஜெபங்களில் தேவன் நம்முடைய இருதயத்தின் விசுவாசத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு எந்த சந்தேகமும் இல்லை. "விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாதக் காரியம்" என்று வாசிக்கிறோம். "நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசமே இந்த உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" என்றும் வாசிக்கிறோம். ஆகவே விசுவாசத்தை வளர்த்துக் கொண்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை ஜெபத்தில் வேண்டுபவர்கள் நிச்சயமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பில் அவைகளைப் பெற்றுக் கொள்வார்கள். அப்போஸ்தலர்கள் மத்தியில் இருந்ததுப்போல் இந்நாளிலும், நம்மத்தியில் - "ஆண்டவரே, எங்களுடைய விசுவாசத்தை அதிகரித்தருளும்" என்ற ஜெபம் காணப்படவேண்டும். அவிசுவாசமானக் காரியங்களில் நாம் விழுந்துவிடாதபடிக்கு, முடிவு பரியந்தம் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்க மேலும் நாம் ஜெபிக்க வேண்டும்.

உண்மையான விசுவாசம் எதையும் எளிதில் நம்பாது. நன்மையான, தக்க ஆதாரங்கள் இருந்தால் மட்டுமே நம்பும். தேவனுடைய வார்த்தைகளுக்கும், மனுஷனுடைய ஞானத்திற்கும் உள்ள விசுவாசத்தை மிகத் தெளிவாக சீர்தூக்கிப் பார்க்கும். ஆனால் தேவனுடைய வார்த்தைகளைக் கண்டுபிடித்தால், அவர் என்றுமே பொய்யுரையாதவர் என்றும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார் என்றும் அறிந்ததினால், நிச்சயமாக அதில் நம்பிக்கை வைக்கும்.

அதற்கு பின் உண்மையான விசுவாசம், ஆண்டவரின் வார்த்தைகளுக்குக் கவனம் செலுத்தி, அவனுடைய அஸ்திபாரத்தைப் பெலப்படுத்தும். அதற்கு அவருடைய வார்த்தைகளுக்குத் தகுந்தபடி நம்பிக்கையான பதில்வர, பொறுமையோடு, ஜெபத்தில் காத்திருக்க வேண்டும். "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள், மேலும் "நீங்கள்

பெற்றுக்கொள்வீர்கள்" என்று விசுவாசியுங்கள். இவைகளைச் சொல்லி முடித்தப்பின் நம்முடைய ஆண்டவர் ஓர் அநீதியான நியாயாதிபதியினிடத்தில் ஓயாமல் தொந்தரவு செய்த ஒரு விதவைக்கு பதில் அளிக்கப்பட்ட ஓர் உவமையைச் சொன்னார். இப்படியிருக்க நீதியுள்ள நியாயாதிபதியான தேவன் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விண்ணப்பத்தைக் கேட்காமல் இருப்பாரோ. நீண்ட காலமாக தேவன் பழிவாங்குவதற்காகக் காத்திருந்தாலும் அவர் "குறித்த காலம்" வரைக்கும் காத்திருக்கவேண்டும். ஆகவே "சோர்ந்துப் போகாமல் தொடர்ந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற காரியத்தை உறுதிபடுத்த அந்த உவமையைச் சொன்னார். (லூக் 18:1)

நம்முடைய சராசரி விருப்பங்களுக்காக நாம் விசுவாசத்தோடு, விடாமுயற்சியோடு ஜெபிக்கையில், வசனங்களிலிருந்து, நமக்கு தேவையானக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் சிறுபிள்ளைகள் போல, மேலிருந்து வரும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிபவர்களாகக் காணப்பட வேண்டும். ஆகவே - "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை, கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீகள்." - (யோவ 16:24) என்ற வசனத்தை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தாங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காகவும், விசுவாசத்தின் வளர்ச்சிக்காகவும் ஜெபிப்பவர்களுக்கு மிகுதியான ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் தேவன் தன் வசத்தில் வைத்திருக்கிறார்.

உண்மையில், சில நேர்மையானதும், ஏற்றதுமான காரியங்களுக்காக ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களுக்கான பதில் நீண்ட காலம் தாமதிக்கலாம். எடுத்துக்காட்டாக - "உம்முடைய இராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல இப்பூமியிலும் செய்யப்படுவதாக" என்று பதினெட்டு நூற்றாண்டுகளாக சபை ஜெபித்துக் கொண்டிருந்தாலும், அதற்கான பதில் இன்னும் வழங்கப்படவில்லை. இத்தனை காலங்களாக ஜெபித்தும் அதை மிகுந்த ஆர்வத்தோடு எதிர்பார்த்தும், அந்த இராஜ்யத்தை கண்ணினால் காணாமல் அதற்காக ஜெபித்துக் கொண்டிருக்கும் சபை ஜனங்களின் விசுவாசத்திற்கு ஏற்றவாறு இக்காலத்தில் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். எப்படியாயினும், நம்முடைய அன்றாட உணவு, தற்காலிகமான தேவைகள், தீமையிலிருந்து விடுதலை இன்னும் பலகாரியங்களுக்காகச் செய்யப்படும் ஜெபங்களுக்கு உடனடியாக பதில் அளிக்கப்படுகிறது.

இந்த காரியங்களை பார்க்கும்போது, ஜெபத்தின் உரிமையையும் மற்றும் தேவனுடைய மற்ற கிருபைகளையும், சுயநலமான நோக்கங்களுக்காக தேவன் என்றுமே பதில் அளிப்பதில்லை என்று தெளிவாக தெரிகிறது. நேர்மையாக ஒருவரால் கேட்கப்படும் காரியம் மற்றவருக்கும் வேறொரு கோணத்தில் அதே காரியம் தவறாகத் தோன்றலாம். நாம் சதோதரர்கள் மத்தியில் மகிமை அல்லது மேன்மை அடைவதற்காக தன்னில்தான் நன்மையானக் காரியங்களைத் தவறான நோக்குடன் விரும்பி கேட்பதும் ஒரு தவறான விண்ணப்பமாகும்.

இயல்பாக, நன்மையானக் காரியங்களுக்காகவும், நம்முடைய சௌகரியத்திற்காகவும் நம்முடைய விருப்பங்கள் அதிகரிப்பது ஒரு சுயநலமான நோக்கமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களைக் குறித்து - "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக் 4:3) என்று யாக்கோபு குறிப்பிடுகிறார்.

நாம் சோதிப்பதற்காக சில நன்மையானக் காரியங்களை ஜெபத்தில் கேட்பதும், அதன் மூலமாக நாம் விசுவாசத்தை ஸ்தாபிப்பதும், ஒரு தவறான செயலாகும். ஆனால் முழுமையான விசுவாசமுள்ளவர்கள் கேட்கும் அனைத்துக் காரியங்களும் கொடுக்கப்படும் என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருக்கிறார். ஆகவே தேவனால் அங்கீகரிக்கப்படாதவைகளுக்காக நாம் விண்ணப்பிக்கக்கூடாது. ஆனால் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரும்போது, நாம் ஆவிக்குரிய நன்மைகளுக்காக மட்டுமே பிதாவின் சித்தத்தின்படி விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு பின் தேவன் நமக்கு இயற்கையாகவே கொடுக்கக்கூடிய பதில்களுக்காகக் காத்திருக்க வேண்டும். மாறாக எவ்விதமான அற்புதங்களினால் அவர் நமக்கு பதில் அளிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஏனெனில், இயற்கையான வழிகள் நம்முடைய தேவைகளுக்குக் குறைவாக இருக்கும் பட்சத்தில் தேவன் இயற்கைக்கு மேற்பட்ட வழிகளைத் தேர்வு செய்வார்.

மேலும், விசேஷமாகப் பரிசுத்த ஆவியின் கிருபைகளுக்காக நீங்கள் தேவனிடத்தில் தாராளமாக விண்ணப்பிக்கலாம் என்று வெளிப்படையாக நமக்கு சொல்லப்படுகிறது. “பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா”. -(லூக் 11:13) என்றார். “நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.” - யாக் 4:2

கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய வார்த்தைகளிலும், நடந்து, அவைகளைத் தேடி, வாஞ்சிப்பவர்களுக்குக் கொடுக்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் தெய்வீகக் கிருபைகளை அநேகர் பயன்படுத்தாமல் விட்டுவிடுவதே அவர்களுக்குப் பாதகமாகி-விடுகிறது. ஜெபங்கள் என்றுமே சுயநலம் அற்றதாக இருக்கவேண்டும் என்று நமக்குச் சொல்லப்பட்டாலும், தேவனுடைய வார்த்தைகள் மற்றும் அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்பதற்கு முழு சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வெற்றி வாக்களிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் வரும் விசுவாசம் மற்றும் நீடிய பொறுமைக்கானச் சோதனைகளும், நம்முடைய ஜெபங்களுக்கான ஏற்றச் சூழ்நிலைகளாக இருக்கிறது. வெற்றிபெறுவதற்கு அடையும் ஒவ்வொரு தோல்வியும் பாவமன்னிப்புக்-காகவும், நம்முடைய பலவீனங்களைப் பலப்படுத்தும் தெய்வீக ஆசீர்வாதங்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்கான வாய்ப்பாக இருக்கிறது. ஏனெனில், அதற்கு பின் வரும் அதேபோன்ற சோதனைகளை எதிர்நோக்குவதற்கு நாம் உடனடியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட “கிருபாசனத்தண்டையில்” சேருவோம். நாம் மேட்டிமையான சிந்தையில் உயர்வாக நம்மை எண்ணாதபடிக்கும் தன்னிச்சையாகப் பெறப்பட்ட ஒவ்வொரு வெற்றிக்கும் நம்முடைய ஜெபமே காரணமாக இருக்கிறது. ஆகவே நாம் மனத்-தாழ்மையோடு எதிராளியான பிசாசானவனிடமிருந்துவரும் அடுத்த தாக்குதலைக் கவனத்தோட சந்திக்க வேண்டும். சத்தியத்திற்காக நடப்பிக்கப்படும் ஒவ்வொரு ஊழியமும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கும் ஜெபங்களுக்காகவும், மகா இராஜாவை சேவிப்பதற்கான வாய்ப்பாகவும், மேலும் இனி ஊழியம் செய்வதற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளுக்கானத் தேவைகளையும், கிருபைகளையும் ஞானமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையாகவும் இருக்கிறது.

நீங்கள் மேற்கொள்ளத்தக்கதான சோதனைகளைச் சந்திக்கும் போது, அவைகள் உங்களுக்குள் இருக்கும் பொறுமை, அனுபவங்கள், சகோதர சிநேகம், இரக்கம், அன்பு, சந்தோஷம் என்ற நல்லகுணங்கள் வளர்ச்சியடையும்போது நீங்கள் நன்றியுள்ள ஜெபங்களை ஏறெடுத்து, தெய்வீகக் கிருபைக்காகவும் உதவிகளுக்காகவும் காத்திருக்கலாம். ஒரு வேளை உங்களை நசுக்கிப் போடும் அளவிற்கு நீங்கள் சந்திக்கும் சோதனையைத் தாங்க முடியாததாக இருக்கும் பட்சத்தில், உங்கள் சுமைகளைச் சுமக்கிறவரிடம் கொண்டு செல்லுங்கள். உங்களுக்கு, இந்தச் சுமையை நன்மைக்கு ஏதுவாக சுமப்பதற்கும் உதவியைக் கேளுங்கள், உங்களுக்குத் தீமையை விளைவிக்கும் எல்லாக்காரியத்திலிருந்தும் விடுதலைப்பெறுங்கள். நம்முடைய இருதயம் தேவனுடைய வார்த்தைகளைக் கீழ்ப்படிவதற்கு முழு விருப்பமுள்ளதாக இருந்து, சபைக்கூடுதலை விட்டுவிடாமல் இருக்கும் பட்சத்தில், காரணமில்லாமல் உங்கள் வழிகளில் தடைகள் ஏற்பட்டு, அதற்காக நீங்கள் முயற்சிகள் எடுத்து தோல்வியடைந்தால், நிச்சயமாக அந்தக் காரியத்தை நாம் ஜெபத்தின் மூலம் தேவனிடத்தில் எடுத்து செல்லலாம். அதற்கு பின் அவருக்காகப் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அப்போது வெகு சீக்கிரத்தில், உங்கள் சார்பில் தெய்வீக வல்லமை வெளிப்படுதை நீங்கள் காணலாம். உண்மையான ஒரு சகோதரனை அல்லது கிறிஸ்துவுக்குள் ஒரு சிறப்பான போர்வீரனை சோதனைக்கு உட்பட்டவராக நீங்கள் காணும்போது, கிறிஸ்துவுக்குள்ளாக உங்கள் சகோதரருக்கான அன்பு உங்கள் இருதயம் முழுவதையும் நிரப்பி, அவரை அந்த சோதனையிலிருந்து காப்பாற்றுவதற்கு விரைந்தோடவேண்டும். அதற்கு மேலாக, அவர் முழுமையாக மீட்பை பெறும்வரைக்கும் கிருபாசனத்தண்டையில் சேர்ந்து இடைவிடாமல் அவருக்காக ஜெபிக்க வேண்டும். நீங்கள் நன்மையடையும்படியாக அவருக்காக நீங்கள் செய்யும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உங்கள் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்படும். வரக்கூடிய காலத்தின் மிகுந்த சந்தோஷமான நற்செய்தியை அறிவிப்பதற்கானப் பக்திவைராக்கியம் உங்களுக்குள் கொழுந்து விட்டு எரியாமற்போனால், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை அஸ்தமித்துவிடும். ஆனால் நீங்கள் சுவிசேஷத்தை நேசித்து, வைராக்கியத்தை வெளிப்படுத்துவதில் சற்று குறைவுள்ளவர்களாக இருந்தால், அதற்காக தேவனிடத்தில் ஜெபியுங்கள், தேவன் உங்கள் தாலந்துகளைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ள அவர் உங்களுக்கு உதவிசெய்வார். உங்களுக்கு வாய்ப்புகள் குறைவாகக் கிடைத்தாலும், அவரிடத்தில் ஜெபியுங்கள் அதற்கு பின் உங்களுக்குக் கிடைத்திருக்கும் சின்னச்சின்ன வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதற்கு பின் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்-கிறீர்கள் என்று ஆண்டவரிடம் கூறலாம். அதற்கு பின் அவர் உங்களுக்காக ஏற்படுத்தித் தரும் வாய்ப்புகளுக்காக காத்திருங்கள். அதுவரைக்கும் உங்கள் கைகளுக்கு நேரிட்டதை முழு பெலத்தோடு செய்து கொண்டிருங்கள்.

வாக்குவாதங்களுக்குரிய பிரச்சனைகளில் நீங்கள் அகப்படும்போது, அல்லது உங்களுக்கு இருக்கக்கூடிய தவறான பழக்கவழக்கங்களால் உங்கள் குடும்பத்திலும், விசுவாச வீட்டார் மத்தியில் குழப்பங்கள் ஏற்படும்போது , இவைகளை மேற்கொள்வதற்காக, தேவனிடத்தில் கெஞ்சி மன்றாடுங்கள். இதற்கு இடைப்பட்ட காலத்தில் உங்கள் ஜெபங்களுக்கு இசைவாக, முழு பலத்தோடே அந்த பலவீனங்களை விட்டு விலக முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருப்பதினால், தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சிக்கும்போது தோல்வியடைகிறீர்களா? தேவனிடத்தில் ஜெபத்தில்

ஏறெடுங்கள். “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.” (யாக் 1:5) என்ற வாக்குத்தத்தத்தை நினைவுக்கூர்ந்து ஜெபியுங்கள்.

உங்கள் இரக்ககுணத்தினால் அல்லது மற்றவர்களுடைய வஞ்சகத்தினால் உங்கள் வணிகத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டு விட்டதா? இவைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியைத் தடுக்கிறதா? தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சென்று நம்முடைய ஜெபத்தில் ஏறெடுப்பதே இதற்குத் தீர்வைக் கொண்டுவரும். இந்தப் பிரச்சனைகளிலிருந்து விடுபட உங்களுக்கு அனுபவங்கள் இருந்தாலும், நீங்கள் தேவனிடத்தில் இதற்கான வழிமுறைகளைப்பற்றி விசாரிப்பது மிகவும் ஏற்றதாக இருக்கும். உங்களுடைய ஞானம், திறமை மற்றும் சாமர்த்தியத்தைக் காட்டிலும் தேவனுடைய ஞானம் உங்களை வழிநடத்தும்போது, தேவனுடைய அற்புதமான செயல்கள் உங்கள் பிரச்சனைகளுக்கு சிறப்பாக பதில் தரும்.

--------------------------